www.padippakam.com

மாணவர் - இளைஞர்

# முன்னோடி

9 – 5

மே - ஜூன்

1996

நன்கொடை ரூ.5/–

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) மக்கள் யுத்தத்தின்

## அனைத்திந்திய சிறப்பு மாநாடு:

இந்திய புதிய சனநாயகப் புரட்சியில் ஒரு வரலாற்றுத் திருப்புமுனை!




## "இழப்பதற்கு ஒன்றுமில்லை அடிமைச்சங்கிலியைத் தவிர அடைவதற்கோர் பொன்னுலகம் இருக்கிறது" – மார்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

# போர் முழக்கமிடும் பிரெஞ்சுத் தொழிலாளர்கள்




சென்ற ஆண்டு அக்டோபர் – டிசம்பர் மாதங்களில் பிரான்சில் லட்சக்கணக்கான பொதுத் துறைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டு நாட்டையே ஸ்தம்பிக்க வைத்தனர். போக்குவரத்து, தபால்–தந்தி, சுகாதாரம், மின்சாரம், வங்கி ஆகிய துறைகளின் தொழிலாளி களுடன் மருத்துவர்கள், ஆசிரியர் கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகியோரும் களத்தில் குதித்தனர். மேலும், அவர்களோடு மாணவர் களும் இப்போராட்டத்தில் முழு வீச்சுடன் இறங்கினர். இதே போன்ற நாடு தழுவிய மாபெரும் போராட் டத்தை பிரெஞ்சு மக்கள் 1968–ல் உலகமே பேசக் கூடிய அளவில் நடத்தினர். அந்த ஆண்டு மீண்டும் வந்துவிட்டதோ என நினைவு கூறும் வகையில் இப்போராட்டம் நடை பெற்றது.

ஒரு ஆண்டிற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் குடியரசுத் தலைவர் சிராக் மற்றும் பிரதமர் ஜுப்பே வெற்றி பெற்று பதவிக்கு வந்தனர். வேலையின்மையை ஒழிக்கப் போவதாகவும் சமூக நலத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப் போவதாகவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்தபின், ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் தங்கள் வழக்கம் போலவே நடந்து கொள்ள ஆரம்பித்தனர். விளைவு – நாடெங்கும் போராட்டங்கள்.

அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஏகாதிபத்தியங் களின் போட்டியைச் சமாளிக்க ஐரோப்பிய ஏகாதி பத்தியவாதிகள் ஐரோப்பிய ஒன்றியத்தை அமைக்க முற்படுகிறார்கள். 1999–ஆம் ஆண்டிற்குள் அதை அமைத்து விட வேண்டும் எனவும் முயற்சிக்கின்றனர். ஐரோப்பிய நாடுகள் அதில் இணைய வேண்டுமானால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீத அளவை தாண்டாத நிலையில் மட்டும் பட்ஜெட் பற்றாக்குறை இருக்க வேண்டும் என்பதே வரையறையாக வைக்கப் பட்டுள்ளது.

அதில் இணையத் துடிக்கும் பிரெஞ்சு ஏகாதி பத்தியவாதிகளோ கடும்பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர். அதிலிருந்து தப்பிக்க பிரெஞ்சு மக்களை பலிகடா ஆக்குகின்றனர். அதன் ஒரு பகுதியாக, சமூக நலத் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்தல், பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கல் என்ற முடிவுகளை அரசாங்கம் எடுத்தது.

நடைமுறையில் உள்ள 37.5 ஆண்டுகளுக்கு மாறாக, 40 ஆண்டுகள் பணிபுரிந்தால் மட்டுமே முழு ஒய்வூதியம், குழந்தை நலத் திட்டத்தின் மீது வரி, சுகாதாரத்திற்கு நிதி குறைப்பு, நலத்திட்ட வரி என்ற பெயரில் வருவாயில் 0.5 சதவீத வரி மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்றல் முதலியவை மூலம் கிடைக்கும் நிதியில் பட்ஜெட் பற்றாக்குறையை சரிகட்ட திட்டமிட்டது.

ஏற்கனவே, பிரான்சு நாட்டில் வேலையின்மை கடுமையாக நிலவுகிறது. பகுதி நேர வேலையிலுள்ள வர்கள், தகுதியை விட குறைவான வேலையிலுள்ள வர்கள் மற்றும் அதிகரித்து வரும் வேலை பளுவால் வேலையை விட்டு விலகுபவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை வேலையில்லாதோரின் பட்டியலில் அடங்காது. மேலும், அந்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களில்தான் அதிக தொழிலாளிகள் பணி புரிகின்றனர். எனவே, பொதுத்துறையின் தனியார் மயமாக்கலினால், பெருவாரியான பிரஞ்சு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய மோசமான சூழலில், அரசின் அறிவிப்புகள் தங்கள் தலையின் மேல் விழுந்த இடிபோல் தொழிலாளிகள் உணர்ந்தனர்.

இதனால், சென்ற அக்டோபரில், பொதுத்துறை ஊழியர்கள், தனியார் மயமாக்கல் மற்றும் ஊதிய வெட்டு ஆகியவற்றை எதிர்த்து மிகப் பெரிய வேலைநிறுத்தம் செய்தனர்.

– தொடர்ச்சி 8 ஆம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமே
வாழ்வின் விதி!



மாணவர் - இளைஞர்
**முன்னோடி**
முற்போக்கு மாணவர்
இளைஞர் இதழ்

மே - ஜூன்
1996

ஆசிரியர்
மற்றும்
வெளியீட்டாளர்
**பாஸ்கர்**

33/6 இராணி அண்ணா நகர்
கே.கே. நகர்,
சென்னை - 78.

# நடந்து முடிந்த 11 - வது பொதுக் (தேர்தல்) கூத்து!

இந்திய சனநாயகத்தின் 11வது பொதுத் தேர்தல் கூத்து முடிந்துவிட்டது. கூத்துக்கு ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே அனைத்து ஓட்டுக்கட்சிகளும் கூட்டணி பேரம் பேசத்துவங்கிவிட்டன. காங்கிரசு, பா.ஜ.க., ஜனதாதளம் ஆகிய தேசிய (?) கட்சிகள், (ஜெயலலிதா வரையறையற்ற ஊழல் வேட்டை மூலம் குவித்த கோடிகளைக் கண்டு எச்சில் ஒழுக) அ.தி.மு.கவுடன் அணிசேர துடித்தன. ஜெயலலிதாவோ தனக்கே உரிய பாணியில் அனைவரையும் தன் பின்னால் அலையச் செய்தார். கடைசியில், ஜெயலலிதாவால் 'செயலற்ற பிரதமர்' என அழைக்கப்பட்டாலும், மனம் நோகாமல் தன் மானத்தை உலக வங்கியிடம் அடகுவைத்து விட்டு, அ.தி.மு. கவுடன் கூட்டு வைத்துக் கொண்டார் நரசிம்மராவ்.

கருணாநிதி, ஜனதாதளத்தின் சந்தர்ப்பவாதத்தால் மனமுடைந்து தனது பழைய பங்காளியான காங்சிரசுக்கு தூது விட்டார். இடை யே சிறிது காலம் 7கட்சி கூட்டணி என்ற பெயரில் வாழப்பாடி, ராமதாஸ் முதுகுகளில் சவாரி செய்தார். இறுதியில் அவரால் 'பண்ணையார்' என அழைக்கப்பட்ட மூப்பனாரின் கடைக்கண் பார்வை கிடைத்ததால் கருணாநிதியின் இலட்சியக் கனவு ஈடேறியது. நேற்றைய பண்ணையார் இன்று ஏழைபங்காளனானார். தமிழினப் போராளியையும், காவிரி கதாநாயக னையும் வீதியில் விட்டு விட்டு, மூப்பனாரோடு கைகோர்த்துக் கொண்டார். தென்மாவட்ட வீதி களெங்கும் தாழ்த்தப்பட்டோரின் குருதி வழிந்தோடிய போது, நாடு முழுவதும் இசுலாமியர் இந்துமத வெறியர்களால் வேட்டையாடப்பட்டபோது இமயமலை சென்று தவம் செய்து விட்டு திடீரென்று ஞானம் பிறந்து ஜெயலலிதாவை வீட்டுக்கு அனுப்புவதே தனது பணி என பறைசாற்றிக் கொண்டு சு. சாமிக்கு அசிஸ்டெண்ட் ஆக வந்த 'சூப்பர்ஸ்டாரையும்' அரவணைத்துக் கொண்டார். கோபால் சாமியோ (போலி) மார்க்சிஸ்டுகளுக்காக ஈழ ஆதரவையும், மார்க்சிஸ்டுகளோ கோபால் சாமிக்காக மார்க்சியத்தையும் விட்டுக் கொடுத்து 'இலட்சியக் கூட்டணி' அமைத்துக் கொண்டனர். கருணாநிதியால் கைவிடப்பட்டு அனாதையாக நின்ற ராமதாசும், வாழப்பாடியும் 'அரசியல் ரீதியில்' கூட்டு அமைத்தனர்.

வழக்கம் போல, உற்சாகத்துடனும், வாய்நிறைய வாக்குறுதிகளுடனும், பை நிறைய பணத்துடனும் மக்களிடம் வாக்கு பிச்சை கேட்கச் சென்ற வேட்பாளர்களுக்கு மாபெரும் அதிர்ச்சி காத்திருந்தது. நீண்ட காலமாக, கரைவேட்டிப் பட்டாளத்தின் அட்டூழியங்களாலும், ரௌடிதனங்களாலும் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்த மக்கள், அக்கூட்டத்தைக் கண்டதும் வெகுண்டெழுந்தனர். முதலமைச்சர், எம்.எல்.ஏ, ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று எவ்வித பாகுபாடுமின்றி மக்கள் ஓட்டுக் கட்சியினருக்கு 'சிறப்பான வரவேற்பு' அளித்தனர். உசிலம்பட்டியில் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜெயலலிதாவுக்கு செருப்பு வீச்சு, கல்வீச்சு என மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர். சாதிக்கலவரம் நடந்த தென்மாவட்டப் பகுதிகளில் மக்கள் ஜெயலலிதாவை நுழையவே விடவில்லை. 'மாண்புமிகு' நெடுஞ் செழியனோ, தேனி நகர தெருவிற்குள் எப்படியாவது நுழைந்துவிட கஜினிமுகமது போல விடாது படை எடுத்தும், மக்கள் அவரை நுழைய விடவே இல்லை. அவர் அங்கு சென்ற போதெல்லாம் கல்லையும், மண்ணையும் வாரி இறைத்து 'அன்பாக கவனித்து' அனுப்பினர்.



படிப்பகம்

www.padippakam.com

சேடப்பட்டியாருக்கோ, சேடப்பட்டிக்குள் நுழைவதே பெரும் பாடாகிப் போனது.

வழக்கமாக, 'செல்லமாக' பிறரைத் 'தட்டி'க் கொடுக்கும் தாமரைக்கனிக்கு இந்த முறை காமராசர் மாவட்டம் - சுந்தரபாண்டியம் கிராமத்தில் மக்கள் 'தட்டி'க் கொடுத்தனர். தாங்க முடியாமல் தாமரைக் கனி & கோ தப்பி ஓட்டம். அமைச்சர்கள் துரை ராமசாமி, ஜெயகுமார் ஆகியோருக்கு தொகுதிகளில் 'சரியான' கவனிப்பு. சுடுகாட்டுப் புகழ் செல்வ கணபதி, இலவச வேட்டி சேலை புகழ் இந்திரகுமாரி, சந்தனக்கடத்தல் புகழ் செங்கோட்டையன் உள்ளிட்ட அனைத்து 'புகழ்' வாய்ந்த அமைச்சர் பெருமக்களும் பல்வேறு தொகுதிகளில் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என ஓட்டம் எடுத்த சம்பவங்கள் ஏராளம். கரூர், கிருஷ்ணராயபுரம், பெருந்துறை, பல்லடம் ஆகிய தொகுதிகளில் அ.தி.மு.க. வேட் பாளர்களுக்கு அடி, உதை. இது ஆளும் கட்சிக்கு மட்டும் கிடைத்த 'வரவேற்பு' அன்று. மக்களின் தாக்குதலிலிருந்து எந்தக் கட்சியும் தப்பிக்க இயலவில்லை.

சென்னை-திருவள்ளூர் அருகே உள்ள கிராமங்களில் ஓட்டுக்கட்சிகள் நுழைய மக்கள் தடை விதித்திருந்தனர். மீறி பிரச்சாரம் செய்ய சென்ற தி.மு.க. வினரை மக்கள் ஓட ஓட விரட்டினர். தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தொகுதியில் பல இடங்களில் மக்கள் பிரச்சாரம் செய்ய யாரையும் அனுமதிக்கவில்லை. இதனால், மனம் நொந்து போன தி.மு.க. வேட்பாளர், தன்னை தயவு செய்து பகுதிக்குள் நுழைய அனுமதிக்கும் படி பத்திரிக்கை செய்தி வாயிலாக, மக்களை காலை பிடிக்காத குறையாக கெஞ்சினார். இன்னும் வெளியே தெரியாத வேட்பாளர்கள் மீதான தாக்குதல்கள் பல. இது தவிர தமிழகம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் அடிப்படை வசதிகளுக்காக தேர்தலைப் புறக்கணித்தனர். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் வட்டம், ஜவ்வாது மலை ஒன்றியத்தைச் சேர்ந்த 44 கிராம பழங்குடி மக்கள் குடிநீர், மின்சாரம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, நியாயவிலை கடை, விளைபொருள் சந்தை, வேலை வாய்ப்பு, நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா போன்ற பல்வேறு கோரிக்கை களுக்காக தேர்தலை புறக்கனித்தனர்.

திருப்போரூர் சட்டப் பேரவை தொகுதி, தையூர் கிராமத்தில் 20,000 தாழ்த்தப்பட்டோர், ஊருக்குள் நுழைய ஓட்டுக் கட்சிகளுக்கு தடை விதித்ததோடு, தேர்தலை புறக்கணித்தனர். உத்திரமேரூர் தொகுதி, இல்லலூர் கிராமமக்கள் தேர்தலை புறக் கணித்தனர்.

சென்னை அருகே கும்மிடிப்பூண்டியில் அமெரிக்க டூபாண்ட் நிறுவனத்தை துரத்தக் கோரியும், தூத்துக்குடியில் அமெரிக்க ஸ்டெர்லைட் நிறுவனத்தை துரத்தக் கோரியும் மக்கள் தேர்தலைப் புறக்கணித்தனர். மொத்தத்தில், இத்தேர்தலில் மக்கள் எதிர்ப்பு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. இந்து மத வெறியன் சோவின் துக்ளக், தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகள் 'மக்கள் வேட்பாளர்களை தாக்கக் கூடாது; பிரச்சாரம் செய்வது அவர்களது உரிமை'' என ஓட்டுக் கட்சிகளுக்கு வக்காலத்து வாங்கும் அளவிற்கு மக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். இறுதியில், கருணாநிதி அசுர பலத்துடன் ஆட்சி அமைத்ததும் கூட, மக்களின் ஜெயலலிதா எதிர்ப்பினால் தானே ஒழிய தி.மு.க. ஆதரவு வாக்குகளால் இல்லை. கடந்த 49 ஆண்டு கால (போலி) சுதந்திரத்தில் இக்கட்சிகளாலும், அவர்களின் ஆட்சிகளாலும் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைக்காமல். இருந்த வாழ்வையும் இழந்து நிற்கும் நிலையும், மறுபுறத்தில் ஆளும் கும்பலின் எண்ணற்ற கோடானுகோடி ரூபாய் ஊழல் மற்றும் உல்லாச வாழ்க்கை ஆகியவற்றால் மக்கள் இந்த பாராளுமன்ற முறையின் மீது இருந்த நம்பிக்கையை முற்றிலுமாக இழந்து விட்டனர். ஓட்டுக்கட்சிகள் தங்களின் அடாவடித்தன அரசியலாலும் தாங்களாகவே மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்கின்றனர்.

மொத்தத்தில் மக்கள், புரட்சிகர மாற்றத்தை எதிர் நோக்கி நிற்கின்றனர். அத்தகைய மாற்றத்தின் துவக்கப் புள்ளியாகவே நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் தங்கள் ஆவேசத்தை வெளிப் படுத் தியுள்ளனர்; ஆட்சியாளர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கத் துவங்கிவிட்டனர். இனிவரும் தேர்தல்களில் காஷ்மீர், அசாம், ஆந்திரா, பீகாரில் நடந்தது போல துப்பாக்கி முனையிலேயே நடத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மக்கள் எத்தகைய வகையிலும் ஆளும் வர்க்கத்தை தூக்கி எறிந்து, புரட்சிகர பாதையில் அணிவகுத்து 'தாங்களே வரலாற்றை படைப்பவர்கள்' என்பதை நிரூபிப்பார்கள்.

**– ஆசிரியர் குழு**

**'இந்திய நாடாளுமன்றம் என்பது பிறந்ததிலிருந்து தன்னுடைய உதவாக்கரை தன்மையை உலக அரங்கிலே பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. கட்டவிழ்த்து விடப்படும் அட்டூழியங்களுக்கு திரைபோட்டு மறைத்துக் கொண்டிருக்கிறது.'**

**– பகத்சிங்**



படிப்பகம்

www.padippakam.com

# தாராள மயமாக்கலும் கல்வித்துறையில் கட்டுமான சீரமைப்பும்

பேராசிரியர். ப. சிவக்குமார்

'கமண்டலங்களை' இறக்கி விட்டு மண்டல் குழுவிற்குப்' போராடியவர்கள், மத்தியில் அரசில் பொறுப்பேற்றுள்ள நேரம் இது. அவர்களை உள்ளிருந்து வலது பொதுவுடமைக் கட்சியும் வெளியில் இருந்து இடது பொதுவுடமைக் கட்சியும் ஆதரிக்கும் அதே வேளையில் காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரிப்பதும் தொடர்கிறது. தலைமை அமைச்சர் தேவகவுடா, தாராள மயமாக்கம், உலக மயமாக்கம் ஆகியவற்றின் எதிரி அல்ல என்று செய்தித்தாள்கள் கணிக்கின்றன. தொடர்ந்து நிதி அமைச்சரின் அறிவிப்புகள் இவற்றை உறுதி செய்கின்றன. மேலும் இந்த இரண்டு 'பொது உடமைக் கட்சிகளும் மத்திய அரசை ஆதரிப்பதால் தாராள மயமாக்கம், அதன் தொடர்ச்சியாக கட்டுமான சீரமைப்பு ஆகியவற்றைத் தடுத்து நாட்டின் இறையாண்மையை மீட்டெடுக்க முடியு மென்ற மாயை ஒரு பக்கம் நிலவுகின்றது. அத்துடன், மத்தியிலும், மாநிலத்திலும் தி.மு.க. ஆளும் நிலையில் இருப்பதால் தமிழகம் நலம் பெறும் என்னும் தோற்றமும் நிலவுகின்றது.

ஏகாதிபத்தியத்தின் ஆக்டோபஸ் கரங்கள் உலக வங்கி, ஐ எம் எப், காட் ஒப்பந்தம் என்னும் பல வடிவங்களில் வளரும் நாடுகளின் மக்களை அரவணைத்து ஒடுக்கு ம்போது அதை உடைத்தெறிய சரியான அரசியல் திட்டம் இல்லாத இவர்களால் என்ன மாற்றுத்திட்டம் தரமுடியும் என்று தோன்றுகின்றது. கடந்த சில நாட்களாக சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் ஓய்வு பெற்ற இடங்களை நிரப்பப் போவதில்லை; பணியாட்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என நிதி அமைச்சர் அறிவிப்பதும், உறவுவைத்துள்ள இடது சாரிகள் குரலெழுப்புவதும் பணியில் இருப் போருக்கு பணிப் பாதுகாப்பு, ஊதியபாதுகாப்பு உண்டு என நிதி அமைச்சர் பின்னர் அறிவிப்பதும் தொடர்கிறது.

இதைத் தொடர்ந்து பொதுத் துறையைத் தனியாருக்கு தாரை வார்த்தல், சேவைத்துறையில் நிதி உதவி குறைத்தல் போன்றவை குறித்தும் மத்திய அரசு விவாதிப்பது தொடர்கிறது.

கல்விக்கு 6% நிதிஒதுக்கீடு என்று ஒரு முகமும், தாராள வாதத்திற்கு வால்பிடிக்கும் இன்னொரு முகமும் உடைய இவர்கள் மத்தியில் ஆண்டாலும், மாநிலத்தில் ஆண்டாலும் மக்கள் நலத் திட்டங்கள் உதாசீனப் படுத்தப்படும் என்பது தெளிவு. இந்தச் சூழலில் சேவைத் துறையில் ஒன்றான கல்வித் துறையில் தனியார் மயமாக்கம் குறித்து இன்றைய நிலையை புரிந்து கொள்வது



அவசியமாகிறது. மத்தி யிலும் மாநிலத்திலும் ஆளுகின்ற அரசுகளை தாராள மய மாக்கம் மற்றும் கட்டுமான சீரமைப்பால் மக்களுக்கெதிரான திட்டங்களை திணிப்பதிலிருந்து தடுக்க, போராட இதைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

1986–ல் புதிய கல்விக் கொள்கையானது மத்திய அரசால் நடைமுறைக்கு எடுத்துச் செல்லப்படு முன்னரே உலக வங்கி வெளியிட்ட 'வளர்ந்து வரும் நாடுகளில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு' எனும் திட்ட அறிக்கை, உலக வங்கியின் ஆக்டோபஸ் கரங்களின் அர வணைப்பைத் தெளி வாக்குகிறது. அந்த அறிக்கையானது, உயர் கல்விக்கான இந்திய அரசின் நிதி ஒதுக்கீடு, ஏற்கெனவே வசதி வாய்ப்பு படைத்தவர்களுக்கே மேலும் பலன் தருவதாகக் கூறி, உயர்கல்விக்கான நிதிஒதுக்கீட்டைக் குறைத்து தனியார் மயமாக்குதல். மாணவர் கட்டண அதிகரிப்பு ஆகியவற்றைப் பரிந் துரைத்தது. இதுகுறித்து அனைத்து நாடுகளின் பல்கலைக் கழகச் சங்கம் ஜிம்பாவேயில் 1987 ஆம் ஆண்டு விவாதித்த போது இந்தியப் பிரதிநிதி உலக வங்கிக் கருத்தை ஆதரித்ததும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பின் னணியின் தொடர்ச்சியாக, புற்றீசல் போல் சுயநிதிக் கல்லூரிகளின் வளர்ச்சி ஒரு பக்கம், பல்கலைக் கழகங்களை ஒருங்கிணைக்கும் நிதி ஆதாரமான UGC எனப்படும் பல்கலைக் கழக மான்யக்குழுவுக்கு மத்திய அரசு நிதியைக் குறைத்தது, பல்கலைக் கழக மான்யக்குழு இந்தியப் பல்கலைக் கழகங் களுக்கான நிதியைக் குறைத்தது. பல்கலைக் கழகங்களின் நிதி திரட்டல் குறித்து புன்னையா குழு அமைத்தது, உச்சகட்டமாக தனியார் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு கொண்டு வந்தது என பல வடிவங்களில் கல்வி வியாபார ஊக்குவிப்பு விதைகள் ஊன்றப் பட்டுவிட்டன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த திட்ட செலவினத்தில்9 %உயர்கல்விக் கென செலவிடப்பட்டது. பின்னர் இது 18 ஆம் மற்றும் 24 % எனப் படிப்படியாக உயர்ந்தது, 7வது திட்டத்தில் 16% மாக குறைந்தது. எட்டாவது திட்டத்தில் 8 % மாக தேய்ந்து விட்டது.

'மண்டல்குழு அமலாக்கம்' குறித்து பிற்படுத்தப் பட்டோர் போராடி உரிமை பெறும் நேரமும், தாழ்த்தப்பட்டோரின் முதல் தலைமுறை படிப்பாளிகள் பள்ளிப் படிப்பைக் கூடத் தாண்ட தொல்லைப்பட்டு கல்லூரி வாசல் மிதிக்கும் நேரமும் கல்வி வியாபாரம் உச்சக்கட்டம் அடையும் நேரமும் ஒன்றாக குவிவதைக் காணலாம். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்காக போராடி கல்விக் கூடத்தில் அடி எடுத்து வைக்கும் நேரத்தில் மத்திய, மாநில அரசுகளால் தாய்மொழிக் கல்வி புறக்கணிக்கப்படுவதும், கல்வி வியாபாரமாக்கப்படுவதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டி யுள்ளது. தாராளமய மாக்கம், இந்த உயர் கல்வி வியாபாரத்தை ஊக்குவிக்கும். அதே நேரத்தில் நுகர்பொருள் ஆர்வத்தைப்



படிப்பகம்

www.padippakam.com

பெருக்கு வதற்காக 'எழுத்தறிவு ஊக்குவிப்பு' 'அறிவொளி இயக்கம்' போன்ற வற்றை கட்டமைப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

புதிய கல்வி அமுலாக்க தொடக் கத்தில் தமிழ் நாட்டு நிலையை கணக்கில் எடுத்துக் கொண்டால் 1984–85 ஆம் ஆண்டில் பொறி யியல் கல்லூரி களில் 4 அரசுவசமும், 3 தனியார் வசமும், 17 கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகளாகவும் தோன்றின. ஆனால் இன்று சுயநிதி பொறியியல் கல்லூரிகள் எண்ணிக்கை மட்டும் 66 ஆக உயர்ந்து விட்டது. (இது இன்னும் உயர்ந்திருக்கக் கூடும்). அரசு நிதிஉதவி பெறும் அண்ணா பல்கலைக் கழகமோ பன்மடங்கு மாணவர் கட்டணத்தை உயர்த்தி விட்டது. சுயநிதிக் கல்லூரி களிலோ இலவச இடம் ரூ.7,500 என்றும் (இது இலவசமா?) விலை கொடுக்கும் இடம் (Payment Seat) ஆண்டுக்கு ரூ.30,000 என்றும் ஒரே இடத்தை இரண்டு விலைக்கு ஏலமிடும் வியாபாரம் நடக்கிறது. ரூபாய்.7,500,– தருபவனும் வேண்டிய சிறப்புப் பாடம் பெற வேண்டுமெனில் இரண்டாமாண்டில் கட்டாயமாக,பாடத்துக்கு ஏற்றவகையில் கணக்கில் வராத நன் கொடை தரவேண்டும்.

நவீனமயமாக்கலுக்கு உதவுகின்ற கணிப்பொறி அறிவியல், நுண்உயிரியல் (Micro Biology) உயிரியல் வேதியியல் (Biochemistry) பாடவகுப்புகள் அனைத்தும் புதிதாகத்திறக்கப்பட்டுள்ள சுயநிதிக் கலை – அறிவியல் கல்லூரிகளில் மட்டுமே திறக்கப் படுகின்றன. அரசு கல்லூரிகளிலோ, தனியார் கல்லூரிகளிலோ இவை திறக்கப் பட்டாலும் சுயநிதி பாடவகுப்பாக (Self Financed course) மட்டுமே திறக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, சென்னைப் பல்கலைக்கழகப் பகுதியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்டுள்ள மொத்த கல்லூரிகள் 117 ஆகும். இதில் கலை, அறிவியல், கல்வியியல் கல்லூரிகள் 33 ஆகும். உதவி பெறும் தனியார் கல்லூரிகள் 51 ஆகும். சுயநிதிக் கல்லூரிகளோ 29 ஆகும். அரசு கல்லூரிகளில் சென்னை அம்பேத்கார் கல்லூரி, பர்கூர் மகளிர் கல்லூரி, சேலம் அரசு ஆடவர் கல்லூரி, கிருஷ்ணகிரி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் மட்டுமே B.SC.. (கணிப்பொறி அறிவியல்) உள்ளது. சென்னை பாரதி மகளிர் கல்லூரி, கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு அரசு கல்லூரிகளில் மட்டுமே உயிரியல் வேதியியல் உள்ளது. ஆனால் சுயநிதிக் கல்லூரிகளில் 19–ல் கணிப்பொறி அறிவியலும், 16–ல் உயிரியல் வேதியலும், 13–ல் நுண் உயிரியலும் உள்ளன. இந்த சுயநிதிக்கல்லூரிகளில் இப்பாட வகுப்புகள் ஓர் இடம் ரூ.20,000 க்கு மேல் விற்கப்படுகின்றன. அரசு கல்லூரிகளில் இந்தப் பாடவகுப்புகள் இனிமேல் தொடங்கப்பட வேண்டுமெனில் சுயநிதி வகுப்பாக இருக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் போன்ற புதிய பாடவகுப்புகள் தொடங்க வேண்டுமெனில், அதற்கு மானிய உதவி கிடையாது. எனவே, சுயநிதிக் கல்லூரியிலும் உதவி பெறும் தனியார் கல்லூரியிலும் கொள்ளை லாப விற்பனை, அரசு கல்லூரியிலே குறைந்த லாப விற்பனை.




இந்த கல்வி வியாபாரச் சந்தையில் ஆப்டெக் (APTEC) போன்ற நிறுவனங்களில் அறுபதாயிரம் ரூபாய் செலுத் தினால் இங்கிலாந்தில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழக பி.டெக்., பட்டமும் கணிப்பொறித் திறனும் கற்று வெளியேறலாம். இத்தகைய, எந்தவித கட்டுக்குள்ளும் இல்லாத கணிப்பொறிப் படிப்பு விலை ஏற்றம் இன்னொரு வகை ஐந்து நட்சத்திர கல்வி வியாபாரம்'' •

எனவே, மண்டல் குழு அறிக்கை அமலாக் கப் போராட்டத் தினால் இட ஒதுக் கீடு பெற் றாலும். ST, SC இட ஒதுக்கீடு இருந்தா லும் நவீனமய உலகிற் கான படிப்பு ஒடுக்கப் பட்ட மக்கள் உயர்கல்வித் துறை யின் அடிப்படிக் கட்டில் ஏறாமல் எட்டி உதைக்கப் படுகிறார்கள். நிலவும் தொலைத் தொடர்பு புரட்சி (Communication Revolution) யுகத்தில் நுகர்வோர் மயக்கத் திற்கு உட்படுத்தப் படும் இலக்காக ஒடுக்கப்பட்ட மக்கள் நிர்ணயிக்கப் படுகிறார்களே அல்லாமல் இந்த தாராள மயமாதலை தூக்கிப் பிடிக்கும் கட்டமைப்பின் அதிகார படிக் கட்டுக்குள் நுழையாமல் அவர்கள் தடுக்கப்படுவதை நாம் கணக் கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இப்போதுள்ள அதிகார அமைப்பிற்குள், நிறுவனங் களுக்குள், நிலவும் பார்ப்பனிய கலாச்சாரம் நீர்த்துப் போவதை ஆளும் வர்க்கம் விரும் பவில்லை என்ற பின்னணியில் இதை நாம் பார்க்க வேண்டும்.

மேலும், அதிகாரத்தில் பங்கு பெறும் நிலையை தாழ்த்தப் பட்ட மற்றும் பிற் படுத்தப் பட்ட மக்கள் அடைய முனையும் போது ஆளும் வர்க்கம் அதை அனுமதிக்க தயாரில்லை என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஜனநாயக உணர்வுடன் போராளிக் குணத்துடன் குறைந்த பட்சமாக நுழையும் வாய்ப்புடைய அடித்தட்டு வர்க்க மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும் இந்த தாராள மய மாதலின் கட்டுமான சீரமைப்பின் நோக்கமாக இருப்பதைக் காண்கிறோம். **69%** இட ஒதுக் கீட்டிற்கு போராடும் இன்றைய ஆட்சியாளர்கள், மத்தியில் ஆண்டாலும் மாநிலத்தில் ஆண் டாலும் பொருளாதார கட்டுமான சீரமைப்பை ஏகாதிபத்திய பிடியில் இருந்து மீட்டெடுக்காதவரை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உண் மையான விடுதலை இல்லை.

இந்த உண்மையான விடு தலைக்காக இவர்கள் போராடத் தயாராக இல்லாத காரணத்தினால் தான் அதிமுக அரசு காலத்தில் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'கட்டாய இலவசக் கல்வி' தரவேண்டும் என்ற அரசின் கடமையை கைகழுவும் வகையில் அந்தத் தொடரை நீக்கிய சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டது. இன்றைய திமுக அரசின் ஆளுநர்



படிப்பகம்

www.padippakam.com

1. உயர் கல்வி/ தொழில்நுட்பக் கல்வியில் SC/ST மாணவர் வீதம்

| | SC (%) | ST (%) |
|---|---|---|
| **பட்டவகுப்பு** | | |
| கலை | 9.8 | 2.9 |
| அறிவியல் | 5.8 | 0.8 |
| வணிகவியல் | 4.4 | 1.0 |
| **முதுநிலைபட்டவகுப்பு** | | |
| கலை | 10.1 | 2.1 |
| அறிவியல் | 4.9 | 0.8 |
| வணிகவியல் | 6.5 | 1.2 |
| **பொறியியல் தொழில்நுட்பம்** | | |
| பட்ட வகுப்பு | 5.9 | 1.6 |
| மருத்துவம் பட்ட வகுப்பு | 8.9 | 2.6 |
| Ph.D., / D.Phil., போன்ற ஆய்வு படிப்பு வகுப்புகள் | 2.9 | 0.6 |

நன்றி: Student News August 1994

உரையிலும் 'கட்டாய இலவசக் கல்வி' குறித்து எந்த அறிவிப்பும் இல்லாததோடு தொடக்கக் கல்விக்கு முன்னுரிமை என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு நடத்தும் தொடக்க,நடுநிலை மற்றும் மேனிலை கல்விக் கூடங்கள் எல்லாம் 'புளிய மரத் திட்டம்' மற்றும் 'புரவலர் திட்டம்' என்னும் இரண்டு கிடுக்கிப் பிடிக்குள் சிக்கி மூச்சுத் திணறும் நேரத்தில், மெட்ரிகுலேசன் பள்ளி முதல் உயர்கல்விக் கூடங்கள் வரை அனைத்துமே ஏலக் கூடமாகி விட்டதால் இந்த கட்டமைப்பில் சிக்கிய கல்வித் துறையை மீட்டெடுக்க ஜனநாயக அமைப்பு கோரி, கல்விக்கான அரசு நிதி ஒதுக்கீடு அதிகப் படுத்த கோரி, கட்டாய இலவசக் கல்வி கோரி போராடவேண்டி உள்ளது. இந்தப் போராட்டத்தை ஆசிரியர் அமைப் புகளும் மாணவர் அமைப்புகளும் இணைந்து உடனடியாக நடத்த வேண்டிய கால கட்டம் இது.

இந்தியாவில் படிப்பறிவு இல்லாத குழந்தைகள் ஒரு கோடி எழுபது லட்சம் என்பது அதிகார பூர்வ தகவல். அதிகாரபூர்வமற்ற தகவல்படி அந்த எண்ணிக்கை நான்கு கோடி ஐம்பது லட்சமாக உள்ளது.

நன்றி : Student News -Feb 1995

# கிராமத்திற்கு செல்வோம் இயக்கம்

"தொழிலாளி வர்க்கத்தோடும். கூலி ஏழை விவசாயிகளோடும் ஐக்கியப்படாத எவரும் புரட்சியாளனாக இருக்க முடியாது" என நமது அன்புக்குரிய தலைவர் சாரு மஜூம்தார் கூற்றுப்படி அந்த உன்னதமான வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற முற்போக்கு மாணவர் சங்கமானது ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் கிராமங்களுக்கு செல்கின்றது.

சினிமாவிலும் பத்திரிகைகளிலும் சித்தரிப்பது போன்று மாணவர்கள் ஊதாரிகள் அல்ல. சமூக விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்திகள் என்பதுதான் வரலாறு. இந்த வரலாற்றினை நிருபிக்கின்ற வகையில்தான் மு.மா.ச. 'கிராமங்களுக்குச் செல்வோம்' இயக்கத்தினை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகின்றது.

இந்த வருடம் 25க்கும் மேற்பட்ட மாணவர் சங்க செயல் வீரர்கள் 3 நாட்கள் அரசியல் பயிற்சியும். கலைப்பயிற்சியும் எடுத்து கொண்டு 3 குழுக்களாக பிரிந்து சேலம் தரும்புரி மாவட்டங்களுக்கு சென்றனர். தேர்தல்பிரச்சார கூச்சலுக்குப்பின் நிசப்தம் நிலவிய சேலம். தர்மபுரி. கிராமங்களில் மு.மா.ச. வின் போர்க்குரல் ஓங்கி ஒலித்தது. ஆண்டாண்டு காலமாய் அடக்கி ஒடுக்கப்பட்ட உழவர்களுக்கு இக்குரலொளி எழுச்சியூட்டியது. ஒவ்வொரு குழுவும் 15 நாட்கள் மலைகள். காடுகளுக்கு ஊடே உள்ள கிராமங்களுக்கெல்லாம் நடந்து சென்று புரட்சிகர பாடல். நாடகங்கள் மூலம் நாட்டு நிலைமைகளையும் உழவர் புரட்சியின் அவசியத்தையும் விளக்கினர்.

உழவர் புரட்சிக்காக மக்களை அணி திரட்டி வரும் உழவர் உழைப்பாளர் மாமன்றத்தின் உன்னத நோக்கங்களை எடுத்துரைத்தனர். இப் பிரச்சாரத்தின் போது உழவர்களின் அடிப்படைபிரச்சனை. ஆதிக்கச் சக்திகளின் கொடுமை ஆகியவற்றை நேரடியாக அறிந்து கொண்டனர். அதே போல் உழவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மாணவர் சங்கம் தக்க பதிலளித்தது. மொத்தத்தில் "மக்களிடமிருந்து கற்றுக் கொள்வோம். மக்களுக்கு கற்பிப்போம்" என்ற மாவோவின் கூற்று நிரூபனமாகியது.

முற்போக்கு மாணவர் சங்கம் ஆற்றி வரும் புரட்சிகர போராட்டங்களை விளக்கும் துண்டறிக்கைகளையும். இலக்கியங்களையும் மக்களிடையே விநியோகித்தனர். அந்த வரலாற்று சிறப்புமிக்க 15 நாட்களிலும் உணவு. இருப்பிடம் ஆகியவற்றை மக்களே கவனித்துக் கொண்டனர். இவ்வாறு மாணவர்கள் உழவர்களுடன் ஐக்கியமாயினர். இதில் சிறப்பம்சம் என்னவெனில் பெண்கள் 5 பேர் கலந்து கொண்டதும் மேலும் சில பகுதிகளில் கியூ பிரிவு மற்றும் கருங்காலிகளின் தொந்தரவுகளை எல்லாம் முறியடித்து வெற்றிகரமாக இயக்கத்தினை நடத்தியதும் தான்.

விவசாயிகள் மத்தியில் முளைவிட்டு வளர்ந்து வரும் உழவர் உழைப்பாளர் மாமன்றத்திற்கும். அவர்கள் நடத்தி வருகின்ற போராட்டத்திற்கும் உற்சாகமளித்தது கிராமத்திற்கு செல்வோம் இயக்கம்.

**மாநிலக்குழு**
**முற்போக்கு மாணவர் சங்கம்.**



படிப்பகம்

www.padippakam.com

– 2 ஆம்பக்க தொடர்ச்சி

அடுத்த ஒரு மாதத்திலேயே இலட்சக்கணக்கானத் தொழிலாளிகள் வீதிகளில் குவிந்தனர். ஒட்டுமொத்த பொதுத்துறை நிறுவனங்களின் 50 இலட்சம் தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தனர். இதில், அரசின் அறிவிப்பால் அதிகப் பாதிப்பிற்கு ஆளாகப் போகும் ரயில்வேத் தொழிலாளிகள் முக்கியப் பங்கு வகித்தனர். அவர்களுடன் அனைத்து அரசு ஊழியர்களும் சேர்ந்து கொண்டனர்.

இன்னொரு புறம், பல்கலைக்கழக மாணவர்களும் கல்விக்கான நிதி வெட்டை எதிர்த்து ஒரு மாதத்திற்கும் மேலாக போராடி வந்தனர். தொழிலாளிகளின் போராட்டத்தை அவர்கள் ஆதரித்ததோடு ஆசிரியர்கள் நியமனமின்மை மற்றும் வகுப்பறைகளின் பற்றாக்குறையை எதிர்த்து ஆசிரியர்களுடன் பாரிஸ் நகரின் வீதிகளில் இறங்கி, கண்டன ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மொத்தத்தில் நாடே ஒரு மாதத்திற்கும் மேல் ஸ்தம்பித்தது.

இன்னொரு புறம், போராட்டங்களை முறியடிக்க எதிர் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. பேச்சு வார்த்தைக்கும் தயாரில்லை; கோரிக்கைகளையும் ஏற்கவில்லை.

இவ்வாறே, இரு வாரங்கள் கழிந்தன. தொழிலாளிகளும் விடாமல் போராடினர். தனியார் போக்குவரத்து மூலம் அரசு போக்குவரத்து தொழிலாளிகளின் வேலைநிறுத்தத்தை அரசு நசுக்க முனைந்தது. அத்துடன், வேலை நிறுத்தத்தை எதிர்த்து கருங்காலிகளைக் கொண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தி தொழிலாளிகளின் போராட்டத்தையும் ஒற்றுமையையும் பிளக்க முற்பட்டது.

ஆனால், தொழிலாளிகள் நிலைகுலையாமல் உறுதியாக போராட்டத்தை தொடர்ந்ததோடு பரந்துபட்ட மக்களின் ஆதரவையும் பெற்றனர்; அரசின் முகத்தில் கரியையும் பூசினர்.

இறுதியாக, வேறுவழியின்றி அரசு அடிபணிந்தது. தங்களின் சுரண்டல் நலனிற்காக ஐரோப்பிய ஒன்றியத்தை அமைக்கவுள்ள ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் அதைச் செய்து முடிக்க தங்களின் சுமைகளை மக்களின் மீது சுமத்துகிறார்கள். அதாவது, பொதுத்துறை நிறுவனங்களை கைப்பற்று கிறார்கள்; சமூக நலத் திட்டங்களின் மீது கைவைக்கிறார்கள்; ஐரோப்பிய நாடுகளில், கடும் போட்டியினால் சந்தை சுருங்கிவிட்டதாலும் தொடர்ச்சியாக உறுதியுடன் போராடியதன் மூலம் அதிக ஊதியம் பெற்று வருவதாலும், ஐரோப்பிய தொழிலாளர் களிடம் தாங்கள் எதிர்பார்க்கும் அளவு மலிவான உழைப்பு கிடைக்காததினாலும் தொழிற்சாலைகளை மூடிவிட்டு மலிவான உழைப்பிற்காக மூன்றாம் உலக நாடுகளை நோக்கி ஓடுகிறார்கள். அவர்களுக்குத் தேவை கொள்ளை இலாபம்தான். அதற்கு சந்தையையும் மலிவான உழைப்பையும் தேடி அலைகின்றனர்.

இதனால், பிரான்சு மட்டுமின்றி ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் போன்ற ஐரோப்பிய நாடுகளில் மக்களின் போராட்டங்கள் அண்மைக் காலமாக வெடித்துக் கிளம்புகின்றன. இப்போராட்டங் களின் வெறுமனே பொருளாதாரக் கோரிக்கை களுக்காக மட்டுமல்ல; சாராம்சத்தில், ஏகாதிபத்திய வாதிகளின் கொள்ளை இலாபத்திற்காக நடைபெறும் 'உலகமயமாக்கல்' என்ற பொருளாதார கொள்கைக்கு எதிரானதாகும். இவை ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சியை மேலும் மேலும் துரிதப்படுத்துவதாகும்.

உலகிலேயே முதன்முதலில் நிலவுடமைக்கு சாவுமணி அடித்து ஜனநாயகப் புரட்சியை சாதித்தது, உலகிலேயே முதன் முதலில், முதலாளித்துவத்தை வீழ்த்தி, பாட்டாளி வர்க்க ஆட்சியை மலரச் செய்த 1871–மாபெரும் பாரீஸ் கம்யூன் எழுச்சி. முதலாளிய சமூக அமைப்பின் அவலங்களுக்கு எதிராக 1968–ல் நிகழ்ந்த உலகையே உலுக்கிய மாபெரும் மக்கள் கிளர்ச்சி போன்ற போராட்டப் பாரியம்பரியங்களைக் கொண்ட பிரெஞ்சு உழைக்கும் மக்களின் வரலாறானது உலக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு கலங்கரை விளக்கமாக விளங்குகிறது.

அத்துடன், சமூகத்தில் ஒரு பிரிவினர் போராடி னால் படிப்படியாக அனைத்துப் பிரிவினரும் களத்தி லிறங்கி ஒற்றுமையுடன் போராடி தங்கள் உரிமைகளை அடைதல் என்பது பிரெஞ்சு மக்களின் தனிச் சிறப்பாகும். அண்மையில் நடந்த போராட்டமும் அதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்; நமக்கும் சிறந்த வழிகாட்டுதலாகும்.

- பாஸ்கர்

# காந்தியின் குரங்குத்தத்துவம்

- நான்
  உன் உரிமைகளைப் பறிப்பேன்
  வாய் மூடி மௌனியாய் இரு!
- நான்
  உன் சகோதரியை கற்பழிப்பேன்
  கண்ணை மூடிக்கொள்!
- நான்
  வேசியின் மகனே என திட்டுவேன்
  காதைப் பொத்திக்கொள்!
- சாப்பிடு! மலங்கழி! தூங்கு!
  உயிர்மீது ஆசையிருந்தால்
  குறுக்கிடாதே!

□ அறிவொளி



படிப்பகம்

www.padippakam.com

# பெற்றோர்–ஆசிரியர் கழகத்தை எதிர்த்த மு.மா.ச.வின் போராட்டம்

'கல்வி எங்கள் பிறப்புரிமை – கல்வி தருவது அரசின் கடமை' என்ற முழக்கத்துடன் கல்வியை கடைச்சரக்காக மாற்றுவதை எதிர்த்தும் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்விக்காகவும் மு.மா.ச. தொடர்ச்சியாக போராடி வருகிறது. மக்களுக்கு கல்வி கொடுக்கும் அடிப்படை உரிமையிலிருந்து அரசு விலகிக் கொள்ளும் நோக்கத்தின் ஒரு பகுதியாக பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின் மூலம் கட்டாய நன்கொடை என்னும் பெயரில் பணம் பறித்தலும், உள்ளூர் ஆதிக்க சக்திகளின் கைகளில் பள்ளிகளை விட்டுவிடுவதும் நடைபெறுகிறது. ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு கட்டாய இலவச கல்வி கிடைக்க வேண்டும் என்ற கொள்கைக்காக போராடும் மு.மா.ச. இத்தகைய பெற்றோர் ஆசிரியர் கழகத்தை எதிர்த்து போராடி வருகிறது.

**சென்னை மாவட்டம்**

திரிசூலம் மலையடிவாரப் பகுதிகளில் 'பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்' கட்டாய நன் கொடையை எதிர்த்து கலை நிகழ்ச்சிகள் மூலம் தெருமுனை பிரச்சாரம் செய்யப்பட்டது. 'பெற்றோர்–ஆசிரியர் கழகமா? – பணம் பறிக்கும் கூட்டமா?' என்னும் தலைப்பில் துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு, மக்களிடம் விநியோகிக்கப் பட்டது. பல்லாவரம் கன்டோண்மென்ட் உயர்நிலைப்பள்ளியில் நன்கொடை வசூலித்து மாணவர்களை சேர்ப்பதை கண்டித்து முதலில் தலைமையாசிரியருக்கு மு.மா.ச. சார்பில் கடிதம் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து பெற்றோர்களைத் திரட்டி போராட்டம் நடத்தியது. இறுதியில்,பெற்றோர்கள் மற்றும் மு.மா.ச. வின் உறுதியான போராட்டத்திற்கு அடிபணிந்து அப்பள்ளியில் நன்கொடையின்றி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளபட்டனர்.

**தர்மபுரி மாவட்டம்**

மக்களின் அடிப்படை உரிமையான கல்வியை கடைச்சரக்காக மாற்றுவதை எதிர்த்து மு.மா.ச. தொடர்ச்சியாக போராடி வருகிறது. 'கல்வி எங்கள் பிறப்புரிமை! – கல்வி தருவது அரசின் கடமை' என்ற முழக்கத்துடன், அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்விகாக போராடும், போராட்டத்தின் ஒரு பகுதியாக தருமபுரி மாவட்டத்தின் நெருப்பூர், பென்னாகரம், பண்டள்ளி, கோணங்கனள்ளி ஆகிய பகுதி பள்ளிக்கூடங்களில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கட்டாய நன்கொடையினை எதிர்த்து தெருமுனை நிகழ்ச்சி, துண்டு பிரசுரம் மூலம் மு.மா.ச. பிரச்சாரம் செய்தது.

மேற்கண்ட நான்கு பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் மு.மா.ச. உழவர் உழைப்பாளர் மாமன்றத்துடன் இணைந்து பெற்றோர், மாணவர் களைத் திரட்டி கட்டாய நன்கொடை மறுக்கும் போராட்டத்தை நடத்தியது.

நெருப்பூர் பள்ளியில் ஏற்கனவே லட்சக் கணக்கில் பணம் சுருட்டியிருக்கும், உள்ளூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் அங்கம் வகிக்கும் பெற்றோர் ஆசிரியர் கழகம், இம்முறை நன்கொடை வாங்குவதில்லை என ஏமாற்றும் நோக்கத்தோடு பெயருக்கு தீர்மானம் போட்டுவிட்டு, அரசு ஆணைப்படி சிறப்புக் கட்டணம் வாங்காமல் அதிகமாக பணம் வசூலித்தனர். இதனை உ.உ.மா.வு– ம், மு.மா.ச.வும் மக்களை திரட்டி கடுமையாக எதிர்த்தன. இதன் விளைவாக அரசு ஆணைப்படி கட்டணம் வாங்கப்பட்டது.

அது போல கோணங்கனள்ளி, பண்டள்ளி பகுதிகளைச் சேர்ந்த பள்ளிகளில் உள்ளூர் ஆதிக்க சக்திகளின் அராஜகத்தை எதிர்த்துப் போராடி, நன்கொடையின்றி இலவசமாக மாணவர்களை சேர்க்க வைக்கப்பட்டது.

அரியகுளம் பள்ளியில் தலைமை ஆசிரியரும், பெற்றோர் ஆசிரியர் கழகமும் சேர்ந்து "நன்கொடையின்றி மாணவர் சேர்ப்பு கிடையாது" என்று கூறியதை கண்டித்து, நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர் – பெற்றோர்களை திரட்டி தலைமை ஆசிரியர் அலுவலகம் முன்பு மு.மா.ச ஆர்பாட்டம் நடத்தியது. ஆனால் தமிழக விவசாய சங்கத்தினைச் சேர்ந்த உள்ளூர் ஆதிக்க சக்திகள், வட்டிக்காரர்களுடன் இணைந்து 'நன்கொடை தராமல் சேர்க்க முடியாது' என்று தகராறு செய்தது பெற்றோர் – ஆசிரியர் கழகம்.

அப்பொழுது நடைபெற்ற வாக்குவாதத்தில், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரை மக்கள் சரமாரி கேள்விகள் கேட்டு துளைத்தனர்.

அப்பள்ளியோடு எவ்வித தொடர்பும் இல்லாத ஆதிக்க சக்திகளை நோக்கி 'உங்களுக்கும் இப்பள்ளிகளும் என்ன சம்பந்தம், உங்கள் பிள்ளைகள் இங்கு படிக்கிறார்களா?" – அநியாயமாக கொள்ளை யடிக்கும் வட்டிப்பணத்தில் நீங்கள் பள்ளிக்கு நன்கொடை கொடுங்களேஸ' என்ற பெற்றோர்களுக்கு பதிலளிக்க முடியாமல் முழித்தனர்.

உறுதியாக போராடிய தோழர்களையும், மக்களையும் 'ஆபாசமாகத் திட்டியும்', நமது மதிப்பிற்குரிய தியாகி தோழர், பாலன் அவர்களையும் இழிவாகப் பேசினார்கள். இவர்களுடன் மக்கள் விரோத கியூ பிரிவு போலீசும் போராடிய மக்களை மிரட்டியும், ஆதிக்க சக்திகளை தூண்டிவிட்டும் வழக்கம் போல் தனது சதி வேலைகளை அரங்கேற்றியது.

அனைத்தையும் எதிர்த்து மக்களின் ஆதரவுடன் உறுதியாக போராடியதால், நன்கொடையின்றி அனைத்து மாணவர்களும் பள்ளியில் சேர்க்கப்பட்டனர்.

அரசின் மக்கள் விரோத கல்விக் கொள்கையை எதிர்த்த இத்தகைய உழைக்கும் மக்களின் போராட்டம், உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கையினையும், புரட்சிகர அமைப்பின் அவசியத்தையும் உணர்த்தியது. மேலும் உள்ளூர் ஆதிக்க சக்திகளை அடையாளம் கண்டதுடன், அரசின் படுமோசமான மக்கள் விரோத நடவடிக்கைகளை புரிந்து கொள்ளவும் வகை செய்தது. இது ஒரு துவக்கமே.

***மாநிலக்குழு***
***முற்போக்கு மாணவர் சங்கம்.***



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்-2

# மராட்டிய மக்களால் துரத்தியடிக்கப்பட்ட 'ஸ்டெர்லைட்' தொழிற்சாலை

கோவா மக்களால் துரத்தப்பட்டு தமிழகத்தில் தஞ்சம் புகுந்த அமெரிக்க டூபான்ட் கம்பெனியைப் போன்று மராட்டிய மக்களால் துரத்தப்பட்டு இங்கு தஞ்ச மடைந்துள்ள இன்னொரு கம்பெனி 'ஸ்டெர்லைட்' ஆகும். இக்கம்பெனியால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் கேட்டின் விளைவாக பல நாடுகள் இக்கம்பெனியை தடை செய்துள்ளன.

சொந்த நாட்டு மக்களைப் பறிகொடுக்க, சுற்றுப் புறச் சூழலை கெடுக்க கோடி கோடி ரூபாயினை கையூட்டுப் பெற்றுக் கொண்டு அனுமதி அளித்துள்ளது ஆளும் வர்க்கம்.

1989–ஆம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில் இரத்தினகிரி என்ற சிறிய நகரில் 551 ஹெக்டர் பரப்பளவில், 900 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டது இக்கம்பெனி. இது அமெரிக்கவாழ் இந்தியருக்குச் சொந்த மானதாகும்.



ஸ்டெர்லைட் ஆலை அமைக்கப்படுவதை எதிர்த்து தூத்துக்குடி மக்களின் உண்ணாவிரதம்

இக்கம்பெனி கட்ட உள்ளூர் பஞ்சாயத்திடம் கூட அனுமதி பெறவில்லை. அனுமதியின்றி கட்டப்பட்டதை தெரிவிக்க பஞ்சாயத்து நிர்வா கம் தனது ஊழியரை அனுப்பியது. ஸ்டெர்லைட் கம்பெனியின் பொது மேலாளர் அவ்ஊழியரை கடுமையாக தாக்கினார். அக்கம்பெனிக்குப் பக்கபலமாக நின்று தான் விதித்த சட்டத்தை தானே மீறி ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை திறந்துவிடுவதில் முன்னணியில் அரசு நிற்கிறது.

### 'ஸ்டெர்லைட்' ஆலையால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள்

இந்த தாமிர உருக்காலை உற்பத்தியின் போது வெளியேறும் கழிவுகள் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்ததாகும். விவசாயம், மீன்பிடித்தொழில், உப்பளத்தொழில் ஆகியவை பாதிப்பதோடு மனிதர்களுக்கும் பல்வேறு கடுமையான நோய்களை உருவாக்கும்.

இதன் அபாயத்தை உணர்ந்த மக்கள் இக்கம்பெனிக் கெதிராக கொதித்தெழுந்தனர். பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அறிவு ஜீவிகள், மக்கள் கூட்டமைப்பை ஏற்படுத்தி ஆலையை விரட்ட உறுதி பூண்டனர்.

1993 ஆம் ஆண்டு 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அக்கம்பெனியை நோக்கி ஊர்வலம் நடத்தினர். இது நாள் வரை இது போன்ற ஊர்வலம் அங்கு நடைபெற்றதேயில்லை. அப்பகுதியில் கடையடைப்பும் நடத்தப்பட்டது. இதனால் ஆலையின் வேலைகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

மக்களின் கோபாவேசத்தைக் கண்டு அஞ்சிய அரசு, ஆய்வுக் குழு ஒன்றை அமைத்து மக்களை ஏமாற்ற முனைந்தது. குழு அறிக்கை அளிக்கும் வரை ஆலையில் வேலையை நிறுத்தவும் உத்திரவிட்டது. உண்மையில், மக்களின் போராட்டத்தினால் ஆலையின் வேலை ஏற்கனவே நிறுத்தப்பட்டது.

ஆனால் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்த தீர்மானித்தனர். ஆகஸ்ட் 15–ல் "ரத்தினகிரியை விட்டு வெளியேறு!" எனும் இயக்கம் தொடங்கப்பட்டது. 'இரத்தினகிரி டைம்ஸ்' என்ற பத்திரிகை ஸ்டெர்லைட் கம்பெனி தரும் விளம்பரங்களை பிரசுரிக்க மறுத்து விட்டது. இந்த ஆலைக்கு செல்வோரை ஆட்டோ, ரிக்ஷா, போன்ற வாகனங்களில் ஏற்றிச் செல்ல மாட்டோம் என்று ஓட்டுனர்கள் மறுத்துவிட்டனர். ஆலையின் ஊழியர்களை 'சமூகப் புறக்கணிப்பு' செய்யுமாறு அறைகூவல் விடப்பட்டது.

இருப்பினும் நாளடைவில் நிலைமை சீரடையும், அரசு அமைத்த குழுவும் நமக்கு சாதகமாக அறிக்கை தரும் என்றிருந்தது. அதே போல் அரசு அமைத்த குழுவும் ஆலைக்கு அனுமதி வழங்கியது. இது மட்டுமல்லாமல் ஆலை பாதுகாப்பிற்கு சிறப்பு காவல் படையையும் நிறுத்தியது. இது மக்களுக்கு மேலும் ஆவேசத்தை அளித்தது.

சிறப்பு காவல் படையை அகற்றக் காலக்கெடு விதித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர் மக்கள். அதுவும் பலனளிக்காததால் 1994 ஆம் ஆண்டு ஒருநாள் நள்ளிரவில் திடீரென்று சென்று ஆயுதம் தாங்கிய போலீசாரோடு மோதினர். இவ்வாறு தொடர்ச்சியாக மக்கள் ஆலைக்கு எதிராக போராடியதன் விளைவாக 1994 மே மாதம் அரசு அவ்வாலையை மூட உத்திரவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

### ஸ்டெர்லைட்டின் தமிழக நுழைவு

இரத்தினகிரி மக்களின் உறுதிமிக்க போராட்டத்தினால் விரட்டியடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் கம்பெனி அடுத்து எங்கே செல்லலாம் என்று எண்ணியபோது தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நினைவுதான் உடனே வந்தது. மக்கள் நலனில் எள்முனையளவும் அக்கறையின்றி ஏகாதிபத்தியங்களுக்கு சேவை செய்வதில் முன்னணியில் நின்ற ஜெயலலிதாவின் நினைவு அவர்களுக்கு ஏற்பட்டதில் ஒன்றும் ஆச்சரியப்படுவ தற்கில்லை.

ஸ்டெர்லைட் கம்பெனியிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு தூத்துக்குடியில் 500 ஏக்கர் பரப்பளவில் ரூ.1300 கோடி செலவில் தாமிர உருக்காலையையும் உராய்வு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையையும் கட்டிக் கொள்ள அனுமதி அளித்ததுடன், தானே முன்நின்று 1994 அக்டோபரில் அடிக்கல்லும் நாட்டினார்.

கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கியிருக்கும் தூத்துகுடி மக்கள் விவசாயம் செய்வதற்கே வழியின்றி அவதியுறுகின்றனர். தாமிரபரணி ஆறு ஒன்றையே நீராதாரமாகக் கொண்டு வாழ்கின்றனர். இந்நிலையில் இக்கம்பெனி தொடங்கினால் தாமிரபரணி ஆற்று நீர் கபளிகரம் செய்யப்படும். கொஞ்ச நஞ்சம் கிடைக்கும் நிலத்தடி நீர் ஆதாரமும் நஞ்சாகும். விவசாயம் கடும் பாதிப்புக்குள்ளாகும்.

இதனால் விவசாயிகள் நில புலன்களை விட்டு, நாடோடிகளாக அலைய வேண்டிய பரிதாப நிலை ஏற்படும்.

### தூத்துக்குடி மக்களின் போராட்டம்

அடுத்த மாதமே மக்களும் அ.தி.மு.க. தவிர்த்த அத்தனை அரசியல் கட்சிகளும் ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். கூட்டமைப்பு ஏற்படுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். சுவரெங்கும் எதிர்ப்பு முழக்கங்கள் எழுதப்பட்டன. இறுதியாக கடையடைப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது. பொதுக் கூட்டம், அரங்கக் கூட்டம் நடத்தப்பட்டது. கடந்த பிப்ரவரியில் மாபெரும் பேரணி பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் அபாயத்தினை விளக்கும் வகையில் ஒரு பெரிய இறந்த மீனை எடுத்துச் சென்றனர். இறுதியாக நடந்த பொதுக் கூட்டத்தில் இரத்தினகிரியிலிருந்து ஸ்டெர்லைட் கம்பெனியை விரட்டுவதற்கு பெரும் பங்காற்றிய அறிவியலாளர் டாக்டர் ராஷ்மி மயூர் மற்றும் நாடெங்கிலிருந்தும் வந்த சுற்றுச்சுழல், மனித உரிமை, பெண்கள் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

மக்களின் போராட்ட எழுச்சியை கண்ட ஆலை நிர்வாகம் போராட்டத்தை சீர்குலைக்க முன்னணியினரை விலைக்கு வாங்குதல், அவதூறு பிரச்சாரம் செய்தல், போலீசையும், அரசு நிர்வாகத்தையும் தனக்கு சாதகமாக பயன்படுத்துதல் போன்ற வஞ்சக செயல்கள் மூலம் மக்களின் ஒற்றுமையையும் உறுதியையும் குலைக்க சதிவேலை செய்தது.

ஆனால் அதையெல்லாம் மீறி கடந்த மார்ச் மாதம் தூத்துக்குடி வட்டாரமே ஸ்தம்பிக்குமளவு ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டம் நடந்தது.

மீனவர்கள், மாணவர்கள், விவசாயிகள் – என அனைவருமே போராட்டக் களத்தில் இறங்கினர். மாணவர்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கண்டன ஊர்வலம் ஆர்ப்பாட்டம் ஆகியவையும் நடத்தினர். அதே வேளை காலவரையரையற்ற உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றது. மீனவர்கள், விவசாயிகள் இணைந்து பம்பாயிலிருந்து ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு கச்சாப் பொருளை ஏற்றிக் கொண்டு வந்த கப்பலை மறிக்க நள்ளிரவிலேயே படகில் ஏறிச் சென்று கிட்டத் தட்ட 15 மணி நேரத்திற்கு மேல் மறித்தனர்.



## ஏகாதிபத்தியம்

அன்மையில் நடந்து முடிந்த சட்டமன்ற பாராளுமன்ற தேர்தலின் போது இப்பிரச்சனை முக்கியத்துவமாக அவ்வட்டாரத்தில் அமைந்தது. ஸ்டார்லைட் ஆலையை எதிர்த்துப் பேசாமல் தொகுதி பக்கம் நுழைய முடியவில்லை ஓட்டுக் கட்சிகள் தூத்துக்குடியை பொறுத்த வரையில் ஸ்டார்லைட் எதிர்ப்பு என்பது தீர்மான கரமாக மாறிவிட்டது.

நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்னால், அமெரிக்க டூபான்ட், ஸ்டெர்லைட் நிறுவனங்களை எதிர்ப்பது போல நாடகமாடிய தி.மு.க. இன்று ஆட்சியிலமர்ந்ததும், இத்தகைய அபாயகர நிறுவனங்களை இரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கின்றது. இத்தகைய மக்கள் விரோதிகளான ஜெயலலிதா, கருணாநிதி போன்ற தரகர்களை டூபாண்ட், ஸ்டெர்லைட் போன்ற ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் கொள்ளைச் சுரண்டலை தொடர எண்ணினாலும், அதனைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளாமல் உறுதியாக முறியடிப்பார்கள் என்பதனையே தொ.டரும் போராட்டங்கள் காட்டு கின்றன.

** பாஸ்கர்*




படிப்பகம்

www.padippakam.com

# தேர்தலுக்குப்பின்...

## தொடரும் புதிய பொருளியல் கொள்கையும் தீவிரமாகும் நெருக்கடிகளும்!



சித்திரம் - தினமணி!

ஒரு வழியாக பாராளு மன்றத் தேர்தல் நாடகம் முடிந்து விட்டது. இந்தப் பொதுத் தேர்தல் இந்தியாவின் அரசியல் நெருக் கடியை தெளிவாகவே படம் பிடித்துக் காட்டி விட்டது. பத்திரிகைகளும் கருத்துக் கணிப்பு களும் அனுமானித்தபடி, யாருக்குமே குறைந்த பட்ச பெரும்பான்மை கூட கிடைக் கவில்லை. இந்து பாசிச பாரதிய ஜனதா மற்றும் அதன் கூட்டணிக்கு 194 சீட்டுகள் கிடைத்துள்ளன. ஜனதா தளக் கூட்டணிக்கு 63 சீட்டுகளும், இடதுசாரி கூட்டணிக்கு 53 இடங்களும், மாநிலக் கட்சிகள் உதிரிக் கட்சிகளுக்கு 87 இடங்களும் கிடைத்தன. காங்கிரசுக்கோ வெறும் 139 இடங்கள் மட்டுமே கிடைத்தன. தொடர்ந்து இரண்டு பொதுத் தேர்தல்களில் யாருக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலை தொடர்கிறது.

1947க்குப் பின் காங்கிரசின் ஒரு கட்சி ஆட்சி 30 ஆண்டுகளாகத் தொடர்ந்தது, இடையில் 77–ல் ஜனதா பெரும்பான்மை பெற்றது, பிறகு மீண்டும் காங்கிரஸ் வந்தது. ஆனால், இன்று ஒரு கட்சி மட்டுமல்ல, எந்த ஒரு தனிக் கூட்டணியும் கூட சாதாரண பெரும்பான்மை பெறவே தவியாய்த் தவிக்கின்றன. இந்திய அரசியல் சூழலின் இந்த நிலையற்ற தன்மை ஆளும் வர்க்கங்களை அஞ்சி நடுநடுங்க வைக்கிறது. இது அரசியல் நெருக்கடியையும் ஆளும் வர்க்கங் களின் இயலாமையையும் சுட்டிக் காட்டு கிறது. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை நரசிம்மராவின் காங்கிரஸ் படுதோல்வி அடைந் துள்ளது. ஆனால், யாராலும் வெற்றி பெற முடியவில்லை என்பதுதான் உண்மை. ஆம்ஸ டில்லியைப் பிடிப்போம் என்று மார்தட்டிய பா.ஜ.க. தனது 'தோழமைக் கட்சிகளோடு சேர்ந்தும் பெரும்பான்மை பெறவில்லை. ஜனதா தளம் – இடதுசாரிக் கூட்டணியோ 100 சீட்டுகளை எட்டவே தட்டுத் தடுமாறிக் கொண்டுள்ளது. அது மட்டுமல்ல. மாநிலத் தேர்தல்களில் கூட, ஆண்டு கொண்டிருந்த கட்சிகள் படுதோல்வி அடைந்துள்ளன. (அஸ்ஸாம், கேரளா, ஹரியானா – காங்கிரஸ், தமிழ்நாடு – அதிமுக). மேலும், பாராளுமன்றத் தேர்தல் களிலும் கூட இக்கட்சிகள் தாம் ஆளும் மாநிலங்களில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன. மொத்தத்தில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெற முடிய வில்லை என்பதுடன், மக்களின் எதிர்ப்பு ஓட்டால் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன.

முதலாளிய பத்திரிகைகளே கூறுவது போல, இந்திய (போலி) பாராளுமன்ற ஆட்சிமுறையே கேள்விக்குள்ளாக் கப்பட்டுள்ளது. மக்களின் நம்பிக்கையை இழந்து விட்ட ஆளும் வர்க்கக் கட்சிகள் தமது தேர்தல் வாக்குறுதிகள் மூலமும், கவர்ச்சி முழக்கங்கள் மூலமும் மக்களைக் கவர முடியவில்லை. எதிர்ப்பு வாக்குகள் தான் வெற்றிக்குக் காரணமாக உள்ளன. அதிலும் உச்ச கட்டமாகத் தொங்கு பாராளுமன்றம் இரண்டாவது முறையாகத் தொடர் வது என்பது பாராளுமன்ற ஆட்சி முறையின் சிதைவையும் வீழ்ச் சியையும் கட்டியம் கூறி அறிவிக்கின்றது.

### புதிய பொருளியல் கொள்கை – பாராளுமன்ற சவப்பெட்டியில் கடைசி ஆணி

இன்று தோன்றியிருக்கக் கூடிய சூழல் திடீரென்று தோன்றியதல்ல. இதற்குத்தனி நபர்களின் ஊழலும் அராஜகமும் மட்டும் அடிப்படைக் காரணமல்ல. 49 வருட கால (போலி) சுதந்திர ஆட்சியின் வளர்ச்சிதான் இன்றைய நிலைக்கு பின்னணியாகும். ஏகாதிபத்திய சார்பும் நிலவுடமைச் சுரண்டலும் தொடர்ந்து ஏறத்தாழ ஐம்பதாண்டுகளாக மக்கள் வாழ்க்கை யைச் தொடர்ந்து சூறையாடி வருகிறது. பாராளுமன்ற ஆட்சி நிலவுடமைச் அமைப்பைப் பாதுகாத்து நாட்டின் சுய வளர்ச்சியைத் தடுப்பதுடன் நாட்டை ஏகாதிபத்திய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. இதன் விளைவாக மக்களின் வாழ்க்கை அதலபாதாளம் நோக்கிச் சென்று கொண்டுள்ளது. மறுபுறம் சுய வளர்ச்சியற்ற ஏகாதிபத்திய சார்புப் பொருளா தாரமோ, கடன் வலையில் சிக்கி மீள முடியாத நெருக்கடியில் மாட்டிக் கொண்டுள்ளது. இன்று, ஏகாதி பத்தியங்களின் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, ஒட்டு மொத்த அடிமை நிலையையும் ஈவி ரக்கமற்ற சுரண்டலையும் நோக்கிச் சென்று கொண்டுள்ளது.

ஏகாதிபத்தியங்களின் நிர்ப்பந் தம் காரணமாக நரசிம் மராவ் அரசு நடை முறைப்படுத்தி வந்த புதிய பொருளா தாரக் கொள்கைகள் இந்த நெருக் கடியைத் துரிதப்படுத்தின.

அந்நிய முதலீடுகளை தடை யின்றி அனுமதிப்பது, மக்களின் அடிப்படை தேவைகளுக்கான



படிப்பகம்

www.padippakam.com

செலவுகளை வெட்டுவது, மானியங்களை நீக்குவது, அரசுத் துறைகளைத் தனியார் மயமாக்கு வது, அரசுத் துறை வேலை வாய்ப்புகளை அடியோடு குறைப்பது என்று மக்கள் விரோதக் கொள்கைகள் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டன.

நரசிம்மராவின் ஆட்சியில் மட்டும் வெளிநாட்டுக் கடன் (ரூபாய் மதிப்புக் குறைப்பின் விளைவாக) ஒரே நாளில் 70, 000 கோடி அதிகரித்தது. நரசிம்மராவ் ஆட்சிக்கு வரும்போது 1,40,000 கோடியாக இருந்த அந்நியக் கடன் இன்று 3,50,000 கோடியாக அதிகரித்துள்ளது. இது மேன்மேலும் அதிகரித்து கொண்டே வருகின்றது. இந்த கடனுக்கான வட்டி மட்டும் கடந்த 5 ஆண்டுகளில் 20,000 கோடியிலிருந்து 60,000 கோடியாக அதிகரித்துள்ளது. 1990–ல் அரசு வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வட்டி கட்ட பயன்படுத்தப்பட்டது. இன்று அரசு வருமானத்தில் 47%வட்டி கட்ட மட்டுமே செலவிடப்படுகிறது.

ஒரு புறத்தில் நாடு கடுமையான கடன் பொருளாதாரத்தில் மூழ்கியுள்ளது. மறு புறத்தில் நமது அரசோ கடனை அடைப்பதற்கும் வட்டிக் கட்டுவதற்கும் மேலும் கடனை வாங்கிக் குவிக்கின்றது. இதனால் நாட்டை மீளமுடியாத கடன் வலைக்குள் சிக்க வைத்து விட்டனர் நமது ஆட்சியாளர்கள்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையோ கற்பனை செய்ய முடியாத அளவு அன்றாடம் அதிகரித்து வருகின்றன. இதன் விளைவாக உண்மை ஊதியங்களோ அதலபாதாளத்திற்கு செல்கின்றன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கியும் மன்மோகன் சிங்கும் எடுத்த முயற்சிகள் தோல்வியைத் தழுவின.

புதிய பொருளியல் கொள் கைகள் பெருமளவிலான மூலதனம் அந்நிய நாடுகளுக்குச் செல்லவும் வழி வகுத்துள்ளது. அரசியல் வாதிகள், பெரும் அதிகார வர்க்கம் பெரு முதலாளிகள் ஆகியோர் தங்கள் கருப்புப் பணத்தை ஹவாலா பாதை மூலம் டாலர்களாக மாற்றி அந்நிய நாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். இது பொருளியல் நெருக்கடியை தீவிரமாக்கியுள்ளது.

உலகமயமாதலும் கட்டுமான சீரமைப்பு நடவடிக்கைகளும் சிறு தொழில்களை திவாலாக்கி வருகின்றன. பன்னாட்டு நிறு வனங்கள், நாடு கடந்த நிறுவனங்கள் மற்றும் தரகு பெரு முதலாளிகள் நிறுவனங்களோ பெரும் செல்வத்தை அள்ளிக் குவிக்கின்றன. ஐ.எம். எப்., உலக வங்கியின் நிபந்தனைகள் காரணமாக இந்தியாவின் மீதான ஏகாதிபத்திய பிடி மேலும் இறுகியுள்ளது. உலக வர்த்தக நிறுவனத்தில் (WTO) இணைந்ததன் மூலமாக ஏகாதிபத்தியங்களின் கட்டளைகளுக்கு முழுமையாக அடிபணிந்தது ராவ் அரசு.

**தீவிரமடையும் சமூக முரண்பாடுகள்:**

கடந்த ஐந்து வருட ராவ் ஆட்சி மக்களின் வாழ்வைக் கேள்வி குறியாக்கியுள்ளது. கோடிக் கணக்கான தொழிலாளர்கள் வேலையற்று தெருவில் நிற்கின்றனர். தொடரும் பொருளியல் நெருக்கடிகளால் ஆலை மூடல், ஆட்குறைப்பின் விளைவாக இவ் வெண்ணிக்கை அன்றாடம் அதிகரித்து வருகின்றது. கிராமப் புறங்களில் நிலமற்ற மக்களின் அன்றாட போராட்டங்கள் மீதான அரசின் ஒடுக்குமுறையும் நிரந்தரமாகிவிட்டது. மொத்தத்தில் மக்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் மீது கொடூர அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

**ஊழல் புதைச் சேற்றில்**
**ஆளும் வர்க்க கட்சிகள்:**

மறு புறமோ அரசியல் வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தின் ஊழலைக் கண்டு உலகமே சிரிக்கின்றது. அதிலும் ஹவாலா மோசடியோ இந்தியப் பொருளா தாரத்தையே நாசமாக்கி விட்டது. அனைத்து ஆளும் வர்க்க கட்சிகளும் அதிகார வர்க்கமும் இணைந்து நடத்திய இந்த மோசடி மக்களுக்கு இவர்களின் தரகுத் தன்மையை தெளிவாக இனங் காட்டியுள்ளது.

இப்படி 49 ஆண்டு 'சுதந்திர ஆட்சியின் லட்சணத்தை மக்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டுள்ளனர். சனநாயகத் தன்மை சிறிதுமற்ற பாராளு மன்றமும், ஆளும் வர்க்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளும் மக்களின் கடும் வெறுப்பை சம்பாதித்துள்ளன. மக்கள் எந்த ஆளும் வர்க்க கட்சியையும் நம்பத் தயாரில்லை. தேர்தல் முறை மீது நம்பிக்கை இல்லாதது மட்டுமல்ல, கடும் வெறுப்பும் தோன்றியுள்ளது. அத்துடன் மக்கள் தமது அவல நிலையை மாற்ற நாட்டின் பல பகுதிகளில் அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்தியும் போராடி வருகின்றனர்.

கூலி ஏழை விவசாயிகள் வாழ வழியின்றி நகர்ப்புறங்களுக்கு வந்து சேருகின்றனர். நடுத்தர விவசாயி களும் நிலமற்று ஒட் டாண்டிகளாகி வருகின்றனர். சிறு தொழில்கள் நசிவது அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டது. வேலையில்லா திண் டாட்டமோ கற்பனைக் கெட்டாத அளவு இடத்தை அடைந்துள்ளது. மற்றும் பஞ்சம் பட்டினிச் சாவுகள் நாட்டின் நிகழ்ச்சி நிரலில் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளன. ஏறத்தாழ **35%**க்கும் மேலான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர்.

**ஒடுக்குமுறைக் காட்டாட்சி!**

காஷ்மீர், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்களில் தேசிய விடுதலைக்காக போராடும் மக்கள் மீது பாசிசக் காட்டாட்சி ஏவப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

மதச் சிறுபான்மை மக்கள் மீது இந்துப் பாசிச சக்திகள் மற்றும் அரசின் கொடூரத் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

பெண்கள், தலித்துக்கள், மற்றும் இதர ஒடுக்கப்பட்ட பிரிவின் மீதான தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

உழவர் புரட்சிக்காகவும், ஏகாதிபத்திய நிலவுடமைச் சுரண்டலை எதிர்த்தும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் தலைமையில் போராடும் ஆந்திரா, தண்டகாருண்யா, பீகார் உழவர் மற்றும் இதர மக்களின் மீதான மனிதத்தன்மையற்ற ஒடுக்கு முறைகள் தினசரி அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

கல்வி, சுகாதாரம் போன் றவை தனியார்மயமாவதால் பெரும்பான்மை மக்களுக்கு அவை எட்டாக் கனியாகி வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

நடந்து முடிந்த தேர்தல்களும் இந்த நிலையை தெளிவாக காட்டியுள்ளன.

ஒருபுறம் யாருக்கும் பெரும் பான்மை இல்லை. மறுபுறம் அனைத்து மாநிலங்களிலும் ஆளும் கட்சிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இது மக்களின் கடுங்கோபத் தை காட்டுகின்றது. அதோடு மட்டு மின்றி, தேர்தலின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த சேஷனின் பல செப்படி வித்தைகளும் பெரும் பான்மை மக்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்தி விடவில்லை. இந்த முறை வேட்பாளர்கள் மீது மக்கள் நேரடியாக நடத்திய தாக்குதல்களும், அவமானப் படுத்தி அனுப்பியதும் தன் னெழுச்சியாக பல பகுதிகளில் நடந்த தேர்தல் புறக் கணிப்புகளும் மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றன. மேலும் பல பகுதிகளில் துப்பாக்கி துணையோடு மக்களை மிரட்டித்தான் வாக் களிக்கச் செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது இந்த தேர்தலின் சிறப்பான வளர்ச்சி. ஆந்திரா, தண்ட காருண்யா, பீகாரில் போலீஸ் நரவேட்டை நடத்தியே தேர்தலில் மக்களை வாக்களிக்க வைத்தது. காஷ்மீர் தேர்தலோ முதலாளித்துவ பத்திரிகைகளே கைகொட்டி சிரிக்குமளவிற்கு ராணுவ மிரட்டலின் மூலம் மட்டுமே நடந்துள்ளது.

மொத்தத்தில், இன்றைய சமூக அமைப்பின் மீது கடும் வெறுப்பும், பாராளுமன்ற முறைமீதான நம்பிக்கை யின்மையும் ஓட்டுக் கட்சிகளின் மீது கோபமும் இந்த தேர்தலில் தெளிவாக வெளிப் பட்டுள்ளன. மக்கள் மேலும் மேலும் சமூக அமைப்புக் கெதிரான ஆயுதப் போராட்டங்களின்பால் ஈர்க்கப் பட்டு வருகின்றனர்.

மக்களது போராட்ட எழுச்சி மற்றும் பொருளியல் நெருக்கடியின் விளைவாக ஆளும் வர்க்கங்களுக் கிடையிலான நாய்ச்சண்டை சந்தி சிரிக்கின்றது. ஏகாதி பத்தியங் களின் கொள்ளையில் விழும் எச்சில் துண்டுகளைப் பொறுக் குவதற்கும், பல்வேறு ஏகாதிபத்தி யங்களுக்கு கிடையில் நடை பெறும் போட்டியின் விளைவாகவும் இந்திய ஆளும் வர்க்கக் கட்சிகள் தமக்குள் கடும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. வீழ்ந்து வரும் இந்தியப் பொருளாதாரமோ இவர்களின் போராட்டத்தை தீவிரப்படுத்து கிறது.

### பதவிக்கான நாய்ச் சண்டைகள்

தேர்தல் முடிவுகள் வெளிவர ஆரம்பித்த உடனேயே பல்வேறு ஓட்டுக் கட்சிகள் எப்பாடு பட்டாவது ஆட்சியைப் பிடிக்க நாய்ச் சண்டை போட ஆரம்பித்து விட்டன. யாருக்கும் பெரும் பான்மை இல்லாத நிலையில் எப்படிப்பட்ட சந்தர்ப்பவாதக் கூட்டணியை அமைத்தாவது ஆட்சிப் பீடம் ஏற ஆலாய் பறந்தன. காங்கிரஸின் தோல்வி உறுதியாகி விட்டதால் பா.ஜ.க.வும் ஜனதாதளக் கூட்டணியும் தமக்கு ஆட்சி யமைக்க அழைப்பு விடுக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக் கொண்டன. தேர்தலில் ஒருவரை ஒருவர் கடுமையாக எதிர்த்துக் கொண்ட, கொள்கை ரீதியாக வேறுபட்டவர்களாக காட்டிக் கொண்ட கட்சிகளின் ஆதரவு வேண்டி தூதுவிட்டு தனது சந்தர்ப்ப வாதத்தை அம்பலப்படுத்திக் கொண்டன.

இருக்கும் கட்சிகளிடையே நேர்மை யான, உறுதியான இலட்சியத் தெளிவு கொண்ட கட்சி என்று பீற்றிக் கொண்ட பா.ஜ.க. பெரும்பான்மை கிடைக் காமலேயே ஆட்சி யமைக்க எடுத்த முயற்சிகள் கேலிக் கிடமாகிவிட்டது. தான் தான் அதிக இடங்களைப் பெற்றகட்சி, எனவே தன்னைத்தான் ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என்று ஆளாய் பறந்தது. தனக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது என்று தெரிந்தும், ஜனாதிபதி, ராவ் கூட்டு சதியின் துணையோடு ஆட்சி ஏறியது. காங்கிரஸை உடைக்கவும் மாநிலக் கட்சிகளை இழுக்கவும் பல்வேறு அரசியல் தரகர்களின் மூலமாக கடும் முயற்சி செய்தது. தனது ஆட்சி கவிழ்ந்தால் நிலையான ஆட்சி நடைபெறாது, நாடு இரத்தக் களரியில் மூழ்கும் என்றெல்லாம் மிரட்டிப் பார்த்தது. ஜனாதிபதி உரையில் தனது உன்னத லட்சியமான 'அயோத்தி ராமனையும்' விட்டுக் கொடுப்பது போல் நடித்துப் பார்த்தது. மக்களின் தீர்ப்பை எதிர்க்கட்சிகள் தோற்கடிக்கப் பார்க்கிறார்கள் என புலம்பியது. வாஜ்பாய் சிறந்த மனிதர், தூய்மையான மனிதர் மத சார்பற்ற மிதவாதி என எண்ணிலடங்கா வேடங்களை போட்டுப் பார்த்தது. இருப்பினும் இதர ஆளும்வர்க்க கட்சிகள் தங்களது ஆட்சியமைக்கும் வெறியினால் பா.ஜ.க. ஆட்சி ஏற்பதை உறுதியாக மறுத்ததால், படுகேவலமாக பதின்மூன்றே நாட்களில் வீழ்ச்சி யடைந்தது. பா.ஜ. கட்சியின் நேர்மை, உறுதி கொண்ட கட்சி என்ற மாயை முற்றிலுமாக அம்பலப்பட்டு போனது.





படிப்பகம்

www.padippakam.com

இன்று ஆட்சியிலிருக்கும் ஜனதாதளமோ தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மாநிலக்கட்சிகளின் காலில் விழுந்து ஐக்கிய முன்னணியை உருவாக்கியது. காங்கிரஸை எதிர்ப்பதாக கூறிக் கொள்ளும் ஜனதாதளம், இடதுசாரிகள் மற்றும் மாநிலக் கட்சிகள் காங்கிரஸ் தயவில்தான் ஆட்சி யமைத்துள்ளன. நரசிம்மராவின் ஊழலையும், மக்கள் விரோத கொள்கைகளையும் எதிர்ப்பதாக வேடமிட்டு ஓட்டு வாங்கினார்கள். இன்று அதே நரசிம்மராவிடம் கெஞ்சி ஆதரவு பெற்றனர். இது மட்டுமின்றி விரல் விட்டு எண்ணக் கூடிய அளவு எம்.பி.க்களை பெற்றுள்ள ஜனதாதளத்தின் பிரதமர் பதவிக்கு ஏறத்தாழ அனைவருமே ஆசைப்பட்டு, தமக்குள் நாய்ச் சண்டையிட்டனர். கடைசி நிமிடம் வரை பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடிய வில்லை. இறுதியில் ஒருவழியாக பேரம் கனிந்ததும் ஆண்டிகள் மடம் கட்டிய கதையாக 13 கட்சிகளின் கூட்டோடு ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்டது. புதிய பொரு ளாதாரக் கொள்கையை கர்நாடகத்தில் தங்கு தடையின்றி நடைமுறைப்படுத்தி வந்த தேவகவுடா பிரதமராக தேர்ந் தெடுக்கப்பட்டார். உட் கட்சிப்பூசல், ராவின் மிரட்டல் என நித்தியக் கண்டமாகத் தொடங்கியுள்ளது ஐக்கிய முன்னணி ஆட்சி. அமைச் சரவையில் இடம் பெற்றுள்ள தி.மு.க. தா.ம.க தெலுங்குதேசம், போன்ற மாநிலக் கட்சிகளோ நெருக் கடியினைப் பயன் படுத்திக் கொண்டு தமது ஆதாயங்களைப் பெருக்கிக் கொள்ளும் 'புனித' நோக்குடன் தான் அரசியலில் இணைந் துள்ளன.

'ரா'வின் காங்கிரஸோ படுதோல்வியைச் சந்தித் திருப்பினும் தனது ஆதரவின் மூலம் நீடிக்கும் அரசைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட துடிக்கின்றது. ராவ் கும்பல் மற்றும் இதர காங்கிரஸ் புள்ளிகளின் கோடானு கோடி ஊழல்களை மூடி மறைக்கவும், வாய்ப்புக்கிடைத்தால் கட்சிகளை உடைத்து ஆட்சி ஏறவும் துடித்துக் கொண்டிருக்கின்றது.

மொத்தத்தில் தேர்தலுக்குப் பின் நடைபெற்றுக் கொண் டிருக்கும் நாடகம், அரசியல் கட்சிகளின் உண்மை சொரூபத்தை படம் பிடித்துக் காட்டுகின்றது. அவர்களின் இலட்சிய (?) முழக் கங்கள் இன்று வெத்து வேட்டாகி விட்டன. பதவிகளைப் பிடித்து பங்குகளை அள்ளுவது மட்டும்தான் அவர்கள் நோக்கம் என்பது தெளிவாகி உள்ளது. **ஆட்சிக்குவர இவர்கள் அடிக்கும் கூத்து ஒருபுறம் என்றாலும் மக்களுக் கெதிரான கொள்கைகளில் எல்லோரும் ஒரே அணியாகவே உள்ளனர். குறிப்பாக புதிய பொருளியல் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதிலும் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விடுவதிலும் யாருக்கும் வேறுபாடு கிடையாது.**

## 'ரா' வின் புதிய பொருளாதார கொள்கையும், பா.ஜ.க. – ஐ.மு.யின் குறைந்தபட்ச திட்டமும்

சுதேசி பொருளாதாரத்தைக் கட்டி அமைப்பதாக கூறி வந்த பா.ஜ.கட்சி அமெரிக்க என்ரானை' மறுபடியும் கட்டுவதற்கு அனுமதி அளித்ததன் மூலம் மக்களிடத்தில் ஏற்கனவே அம்பலம் பட்டுப் போயிருந்தது. மையத்தில் ஆட்சிக்கு வந்தவுடன் அது **ஜனாதிபதி உரையில், ராவ் அரசின் பொருளியல் கொள்கைகள் நல்ல முன்னேற்றத்தை தந்துள்ளதாகவும், அவை தொடரப்படும் என்றும் அறிவித்தது.**

மேலும் நேரடி வெளிநாட்டு முதலீடு பற்றிய கொள்கையை அறிவிக்கப் போவதாகவும் கூறியது. எல்லாவற்றையும் விடக் கேவலமாக பதின்மூன்று நாள் ஆட்சிக் குள்ளாகவே, **என்ரானுக்கு அனுமதி வழங்கி, தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை அப் பட்டமாக காட்டிக் கொண்டது.**

"காங்கிரஸின் புதிய பொருளியல் கொள்கைகளை நாட்டுக்குப் பயன்தரும் வகையில் மாற்ற வேண்டும். அந்நிய முதலீடுகள் நாட்டைச் சூறையாட அனுமதிக்கமாட்டோம்" (குறிப்பிட்ட துறைகளில் மட்டும் அனுமதிப் பார்களாம்) என்று மழுப்பி வந்ததைக் கூட விட்டுவிட்டு, தாம் முழுமையான ஏகாதிபத்திய எடுபிடிகள் தாம் என்பதை நம்பிக்கை வாக்கு பெறும் முன்னரே நிரூபித்து விட்டனர்.

"கோகோ கோலா, பெப்சி கோலாவை எதிர்ப்போம் பாரம்பரியத் தொழில்களைப் பாதுகாப்போம்" அந்நிய நாடுகளின் பண்பாட்டை எதிர்ப்போம்" என்றெல்லாம் இந்துத்துவ நிலையி லிருந்து பா.ஜ.க. தந்து வந்த வீர முழக்கங்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தவுடன் பெட்டிக்குப் போய் முடங்கிவிட்டன். புதிய பொருளியல் கொள்கையின் சீர்கேடுகள் பற்றிய அவர்களது குற்றச்சாட்டுகள் எல்லாம் பு.பொ.கொ –வுக்கு நற்சான்றிதழ்களாகவும், புகழுரை களாகவும் மாறியதன் காரணம் அந்த "இராமருக்குத்தான்" வெளிச்சம்ஸ இந்து வெறியை தேசியமாகவும். அகண்டபாரத வெறியை தேச பக்தியாகவும் முழக்கி மக்களை மோதவிட்டு ஏகாதிபத்திய சுரண்டல் தங்குதடையின்றி நடைபெற உதவும் பாரம்பரிய தரகுத் தன்மையையும் பாசிசத் தன்மையையும் முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டது.

மறுபுறம் "இடது" சாரிகளின் ஆதரவு பெற்ற, "முற்போக்கு" மாநிலக் கட்சிகளுடன் கூட்டாக அரசு அமைத்துள்ள ஜனதாதள அரசோ, ஏகாதிபத்தியங் களுக்குத் தொண்டூழியம் செய்வதில் ராவையும் மிஞ்சி வருகிறது. ஆம்! தனது குறைந்த பட்ச திட்டத்திலேயே புதிய பொருளாதார கொள்கைகள் தொடரும் என்று கூறியுள்ளது ஐக்கிய முன்னணி அரசு. மேலும், **வெளிநாட்டு மூலதனங்கள், பொதுத் துறையைத் தனியார் மயமாக்கல் போன்றவற்றை வெளிப்படையாகவே ஆதரிக்கிறது.** அது மட்டுமல்ல. "பு.பொ.கொ. வை மனிதாபிமான நோக்கோடு நடைமுறைப்படுத்த வேண்டும்". சமூக நீதி பாதுகாக்கப்பட வேண்டும். விவசாயிகளின் நலன்களுக்கு முன்னுரிமை "என்றெல்லாம் பசப்பிய ஜனதா தளம், அதை யெல்லாம் குப்பைக் கூடைக்கு அனுப்பிவிட்டது. **தொழில் அமைச்சர் முரசொலிமாறன் தொழில் துறை மேன்மேலும் தாராளமயமாக்கப்படும் என்று அறிவித்து, அந்நிய முதலாளிகளுக்கு தனது விசுவாசத்தைக் காட்டுகிறார். ப.சிதம்பரமோ எல்லாவற்றிற்கும் மேலே சென்று, அரசுத்துறை பொதுத்துறையில் ஆட்குறைப்பு, வேலைக்கு ஆள் எடுப்பு நிறுத்துதல் மற்றும் சம்பள உயர்வு மறுப்பு என்று அறிவித்துள்ளார்.** இதன் மூலம் மிகப் பெரும் வேலை வாய்ப்பு தரக் கூடிய

– தொடர்ச்சி 19 ஆம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com



# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (

# அனைத்திந்திய

## இந்திய புதிய சனநாயகப் புரட்சியி



1995 நவம்பர் திங்களின் இறுதி பதினைந்து நாட்கள் இந்தியப் புரட்சிகர இயக்க வரலாற்றில் ஒரு சிவப்பு அத்தியாயமாக குறிக்கப்படும். நடைபெற்று வரும் இந்திய புதிய சனநாயகப் புரட்சியின் திருப்புமுனையைச் சுட்டிக் காட்டிய நாட்கள் அவை. அந்த நாட்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த புடம் போடப்பட்ட புரட்சியாளர்கள் இந்தியப் புரட்சியின் எதிர்காலம் குறித்து நடத்திய தீவிரமான விவாதங்களுக்கு சாட்சி பகன்றன. பதினைந்து ஆண்டுகளின் புரட்சிகர அனுபவங்களையும் நடைமுறைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் தொகுத்தளித்த நாட்கள் அவை. இந்த நாட்கள் நாடு முழுமையும் பல்வேறு கொரில்லா மண்டலங்களை உருவாக்கவும் வட தெலுங்கானா மற்றும் தண்டகாரண்யா கொரில்லா மண்டலங்களை அடுத்த உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லவும் புரட்சியாளர்கள் கொண்டுள்ள தளர்வற்ற நெஞ்சுறுதிக்கு நடைமுறை சாட்சியாக விளங்கின. அந்த பதினைந்து நாட்களில் மிக அரிய நிகழ்வு ஒன்று நடைபெற்றது! ஆம்! 1970ல் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ)யின் 8வது பேராயத்தின் உண்மையான வாரிசான இ.க.க. (மா.லெ) (ம.யு)த்தின் அனைத்திந்திய சிறப்பு மாநாடு. அந்த நாட்களில் தான் நடந்தேறியது.

1970 முதல் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் மிக முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 1972ன் மத்தியில் இயக்கத்திற்கு ஏற்பட்ட கடும் பின்னடைவுகள் மார்க்ஸிய-இலெனினிய குழுக்கள் தலைவர்களிடையே முதற்கொண்டு பல்வேறு பிளவுகள். திசை விலகல்கள் மற்றும் சீரழிவுகள் ஆகியவை முதற்கட்டத்தில் நிகழ்ந்தது. பின்னர் இயக்கம் மற்றும் புரட்சிகர சக்திகள் ஆகியவை சீரமைப்பும் புத்துயிரும் அடைந்தன. இது குறுங்குழுவாதம் மற்றும் சாகச வாதத்திற்கு எதிராக ஒரு புறமும் வலது விலகல் மற்றும் பிளவு ஆகியவற்றிற்கு எதிராக மறு புறமும் புரட்சியாளர்களின் தொடர்ச்சியான போராட்டம் மூலம் மட்டுமே புரட்சிகர இயக்கம் புத்துயிர் பெற்று முன்னேற முடிந்தது.

மேற்கண்ட தவறான போக்குகளை எதிர்த்துப் போராடும் நிகழ்ச்சிப் போக்கில். அதாவது ஆந்திரத்தில் பருண்மையான புரட்சிகர நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு புரட்சிகர மக்கள் திரள் இயக்கத்தை உருவாக்கிய நிகழ்வுப் போக்கில். புதிய வகையிலான கட்சியாக இ.க.க. (மா-லெ) (ம.யு) 1980 ஏப்ரல் 22-ல் அமைக்கப்பட்டது. மக்கள் யுத்தத்தின் 15 ஆண்டு கால வரலாறு என்பது சர்வதேச-உள்நாட்டு வர்க்க எதிரிகள் மற்றும் பிற்போக்கு வாதிகளுக்கு எதிரான வீரத்தியாகம் நிறைந்த அஞ்சாத போராட்டமாகும். கட்சியானது. நக்சல்பாரி மற்றும் ஸ்ரீகாகுளம் போராட்டங்களின் பெருமை மிக்க பாரம்பரியத்தைத் தொடர்ந்ததோடு இந்திய ஜனநாயகப் புரட்சியின் பொதுவழி மற்றும் 1970 திட்டம் ஆகியவற்றை உயர்த்திப் பிடித்ததுடன் மார்க்ஸிய- லெனினிய-மாவோ சிந்தனையின் பெயரால் புரட்சியாளர்கள் என்ற முகமூடியணிந்துள்ள திரிபு வாதிகளான வினோத் மிஸ்ராவின் லிபரேஷன் குழு. பிளவு வாதி

சத்யநாராயண் சிங். அஷிம் சாட்டர்ஜி மற்றும் கனு சன்யால் போன்ற ஓடுகாலிகளையும் எதிர்த்து சமரசமற்ற போராட்டதையும் நடத்தியுள்ளது.

1980-ல் நிகழ்ந்த இ.க.க. (மா-லெ) (ம.யு) வின் உருவாக்கத்தின் போது கனவாக மட்டுமே இருந்த கொரில்லா மண்டலக் கண்ணோட்டமானது. கட்சித் தலைமையின் உணர்வுபூர்வ வழிகாட்டுதலினாலும் கட்சி ஊழியர்களின் தொடர்ச்சியான போராட்டத்தினாலும் படிப்படியாக வாழும் யதார்த்தமாக உருப்பெற்றது. 15 ஆண்டு கால போர்க்குணம் நிறைந்த உறுதிமிக்க ஆயுதப் போராட்டமும் கிட்டத்தட்ட 900 தியாகிகளின் தியாகமும் கொரில்லா மண்டலக் கனவை நனவாக்கியது.

அனைத்திந்திய சிறப்பு மாநாடு நிகழ்ந்த பள்ளத்தாக்கிற்கு ஆந்திரா – தண்டகாரண்யா தியாகிகளின் பெயரையும் கம்யூன் நுழைவாயிலுக்கு 1967–71 காலக் கட்டத்தில் போலீஸ் குண்டுகளுக்கு பலியான நக்சல்பாரி ஸ்ரீகாகுளம் தியாகிகளின் பெயரையும் சூட்டியதானது பொருத்தமாக இருந்தது. 1972- ஜூலையில் இந்திய அரசால் கொல்லப்பட்ட நம் நேசத்திற்குரிய தலைவரும் இ.க.க. (மா-லெ) நிறுவனருமான தோழர் சாரு மஜூம்தாரின் பெயர் மாநாடு நடைபெறும் இடத்திற்கு சூட்டப்பட்டது. பறந்து விரிந்த மைதானமும் விளையாட்டு திடலும். கண்காட்சி அரங்கமும். நூலகமும். மருத்துவமனையு




படிப்பகம்

www.padippakam.com

# ா.லெ) மக்கள் யுத்தத்தின்
# சிறப்பு மாநாடு:
## ் ஒரு வரலாற்றுத் திருப்புமுனை!





மற்றும் பிற அரங்கங்களும் நக்சல்பாரி முதற்கொண்டு கடந்த 28 ஆண்டுகளாக இந்தியப் புரட்சிக்காக தியாகியானவர்களின் பெயர்களை தாங்கி நின்றன. ஸ்ரீகாகுளம் போராட்டத்தின்போது தலைவர் வேம்படப்பு சத்யத்தின் பெயர் மாநாட்டு அரங்கத்திற்கு சூட்டப்பட்டிருந்தது. மேலும், மார்க்ஸ், எங்கெல்ஸ், இலெனின், ஸ்டாலின் மாவோ மற்றும் இ.க.க. (மா–இலெ)யின் நிறுவனர் தோழர் சாரு மஜும்தார் ஆகியோரின் படங்கள் சிவப்பு நிறத்தினால் அலங்கரிக்கப்பட்ட மாநாட்டு அரங்கின் மேடையில் வைக்கப்பட்டிருந்தன. பல்வேறு மாநில மாநாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முழக்கங்களும் நோக்கங்களும் பெரிய முழக்க அட்டைகளில் எழுதப்பட்டு மாநாட்டு அரங்கத்தின் உட்புறச் சுவரில் வைக்கப் பட்டிருந்தன. அரங்கின் வெளியே வைக்கப்பட்டிருந்த தியாகிகளின் நினைவுத் தூண் சிவப்புத் துணியில் சுற்றப்பட்டு 'மக்களின் தலைவர்கள் மரணத்தை வென்றவர்கள்' என்ற முழக்கம் அதில் பொறிக்கப் பட்டிருந்தது.

நவம்பர் 15 காலையில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியபின் மாநாடு ஆரம்பமானது. நக்சல்பாரி முதற்கொண்டு உயிரிழந்த 4000 தியாகிகள் மற்றும் இ.க.க. (மா–லெ) (ம.யு)வின் உருவாக்கம் முதற்கொண்டு உயிரிழந்த 900 தியாகிகள் ஆகியோரின் தியாகங்களை மூத்த தோழர் ஒருவர் விவரித்தார். இவர்களின் தியாகங்களினால் மட்டுமே கட்சியானது ஒடுக்கப்பட்ட மக்களிடையே உயர்ந்த இடத்தைப் பெற்று இத்தகைய வெற்றிகளை அடைய முடிந்தது எனவும் குறிப்பிட்டார். 15 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட கொரில்லா குழுவின் உருவாக்கத்திலிருந்து உறுதியான மனப்பான்மையுடன் செயற்பட்டு வரும் மூத்த தோழர் ஒருவர் அதற்கு முன் செங்கொடி ஏற்றினார். கொடியேற்ற நிகழ்ச்சிக்குப் பின், ஊர்வலம் நடைபெற்றது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, புரட்சிகர முழக்கங்களை ஒட்டுமொத்த பள்ளத்தாக்கு முழுவதும் எதிரொலித்தது. மைய அமைப்புக் குழுவின் (மை.அ.கு) செயலர் தோழர் கணபதியின் தொடக்க உரையோடு மாநாடு தொடங்கியது. தோழமை அமைப்பான இ.க.க. (மா.லெ) (கட்சி ஐக்கியம்) சார்பில் அக்கட்சியின் தோழர் ஒருவர் வாழ்த்துரை வழங்கினார். ஆந்திரப் பிரதேசம், வடதெலுங்கானா மற்றும் தண்டகாருண்யா ஆகியவற்றின் சிறப்பு மண்டலங்கள், தமிழ்நாடு, கர்நாடகம், மராட்டியம், மே.வங்கம், ஹரியானா மற்றும் இதர சில மாநிலங்களின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 2 ஆண்டு கால அரசியல் தயாரிப்புகளின் உயர்ந்த வடிமே இம்மாநாடு. 2 ஆண்டு காலமாக, ஒட்டு மொத்தக் கட்சி முழுமையும் மைய அமைப்புக் குழுவினால் வெளியிடப்பட்ட அடிப்படை ஆவணங்களின் நகலை படித்து விவாதித்தது. மாவட்ட மட்டம் முதற்கொண்டு மாநாடுகள் நடைபெற்றன. ஆந்திரப் பிரதேசம், வட தெலுங்கானா மற்றும் தண்டகாரண்யா ஆகியவற்றில் ஒட்டுமொத்தமாக 20 மாவட்ட மற்றும் பிராந்திய மாநாடுகள் நடந்தேறின. 8 மாநில மாநாடுகள் நடத்தப்பட்டு இறுதியாக நவம்பர் 1995ல் அனைத்திந்திய சிறப்பு மாநாடாக பரிணமித்தது. ஆரம்பத்தில் கட்சியின் 9ஆம் பேராயமாக நடைபெறு வதாயிருந்த அது, இன்னொரு மா–லெ குழுவினுடன் ஐக்கியத்திற்கான வாய்ப்புகளைக் கணக்கில் கொண்டு கடைசி நேரத்தில் சிறப்பு மாநாடாக நடத்தப்பட்டது. அடிப்படை ஆவணங்களான 'திட்டம் அமைப்பு விதிகள்' 'போர்த் தந்திரமும் செயற் தந்திரமும் அரசியல் தீர்மானம்' மற்றும் 'அரசியலமைப்பு மீளாய்வு' ஆகியவை குறித்து நீண்ட விவாதங்கள் கீழ் மட்ட மாநாடுகளில் நடத்தப்பட்டு திருத்தங்கள் சிறப்பு மாநாட்டிற்கு அனுப்பப்பட்டன. ஆகவே, இம்மாநாடானது, பேராயத்திற்குரிய அதே அந்தஸ்தை பெற்றுள்ளதோடு மேற்கண்ட அடிப்படை ஆவணங்களை முழுமையான விவாதத்திற்குப் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மேற்கண்ட ஆவணங்களுக்கு அப்பாற்பட்டு, 'இந்தியப் புரட்சிகர யுத்தம்' – 'கொரில்லா மண்டலங்கள்' என்ற தலைப்பிட்ட புதிய ஆவணத்தையும் சிறப்பு மாநாடானது விவாதித்தது.

இறுதியில், அதை இறுதிப்படுத்தி வெளியிட மையக்குழுவிற்கு அதிகாரம் அளித்தது. மை. அ.குழு சமர்ப்பித்த நிதி அறிக்கை கட்சியின் நிதி நிலையையும் ஆகஸ்ட் 1990ல் மை.அ.கு தொடங்கப்பட்ட முதற்கொண்டு கடந்த 5 ஆண்டுகளின் வரவு செலவு அறிக்கையை அதில் குறிப்பிட்டிருந்தது. மைய அமைபபுக் குழுவின் உறுப்பினர்கள் சுய விமர்சனம் செய்து கொண்டதோடு பிரதி நிதிகளிடமிருந்து தோழமைரீதியான விமர் சனங்களையும் பெற்றுக் கொண்டனர். பின்னர், மாநாடு மைய குழுவை தேர்ந்தெடுத்தது.

சிறப்பு மாநாடானது, கட்சியின் முழுவதும் நிலவும் ஜனநாயக மையத்துவ உணர்வை வெளிப்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

1993 இறுதியில் வெளிவந்தமை .அ.குழுவின் நகல் அறிக்கைகள் முதற்கொண்டு ஒட்டுமொத்தக் கட்சியும் – சாதாரண உறுப்பினர்கள் முதல் மாநிலக் குழுக்கள் வரை உணர்வு பூர்வமாக ஈடுபட்டு விமர்சனத்துடன் ஆய்வு செய்து ஆலோசனைகளையும் திருத்தங்களையும் பல்வேறு மட்டங்களிலான மாநாடுகளுக்கு அனுப்பியது. சிறப்பு மாநாடானது, ஒட்டு மொத்தக் கட்சியின் முழுவதுமான கருத்துக்களை மையப்படுத்திதேவையான திருத்தங்களுடன் ஆவணங்களை ஏற்றுக் கொண்டது. "ஊழியர்களிடமிருந்து ஊழியர்களுக்கே" என்பதே கட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட பருண்மையான மக்கள் திரள் பாதையின் வெளிப்பாடாக இருந்தது.

நவம்பர் 30 ஆம் நாளன்று நடைபெற்ற ஆயுதம் தாங்கிய பேரணியில் பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு தோழர்கள் மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சார்ந்த மக்களும் ஆர்வத்துடன் பங்குபெற்றதோடு மாநாடு முடிவடைந்தது. வட தெலுங்கானா மற்றும் தண்டகாரண்யா ஆகிய கொரில்லா மண்டலங்களை அடுத்த உயர்ந்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லுதல், நாட்டின் பல பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான கொரில்லா மண்டலங்களை கட்டுதல் மற்றும் பரந்துபட்ட பகுதிகளில் வர்க்கப் போராட்டங்களை தீவிரப்படுத்துதல் முதலிய புதிய புரட்சிகர கடமைகளை மாநாடு முன்னெடுத்து செல்வதென்பது இந்தியப் புரட்சியிலும் நம் கட்சியின் வரலாற்றிலும் ஒரு புரட்சிகர மைல் கல்லாக இருக்கும்.

## மாநாட்டு முழக்கங்களும் கடமைகளும்

1. நரசிம்மராவ் அரசாங்கத்தின் புதிய பொருளியல் கொள்கைகளை முறியடிப்போம்!

   இந்து பாசிச சக்திகளை தோற்கடிப்போம்!

   விவசாயப் புரட்சியை முன்னெடுப்போம்!

2. மக்களின் ஆயுதப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் மக்கள் யுத்தத்தை முன்கொண்டு செல்வோம்!

3. தண்டகாரண்யா மற்றும் வடதெலுங்கானா கொரில்லா மண்டலங்களை உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுப்போம்!

   பிற பகுதிகளில் கொரில்லா மண்டலங்களை கட்டுவோம்!

4. கீழ்மட்டத்திலிருந்து மக்களின் அதிகாரத்தை நிறுவுவோம்!

5. அகநிலைச் சக்திகளை வளர்த்தெடுப்போம்!

   புதிய பகுதிகளில் மக்கள் அடித்தளத்தை கட்டியமைப்போம்!

6. நிலவுடமை – ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை கட்டியமைப்போம்!

   தேசிய இன இயக்கங்களுடன் ஐக்கியப்படுவோம்!

7. வலிமையான பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டுவோம்!

   உண்மையான அனைத்து புரட்சியாளர்களுடனான ஐக்கியத்தைச் சாதிப்போம்!

8. பாட்டாளி வர்க்கமல்லாத அனைத்துப் போக்குகளையும் முறியடிப்போம்.!

   அனைத்து மட்டங்களிலும் கட்சியை போல்ஷ்விக் மயமக்குவோம்.

9. கூட்டுச் செயற்பாட்டை வளர்த்தெடுப்பதன் மூலம் கமிட்டிச் செயற்பாட்டை பலப்படுத்துவோம்!

10. கோட்பாட்டறிவை வளர்த்தெடுப்போம்! பருண்மையான ஆய்வில் கவனம் செலுத்துவோம்!

11. மார்க்சிய – இலெனினிய – மாவோ சிந்தனையை உயர்த்திப் பிடிப்போம்!

    அனைத்து வகையான திரிபுவாதங்களையும் தோற்கடிப்போம்!

12. பெண்கள் மீதான ஒடுக்குமுறையை முறியடிப்போம்! பெண்கள் இயக்கத்தை வளர்த்தெடுப்போம்!

13. சாதிய பாகுபாடு, ஒடுக்குமுறை, தீண்டாமை ஆகியவற்றை முறியடிப்போம்!

14. நகர்ப்புற இயக்கத்தை கட்டியமைப்போம்! தொழிலாளர் வர்க்கத்தின் மீது கவனம் செலுத்துவோம்!

நன்றி: **Vanguard**

(Jan-Mar-1996)



## ஜுலை 28: தியாகிகள் நாள்!

**தோழர் சாரு மஜும்தார்!**

உறங்கிக் கிடந்த இந்திய மக்களைத் தட்டி எழுப்பி அவர்களின் விடுதலைக்கான வழியைக் காட்டியவர்! காலங்காலமாய் அடக்கி ஆண்ட ஆளும் வர்க்கத்தினருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர்! திரிபுவாத சவடால் அடித்து பாராளுமன்ற சகதியில் திளைத்துக்கிடந்த போலி கம்யூனிஸ்ட்டுகளின் முகத்திரையை கிழித்தவர்! "மக்களின் விடுதலை என்பது பாராளுமன்ற பாதையில் அல்ல; மக்கள் யுத்த ஆயுத போராட்டப் பாதையில் தான்" என்பதை நக்சல்பாரி விவசாயிகளின் போராட்டத்திற்கு தலைமைதாங்கி, நடைமுறை மூலம் நிரூபித்தவர்! 1970 ல் இ.க.க. (மா.லெ) கட்சியினை நிறுவி, இந்திய புதிய சனநாயகப் புரட்சிக்கு நம்பிக்கை நட்டத்திரமாய் விளங்குபவர்! இத்தகைய மாவீரனை ஆளும் வர்க்கம் பேடித்தனமாக கொன்றது 1972 ஜுலை–28–ல்! அம்மாவீரனின் நினைவு நாளினை தியாகிகள் நாளாக கடைபிடிப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

– 15 ஆம் பக்க தொடர்ச்சி

அரசுத்துறை, இனி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காது. மேலும், ஏற்கனவே கேஷுவல். காண்டிராக்ட் என நிரந்தரமற்ற இலட்சக் கணக்கான ஊழியர்கள் வீட்டுக்கனுப்பப்படுவர். மேலும் விலைவாசி உயர்வுக்கேற்ற, ஊதிய உயர்வும் இருக்காது. இது நமது நாட்டு இளைஞர்களின் குறைந்தபட்ச எதிர்கால வாய்ப்பைப் பறிப்பதுடன் பல லட்சம் அரசு – பொதுத்துறைத் தொழிலாளர்களின் வயிற்றி லடிக்கும் திட்டமாகும். ஐ.எம். எப். பும், உலக வங்கியும் 'மக்களின் வயிற்றிலடி, எங்கள் தொப்பையை நிரப்பு' என்ற கட்டளையை நிறைவேற்றலே ஐக்கிய முன்னணி அரசு பு.பொ.கொ.வை நடைமுறைபடுத்துவதில் எந்த அளவு உறுதி கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள இது ஒன்றே போதும்ஃ

ஐக்கிய முன்னணி அரசின் பிரதமராக பதவி ஏற்றுள்ள தேவகவுடாதான் கர்நாடக முதலமைச்சராக இருந்த பொழுது இந்தியாவிலேயே முதன் முதலில் பன்னாட்டு விவசாய கழகங்கள் மற்றும் தரகு பெரும் முதலாளிகள் நிலப் பிரபுக்கள் ஆகியோர் நிலங்களைக் குவிக்க, சட்டரீதியான தடைகளை நீக்க ஏற்கனவே உள்ள நிலஉச்சவரம்புச் சட்டத்தை துணிவாக அகற்றியவர். இதுமட்டு மல்ல கார்கில், கோ ஜன்ட்ரீக்ஸ், கெண்டகி சிக்கன் போன்ற பன்னாட்டு நிறுவனங்களைப் பாதுகாத்து ஊக்கமளித்து வந்தவர். இத்தகைய கடைந்தெடுத்த ஏகாதி பத்திய ஏஜென்டை பிரத மராக தேர்ந்தெடுத்திருப்பதும் கூட, பு. பொ. கொவை உறுதியாக நடை முறைப்படுத்த உதவியாக இருக்கும்.

மேலும் வரப்போகும் பட்ஜெட், இதே மாதிரியாக இருக்கும் என்று கூறப்படுகிறது விவசாயத் துறையை பன்னாட்டு நிறு வனங்களுக்கு முழுமையாக திறந்து விடுதல், சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு கட்டணம் விதித்தல் (அ) தனியாருக்கு விற்று விடுதல் போன்ற நரசிம்மராவே செயல் படுத்தப் பயந்த பல மக்கள் விரோத திட்டங்களை பட்ஜெட்டில் அறிவிப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மதவாதிகளை எதிர்க்கிறோம் என்ற பெயரில் ஐக்கிய முன் னணியை ஆதரித்து நாடாளுமன்ற புரட்சி நடத்தி வரும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஏகாதி பத்தியங் களுக்கு சேவை செய்யும் கடைந்தெடுத்த ஏஜென்டுகளாக உள்ளனர். மேற்கு வங்கத்தில் பன்னாட்டு கம்பெனிகளை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பது அரசு, நிறுவனங்களை தனியாருக்கு விற்பது என தனது போலி சிவப்பு முகமூடி பல்லிளித்து நிற்கும் ஜோதிபாசு – கோ'வும், இதுவரை எம்.பி. சீட்டுகளுக்காக மட்டும் சிவப்பு கொடியை அடகு வைத்து வந்ததிலிருந்து முன்னேறி மைய அமைச்சரவையிலே இடம் பெற்றுள்ள சி.பி.ஐயும் ஐ.மு. அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து என்ன செய்வார்கள்? வழக்கம் போல கண்டன அறிக்கை விடுவது கண்துடைப்புப் போராட்டம் நடத்துவது இறுதியில் ஒப்பந்தம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவது என்ற அவர்களது திரிபுவாத குலத்தொழிலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? மதவாதிகள் ஆட்சியிலமர்வதைத் தடுக்க இந்த அரசைப் பாதுகாப்போம் என்று கூறி சப்பைக் கட்டு கட்டுகிறார்கள்.

மொத்தத்தில் காங்கிரஸ் மட்டுமல்ல பா.ஜ.க. மற்றும் ஐக்கிய முன்னணி ஆகிய அனைத்து ஆளும் வர்க்கக் கட்சிகளும் மக்கள் வாழ்வைப் பறிக்கும், முழு அடிமையாக்கும் பு.பொ.கொ.வை நடைமுறைப் படுத்துவதில் போட்டிப் போட்டுக் கொண்டு செயல் படுகின்றன. ஏகாதிபத்திய நல னுக்காக மக்களின் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் அள்ளிச் செல்ல அனுமதிக்கும் தரகு முதலாளிகளின் கொள்கைகளையே இந்தக் கட்சிகள் முழுமையாக அமுல் படுத்தத் துடிக்கின்றன. இவற்றிற் கிடையே அடிப்படையில் அந்த வேறுபாடும் இல்லை. இவற்றின் இலட்சிய முழக்கங்களும், கொள்கை அறிவிப்புகளும் மக்களை ஏய்க்கப் போடப்படும் வேடம்தானே தவிர வேறல்ல. இவர்களில் யார் ஆட்சியேறினாலும் ஏகாதி பத்தியத்திடம் நாட்டை அடகு வைக்கும் கொள்கையை தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தவே செய்வார்கள் என்ற உண்மை இப்போது முழுமையாக அம்பலப்பட்டுவிட்டது. 'ராவ்' ஆனாலும் வாஜ்பாய் ஆனாலும் தேவகவுடா ஆனாலும் ஏகாதி பத்தியங்களின் அடி வருடிகளான தரகு முதலாளிகளின் பிரதிநிதிகளே ! மன்மோகன் சிங்கும், சிதம்பரமும் ஐ.எம்.எப் வும், உலக வங்கியும் போட்டுத் தரும் அதே திட்டத்தைதான் நடைமுறைப் படுத்துகிறார்கள்.

இன்று மாநிலத்தில் ஆட்சி ஏறியுள்ள மாநில தரகு முதலாளியக் கட்சியான தி.மு.கவோ பல்வேறு போலி சீர்திருத்த அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

'ஜெ' அரசின் ஊழல்கள் மீதும் அராஜகங்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக அறிவித்து மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தத் துடிக்கிறது. மேலும், ஊழலற்ற நேர்மையான நிர்வாகம் தரப்போவதாகவும், மக்களுக்கு பல்வேறு சீர்திருத்தங்களை செய்யப்போவதாகவும் கூறி வருகிறது. நிலவரி ரத்து, மருத்துவ மனைகளில் நுழைவுக் கட்டணம் ரத்து என்று மக்கள் நண்பனாக தன்னைக் காட்டிக் கொள்ள முயல்கிறது. தமிழுக்குத் தனித்துறை, தனி அமைச்சர் என தேசிய இன உணர்வுள்ளோரைக் கவரவும் துடிக்கிறது.

ஆனால் மறுபுறம் தி.மு.க. சார்பில் மத்தியில் உள்ள அமைச்சர் மாறன் நாட்டை தாராளமயமாக்கப் போகிறேன் என்கிறார். அவர்களின் தோழமைக் கட்சியான த.மா.க. அமைச்சர் சிதம்பரம் மக்களின் சேவைகளுக்கு கட்டணம் வசூலிக்க உத்திரவிடுகிறார். அதுமட்டு மல்ல, கும்முடிப்பூண்டி மக்களின் வாழ்வை கேள்விக் குறியாக்கும் அமெரிக்க கம்பெனியான டூபாண்ட் தடை செய்யப்படாது என்று அறிவித்ததன் மூலம் கருணாநிதி தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை தெளிவாக வெளிப் படுத்தியுள்ளார். தேர்தல் வாக்குறுதியில் பு. பொ. கொ.வை திருத்தியமைக்க வேண்டு மென்று சவடால் அடித்த தி.மு.க. இன்று முழுமையாக பு.பொ. கொ.–வை அமுல் படுத்தும் அரசில் பங்கெடுத்துக் கொண்டுள்ளது. இன்று பயங்கர லஞ்ச சீர் கேட்டிற்கும், அராஜகங்களுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்வின் மிச்சங்களாய்

(இன்று பல்வேறு மாநிலங்களிலும் கொத்தடிமை களாக மீட்கப்படுவதான செய்தியும், கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டு இருக்கும் கல்லுடைக்கும் மக்கள் தமது வாழ்வின் விடியலாக அவர்களின் ஆயுதம் அவர்களிடமே உள்ளது. அவர்கள் விழித்தெழுந்தால் அனைத்தும்....)

◇ *வெடித்துப்போன*
*பாறைகளின் சிதறல்களில்*
*சிதைந்து போனது*
*வாழ்க்கை மட்டுமல்ல*
*உடல்களும் தான்.*

◇ *உடைபட்ட கற்களுடன்*
*நடை பிணங்களாய்*
*நாங்கள்*
*நவீன கொத்தடிமைகளாய்..*

◇ *குறைந்து போனது*
*மலைகள் மட்டுமல்ல*
*எங்களது*
*குடும்பத்தின் எண்ணிக்கையும்தான்*

◇ *நெஞ்சுக் கூட்டின்*
*எரிச்சல் கூட*
*குமுறல்களால் அல்ல*
*கந்தகத்தின் சுவாசிப்புகளால்*

◇ *காசநோயும்*
*கண் பார்வை இழப்பும்*
*முடமாகிப் போன*
*கைகளும்*
*கால்களும்*
*எமது*
*வாழ்வின் மிச்சங்களாய்....*

◇ *மலைகள்*
*இனியும் நமக்கானதாக*
*இல்லாவிடில்...*
*"ஒப்பந்தக் காரர்களின்" பிடியில்*
*என்றென்றும்*
*நாம்...*
*ஒட்டாண்டிகளாகவே.*

◇ *வெடி மருந்துகள்*
*பாறைகளை மட்டுமல்ல*
*எதிரிகளையும் பிளக்கத்தான்*

◇ *கந்தகங்களை சுமக்காதவரை...*
*நாம்*
*பாறைகளாகவே.*

–தீ. நிரஞ்சனா

---

நேரடிக் காரணமாக விளங்கும் (ஏகாதி பத்திய சுரண்டலுக்கு வழி விடும்) பு. பொ. கொ –வை எதிர்க்காமல், அதைத் தீவிரமாக நடை முறைப்படுத்திக் கொண்டே, தூய்மையான ஆட்சி, சமூக நீதி என்று கூறுவது மோசடித்தனமின்றி வேறில்லை.

**நமது கடமை**

இன்று மையத்தின் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய முன்னணி மற்றும் ஆட்சியில் இருக்கும் தி.மு.க.வும் – ஏகாதிபத்தியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டே மறுபுறம் மக்களை திசை திருப்ப சீர்திருத்தவாத வெற்றி முழக் கங்களை முழக்கிக் கொண் டுள்ளன. போலி கம் யூனிஸ்டுகளும் கூட மறைமுகமாக (ஏன் நேரடியாகவும் தான்) இவர்களின் கொள்கைகளுக்கு வால் பிடிக்கின்றனர். பா. ஜ.க. இந்து மதவெறிப் பாசிசத்தைப் பயன் படுத்துகிறது என்றால், இவர்கள் சமூக நீதி, மதச்சார்பின்மை, சோசலிசம் போன்ற முழக் கங்களுடன் நாடகம் ஆடுகிறார்கள். மாநிலக் கட்சிகளோ, தமது தரகுத்தன்மைக்கேற்ப, ஆட்சியில் பங்குக்காக அலைகின்றன.

இவர்களின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான மக்களின் கோபமும் ஆவேசமும் கூட பெருகி வருகின்றன. மேலும் இந்த அனைத்து ஓட்டுக் கட்சிகள் மீதான நம்பிக்கையின்மையும் கூட வளர்ந்து வருகிறது. இன்றைய சூழலில், **ஏகாதிபத்திய சார்பு பு.பொ. கொள்கைகளை எதிர்த்த போராட்டங்களை அனைத்து தளங்களிலும் வளர்த்தெடுக்க வேண்டும்.** மேலும் சீர்திருத்தவாத முழுக்கங்களின் பின்னால் உள்ள இவர்களின் உண்மை முகத்தை அம்பலப்படுத்த வேண்டும். ஜனதாதளம், தி.மு.க. மற்றும் இவர்களுக்கு ஆதரவாக உள்ள திரிவு வாதிகளான சி.பி.ஐ, சி.பி.எம் மின் கபட நாடகத்ததை அம்பலப் படுத்துவதன் மூலம்

இவர்களின் பொய் வேடங்களை நம்பி உள்ள ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களை புரட்சிகர அரசியலின் பக்கம் திரட்ட வேண்டும். மேலும் பு.பொ.கொ மற்றும் ஏகாதிபத்திய –நிலவுடமைச் சுரண்டலை வேரோடு பிடுங்கி எறிவதற்கான, விவசாயப் புரட்சி போராட்டங்களை வளர்த்து மக்கள் அடித்தளத்தை பலப் படுத்துவதற்கான கடும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

–சாருநேசன்

படியுங்கள்
KALAM
(கலம்)
அனைத்திந்திய புரட்சிகர
மாணவர்களின் குரல்!



படிப்பகம்

www.padippakam.com

# சமூக விரோதிகளிடமிருந்து புரட்சிகர அமைப்புகளே மக்களை காக்கும்!

சமூகம் கிரிமினல்மயமாவதும், அரசு இயந்திரத்தின் அனைத்து பற்சக்கரங்களும் அதற்கு பக்கபலமாக இருப்பதும் இன்றைய இந்தியாவின் நிதர்சனங்கள். இத்தகைய சூழலில் மக்கள் தங்களை காத்துக் கொள்ள புரட்சிகர அமைப்புகளில் இணைய வேண்டியதும், புரட்சிகர அமைப்புகளின் தேவையும் இன்றியமையாததாகி வருகிறது. இதற்கு சமீபத்தில் மதுரையில் நடந்த சில சம்பவங்களும். முற்போக்கு இளைஞர் அணியின் செயல்பாடுகளுமே சிறந்த உதாரணங்கள்.

**கடத்தல் அரிசி**

**பறிமுதலும்–பகிர்ந்தளிப்பும்**

நியாயவிலைக்கடைகளின் நிலைமைகளும்–செயல்பாடுகளும் இந்திய குடிமகனுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. செல்லூர் சுயராஜ்யபுரம் 2வது மெயின் ரோட்டில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து கடந்த பிப்ரவரி மாதம் 8 மூட்டை அரிசி அக்கடைக்காரர்களால் கடத்தப்பட்டபொழுது, அப்பகுதி அ.தி.மு.க. தாதாக்கள் மாமூல் தராத காரணத்தினால் தடுத்துள்ளனர்.

இதனைக் கேள்வியுற்ற மு.இ.அ, தோழர்கள் உடன் சென்று அதனை மக்கள் பிரச்சினையாக்கி, மக்கள் மத்தியில் கோஷம் போட்டு. மக்களிடம் அளவுகுறைப்பு, ஏமாற்று மூலம் கொள்ளையடித்தது தான் இந்த அரிசி மூட்டைகள் என விளக்கிப் பேசினர்.

மக்கள் திரள்வதைக் கண்டு மிரண்டுபோன நியாயவிலைக்கடை ஊழியர்கள், இனி செய்ய மாட்டோம் விட்டுவிடுங்கள் என கெஞ்சினர்.

மு.இ.அ., செயலுக்காய் அவர்களை மக்களிடம் மன்னிப்பு கேட்டு, 8 மூட்டை அரிசிகளையும் மக்களுக்கு அவ்விடத்திலேயே பகிர்ந்தளிக்க கூறியது. வேறு வழியின்றி 8 மூட்டை அரிசியினையும் அவ்விடத்தி லேயே பிரித்தளித்தனர்.

அதன்பின்பு மு.இ.அ., மக்கள் மத்தியில் ஒன்றுபட்டால் நாம் வென்று தீர்வோம். அரசு அதிகாரிகளோ ஓட்டுக் கட்சிகளோ நமக்கான வர்களல்லஸ ரவுடிகளுக்கும், அனைத்து முறை கேடுகளுக்கும் எதிராக இறுதிவரை தொடர்ந்து போராடுவோம் என விளக்கி கலை நிகழ்ச்சி நடத்தியது.

**வட்டிக் கொடுமைக்கெதிராய் வெகுண்டெழுந்த மு.இ.அ (முற்போக்கு இளைஞர் அணி)**

செல்லூர்–தாகூர் நகரில் 'தென்றல் பைனான்ஸ்' என்ற வட்டிக்கடை உள்ளது. அதே பகுதி சில்வர் பட்டறை தொழிலாளர் அக்கடையில் 500 ரூபாய் தவணைக்கும், 1000 ரூபாய் வட்டிக்கும் வாங்கியிருந்தார். சில்வர் பட்டறை வேலை நிறுத்தம் காரணமாக அவரால் தொடர்ந்து வட்டி கட்ட முடியவில்லை.

வட்டிக்கடைக்காரர்கள் தொழிலாளி மூர்த்தியை வீட்டிற்கு தூக்கிச் சென்று அடித்து மிரட்டியுள்ளனர். உடன், அப்பகுதி மு.இ.அ. தோழரிடம் மூர்த்தி தனது பிரச்சினையை கூறியுள்ளார்.

மு.இ.அ. தோழர்கள் வட்டிக்கடைக்காரர்களிடம், "வேலை செய்து சிறிது சிறிதாகத்தான் பணம் தருவார், அடித்ததற்கு அத்தொழிலாளியிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று அறிவித்திருந்தார்கள்.

பத்து நாட்கள் கழித்து சில்வர் பட்டறை திறந்தவுடன், வேலைக்குச் சென்ற மூர்த்தியை நடுரோட்டில் மடக்கி 'பணம் கேட்டா, மு.இ.அ. வையா கூட்டிவருகிறாய், நீ பணம் தராவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்கட்டும்' எனக் கூறி நான்கு பேர் சேர்ந்து அடித்து உதைத்துள்ளனர்.

இதனை அறிந்த மு.இ.அ. அன்றிரவே அப்பகுதியில் தெருமுனை நிகழ்ச்சி நடத்தி பைனான்ஸ் அராஜகங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியது. இச்செயலுக்காய் அவர்கள் மன்னிப்பு கேட்காதவரை பிறரும் கட்டவேண்டாம் என அழைப்பு விடுத்தது. இத் தெருமுனைக் கூட்டத்தில் பல தொழிலாளர்கள் நாங்களும் கட்ட மாட்டோம் என போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து விளம்பர பலகைகள் வைக்கப்பட்டன. செல்லூர் முழுவதும் தெருமுனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆதரவு பெருகி வருவதைக் கண்டு மிரண்ட பைனான்சியர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். பேச்சுவார்த்தை நடுவீதியில் மக்கள் முன்பே நடந்தது. மு.இ.அ. வின் நிபந்தனைகளை பைனான் சியர்கள் ஏற்றுக் கொண்டனர்.

மறுநாள் வட்டிக் கொடுமையை எதிர்த்து நடந்த தெருமுனைக் கூட்டத்திலேயே நான்கு பைனான்சியர் களும் மக்கள் மத்தியில் மன்னிப்பு கேட்டனர்.

தொழிலாளர்கள் புரட்சிகர அமைப்பில் அணிதிரண்டால் எந்தக் கொடுமையையும், எதிர்த்து முறியடிக்க முடியும் என்பதற்கு, இப்போராட்டமே ஒரு சாட்சியாக உள்ளது.

**கொள்ளையர்–காவலர் கூட்டு அம்பலம்**

சமீபகாலமாக மதுரை வைகையாற்றை கடந்து செல்பவர்கள் வழிப்பறிக் கொள்ளைக்கு தப்ப முடிவதில்லை. 5 ரூபாயைக் கூட விட்டு வைக்காமல் பறித்துக் கொண்டு, மேலும் கத்தியால் காயப் படுத்துவது, கொலை செய்வது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து வருகின்றன.

கடந்த மே மாதம் செல்லூர் – போஸ் வீதியில் கட்டிடத் தொழிலாளி கணேசன் என்பவரை ஒரு கும்பல் கத்தியைக் காட்டி மிரட்டி 500 ரூபாய் பணம் கேட்டுள்ளது. அவர் தன்னிடம் பணம் இல்லை என்று சொல்ல, அவரை ஒரு வட்டிக்கடைக்காரனிடம் அழைத்துச் சென்று அவர் பெயரில் 500ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு ஓடிவிட்டனர்.

இதனை, அத்தொழிலாளி கணேசன் பகுதி மு.இ.அ. தோழர்களிடம் முறையிட்டுள்ளார். உடன், மு.இ.அ. ரவுடிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டது. இதனால் ஆத்திரமடைந்த ரவுடிகள் கணேசனைத் தாக்க, இதனை J1 காவல்நிலையத்தில் முறையிடச் சென்ற அவரையே கைது செய்து லாக்கப்பில் அடைத்தது கடமை தவறாத காவல் துறை!

– தொடர்ச்சி 30ம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com

# அதிகரித்து வரும் வேலையின்மை : புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவே!

**வேலையின்மை** – இன்றைய ஒட்டுமொத்த சமூகத்தை பீடித்துள்ள கொடிய நோய். உழைப்பை மட்டுமே நம்பியுள்ள கோடானு கோடி உழைக்கும் மக்களுக்கு ஏகாதி பத்திய கூட்டோடு இந்திய ஆளும் வர்க்கங்கள் வெட்டியுள்ள சவக்குழி. ஓட்டுக்களை வழங்கி ஆட்சியில் அமர்த்திய ஏழை மக்களுக்கு நமது ஆட்சியாளர்கள் அளித்துள்ள அரிய பரிசு.

படித்தவன் – படிக்காதவன், கிராமவாசி – நகரவாசி, இந்து -முஸ்லிம், பிற்படுத்தப்பட்டோர் – தாழ்த்தப்பட்டோர் என்று எவ்வித பாகுபாடுமின்றி ஒட்டுமொத்த மக்களையும் நடுத்தெருவில் நிறுத்தி விட்டன நமது மத்திய, மாநில அரசுகள். டாக்டராக, எஞ்சினியராக கனவு கண்டு கொண்டிருந்த பெற்றோர்களின் பார்வையில் இன்று தண்டச் சோறாக வாழ்ந்து வருகின்றனர் படித்த பட்டதாரிகள். வேலை வாய்ப்பு அலுவலகங்களோ, 'வேலை ஏய்ப்பு' அலுவலகங்களாக செயல்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த பட்டதாரிகளின் எண்ணிக்கை 5.9 கோடியாகும் நேற்றுவரை இலஞ்சம் கொடுத்தாலாவது வேலை கிடைக்கும் என்ற நிலை மாறி, இன்று இலஞ்சம் கொடுத்தாலும் வேலை இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. நமது மத்திய – மாநில அரசுகள் அறிவிக்கப்படாத வேலை நியமன தடைச்சட்டத்தை முன்பிருந்தே நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இன்று இரயில்வேயில் மட்டும் ஆறு இலட்சம் காலி இடங்கள் நிரப்பப் படாமலிருக்கின்றன. தமிழக மின்வாரியத்தில் முப்பதாயிரம் காலி இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. வங்கிகளில் மட்டும் ஆண்டுதோறும் இருபத்தைந்தாயிரம் காலி இடங்கள் உருவாகி நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன. இது தவிர தபால் தந்தி, மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், பள்ளி – கல்லூரிகள் எங்கும் இலட்சக் கணக்கில் காலி இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இவற்றை நிரப்பக் கூடாதென்று மத்திய ஆணை பிறப்பித்துள்ளது. அரசு இதனால் எம்.ஏ.பி.எச்டி போன்ற உயர் கல்வி கற்றவர்கள் இன்று அற்ப ஊதியத்திற்காக நர்சரி பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஏ,பி,சி,டி சொல்லிக் கொடுக்கும் அவலத்தை நாடு முழுவதும் காணலாம். படித்த வர்களின் நிலையே இப்படி என்றால், படிக்காத கிராமப்புற இளை ஞர்களின் நிலையினை சிந்தித்தும் பார்க்கமுடியாது. கிராமங்களில் வேலையின்றி நகரங்களை நோக்கி வரும் குடும்பங்கள் குறைந்த கூலிக்கு கட்டிடத் தொழில் போன்ற தற்காலிக தொழில்களில் நாள் முழுவதும் வேலை செய்து அரைவயிற்றை நிரப்புகின்றன. ஒரு புறத்தில் வேலை இல்லாதவர்களின் நிலை இப்படி இருக்க, மறுபுறத்தில் ஏற்கெனவே தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்தவர்கள் ஆட்குறைப்பு, கதவடைப்பு



ஆகியவற்றின் மூலம் வீதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். நாடு முழுவதும் 2.3 இலட்சம் ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றில் பணி புரிந்து வந்த பல இலட்சம் தொழிலாளர்கள் இன்று வேலை யின்றிதவிக்கின்றனர். நேற்றுவரை ஊதிய உயர்வுக்காக போராடிய தொழிலார்கள், இன்று வேலையை தக்கவைத்துக் கொள்ள போராட வேண்டிய நிலை எற்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக கௌடா – சிதம்பரம் கும்பல் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் அறிவித்துள்ள புதிய திட்டமானது தொழிலாளர்கள் மீதும், வேலை எதிர்பார்த்துள்ளோர் மீதும் பேரிடியாக இறங்கியுள்ளது. அரசு அறிவித்துள்ள ஊதிய உயர்வு முடக்கத் திட்டத்தினால், ஏற்கெனவே குறைந்த சம்பளத்தில் வாழ வழியின்றி நிற்கும் தொழிலாளர்கள், மேலும் கடுமையான நெருக்கடிக்கு ஆளாவார்கள்.

அதே போல, வேலை நியமனத் தடையின் மூலம் நமது அரசு படித்து முடித்த வேலையில்லா பட்ட தாரிகளின் வயிற்றிலடித்து விட்டது.

சிறு உற்பத்தியாளர்களோ ஏக போக நிறுவனங்களுடன் போட்டியிட முடியாமல் திவாலாகி வருகின்றனர். இப்படியாக அனைத்து தரப்பு மக்களும் இன்று வேலையின்றி உழன்று வருகின்றனர். ஒட்டு மொத்த வேலை இல்லாதவர் களின் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டிவிட்டது. இதுதான் நமது ஆட்சியாளர்கள் நம்மை இருபத்தி யோராம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லும் இலட்சணம். 'நூறு நாட்களில் அனைவருக்கும் வேலை' என்றவர்கள் இருந்த வேலையையும் பறித்துவிட்டனர். 'தொழிற்துறையை பெருக்குவோம்' என்றவர்கள் இயங்கி வந்த ஆலைகளைக் கூட மூடிவிட்டனர். இத்தகைய சூழலில் வேலையின்மை பிரச்சனையைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள நமது ஆட்சி யாளர்கள் பல்வேறு துறைகளில் நடைமுறைபடுத்தி வரும் பொருளா தாரக் கொள்கைகள் பற்றி புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

### விவசாயத்துறை

"நாடுவளம் பெற விவசாயம் செழிக்க வேண்டும்" என முழங்கிய ஆட்சியாளர்கள் இன்று விவசாயத் துறையை முற்றுமாக புறக் கணித்ததோடு, ஏகாதிபத்தியங்களின் கட்டளைகளுக்குகேற்ப நசுக்கியும் விட்டனர். இந்திய மக்கள் தொகையில் 70% பேர் விவசாயத்தில் ஈடுபடுபவர்கள். இதில் மூன்றில் ஒரு பகுதியினர், அதாவது மொத்த கிராமப்புற மக்கள் தொகையில் 25% பேர் நிலமற்ற விவசாயிகள். மீதமுள்ளவர்கள் ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளாக உள்ளனர். ஆனால் பெரும் பகுதியான நிலமோ, சிறு பகுதியினராக உள்ள நிலபிரபுக்களின் சொத்தாகவோ, அரசு நிலங்களாகவோ குவிந்து கிடக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

குவிந்து கிடக்கும் நிலத்தின் பெரும்பகுதி வளமான விளை நிலமாகும். இவை மொத்தமும் பயிர் செய்யப்படுவதில்லை. மொத்த விளைநிலத்தில் 25% நிலம் மட்டுமே ஆண்டு முழுவதும் பயிர் செய்யப்படுகிறது. மீதமுள்ள 75% நிலமானது பெரும் பகுதி காலம் விளைச்சலின்றி கிடக்கின்றது. இப்படியாக மொத்த விளைச்சல் நிலமும் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுவதால், ஒரு புறத்தில் உற்பத்தி வீதம் வளர்ச்சி யடையாததோடு மறு புறத்தில், கூலி விவசாயிகள் வேலை இழந்து நகரத்தை நோக்கி ஓடுகின்றனர். அத்துடன் சிறு விவசாயிகள் மற்றும் நடுத்தர விவசாயிகளோ, ஏகாதிபத் தியங்களின் கட்டளைக்கு அடிபணிந்து விவசாயத்துறைக்கான மானியத்தை அரசு ரத்து செய்து வருவதாலும், பன்னாட்டு நிறுவனங்களால் விவசாய இடு பொருட்களின் விலை அதிகரித்து விட்டதாலும், கொடூரமான கந்து வட்டிக் கொடுமையாலும் வாழ்வை இழந்து தவிக்கின்றனர்.

## தொழில்துறை

சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாகவும், வேலையின்மையை தீர்க்கக் கூடியதாகவும் விளங்கக் கூடிய தொழிற் துறையானது இன்று ஏகாதி பத்தியங்களின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. ஏகாதிபத்திய உற்பத்தியோடு போட்டியிட முடியாமல் தேசியத் தொழில்கள் முற்றிலுமாக நலிவடைந்து விட்டன. குறிப்பாக நெசவுத்தொழில், கைத்தொழில் போன்றவை முற்றிலுமாக நலிவடைந்து விட்டன. 1981–84 கால கட்டத்தில் மட்டும் 178 நெசவு ஆலைகள் மூடப்பட்டன. இதன் விளைவாக ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். மறுபுறத்தில் மக்களின் வாங்கு சக்தி குறைந்ததன் விளைவாக, பெரும் தொழிற்சாலைகள், ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இன்னும் பல தொழிற்சாலைகள் மூடப்படும் தறுவாயில் உள்ளன. இது தவிர நூற்றுக்கணக்கான பொதுத்துறை நிறுவனங்களை 'இலாபம் இல்லை' என்ற பெயரில் மூடிவிட அரசு திட்ட மிட்டிருக்கிறது. இதனால் இந்நிறு வனங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. நலிவடைந்த ஆலைகள் அனைத்தையும் மூட அனுமதித்தால் பொதுத்துறை ஊழியர்கள் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேரும், தனியார் துறை ஊழியர்கள் 5 இலட்சம் பேரும் வேலை இழப்பார்கள். அத்துடன் நவீனமய மாக்கல் என்ற பெயரில் ஆலைகளில் ஆட்குறைப்பானது அதி வேகமாக நடைபெற்று வருகிறது. தபால்துறை, தொலை தொடர்புதுறை போன்றவற்றில் கம்ப்யூட்டர்களை புகுத்தியதன் மூலம் இலட்சக் கணக்கான தொழிலாளர் களின் வயிற்றிலடித்துவிட்டது மத்திய அரசு. மேலும் ஆட்குறைப்பினை துரிதப்படுத்திட, மத்திய அரசின் தங்கக் கைக் குலுக்கல் மற்றும்விருப்ப ஓய்வு திட்டங்கள் இது தவிர பெரும்பாலான தொழிற்சாலைகள் நிரந்தர பணியாளர்களுக்கு பதிலாக, ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டே மலிவான உழைப்பை சுரண்டி வருகின்றன. மொத்தத்தில் இந்தியத் தொழிற்துறையினை இந்திய ஆளும் வர்க்கம் சவக்குழிக்கு அனுப்பி விட்டது.

## தாராளமயமாக்கல் ஏகாதிபத்திய சார்பு கொள்கைகள்

ராவ் அரசால் புகுத்தப்பட்டு இன்றைய கௌடா - அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய பொருளாதாரக் கொள் கையின்முக்கிய அம்சம் தாராளமய மாக்கல் ஆகும். அதாவது, இந்திய சந்தைக்குள் அன்னிய பகாசுர நிறுவனங்கள் படையெடுப்பதற்கு ஏதுவாக கதவினை தாராளமாக திறந்து வைத்தல் ஆகும். நமது மத்திய, மாநில அரசுகள் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களை இரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கின்றன. முன்னாள் மந்திரிகள் முதல் இன்னாள் மந்திரிகள் வரை அனைவரும் அமெரிக்கா, ஜெர்மன், ஜப்பான் போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடைவிடாது விஜயம் செய்து, இந்தியாவில் தொழில் துவங்குமாறு மன்றாடுகின்றனர். ஏனென்றால், "நமது நாட்டில் தொழில் துவங்க மூலதனம் இல்லை; அன்னிய நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்வதன் மூலம் இந்தியத் தொழிற்துறை வளர்ச்சியடையும்; அத்துடன் வேலை வாய்ப்பு பெருகும்" என நீட்டி முழங்கு கின்றனர்.

ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் இலாபம் தரக்கூடிய தொழில்துறைகளில் மட்டும் முதலீடு செய்கின்றன. நவீன இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர் களின் மலிவான உழைப்பைச் சுரண்டுதலின் மூலம்.குறைந்த உற்பத்தி செலவில் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. அத்துடன் பெரிய அளவில் விளம்பரமும் செய்கின்றன. இத்தகைய நிறுவனங் களுடன் சந்தையில் போட்டியிட முடியாமல் நம்நாட்டு சிறு உற்பத்தியாளர்கள் திவாலாகி வருகின்றனர். இதன் விளைவாக சிறு தொழில் மற்றும்கைத்தொழில் முற்றிலும் நசுங்கிவிட்டது. மறுபுறத்தில் பொதுத்துறை நிறு வனங்களையும் பன்னாட்டு நிறுவனங்களிடம் தாரைவார்த்து விட்டனர் நமது ஆட்சியாளர்கள். இலாபம் தரும் பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை 49% வரை அன்னிய நிறுவனங்களுக்கு விற்று விட மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. இதன் பகுதியாக ஏற்கெனவே தொலை தொடர்பு துறையின் பெரும் பகுதியானது அந்நிய நிறுவனங் களிடம் விற்கப்பட்டு விட்டது. அதே போல மின் உற்பத்தியானது அந்நிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் சென்று கொண்டிருக்கின்றது.

இத்தகைய பொதுத்துறை நிறுவனங்களில் ஈட்டக் கூடிய இலாபத்தின் பெரும்பகுதியினை பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நாட்டிற்கு கொண்டு சென்று விடுகின்றன. அத்துடன் இந்நிறு வனங்கள் துவங்கும் தொழில் துறைகள் அனைத்தும் மேலை நாடுகளில் உயிருக்கு கேடு விளைவிக்கும் ஆலைகள் என முடிவெடுத்து மூடப்பட்டவை. எனவே அந்நிய முதலீட்டில் இந்தியத் தொழில்துறை வளர்ச்சியடையும் என்ற ஆட்சியாளர்களின் முழக்கம் முற்றிலும் ஏமாற்றுவேலை யாகும்.

அடுத்ததாக, 'அன்னிய முதலீட்டால் வேலை வாய்ப்பு பெருகும்' என்ற கூற்று உண்மையில் தவறானது. அன்னிய முதலீட்டில் துவங்கப்படும் நிறுவனங்கள் நவீன இயந்திரங்களோடும், கம்ப்யூட்டர் களோடும் இயங்கு கின்றன. எனவே இந்நிறுவனங்களில் வேலை வாய்ப் பானது மிகவும் குறைவானதாகும். (உதாரணமாக, 600 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைக்கு அருகி லுள்ள கும்மிடிப்பூண்டியில் துவங்கப்படும் அமெரிக்க டுபாண்ட் நிறுவனத்தின் மொத்த வேலை வாய்ப்பானது 600 மட்டுமே)

அத்துடன் இத்தகைய பன்னாட்டு நிறுவனங்கள் நிரந்தர பணியாளர்களைக் கொண்டு செயல்படுவதில்லை. தற்காலிகப் பணியாளர்களை குறைந்த கூலிக்கு பணியிலமர்த்தி உழைப்பை சுரண்டிவருகின்றனர். எனவே அன்னிய முதலீட்டால் உள்நாட்டுத் தொழிற்துறை நசிவடைவதுடன், வேலை வாய்ப்பானது கணிசமாகக் குறைகிறது. ஆனால், நமது



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சியாளர்களோ, அன்னிய நிறுவனங்களுக்கு வரிச்சலுகை செய்து கொடுப்பதோடு. இலாப சதவீதத்தையும் அதிகரித்துக் கொடுக்கின்றனர்.

### ஆ. தனியார் மயமாக்கல்

ஏகாதிபத்திய தயாரிப்பான புதிய பொருளாதாரக் கொள் கையின் அடுத்த முக்கிய அம்சம் தனியார் மயமாக்கல் ஆகும். "பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் ஓடுகின்றன" என்ற பெயரில் இன்று, பொதுத்துறை நிறுவனங்களை தனியார் வசம் தாரை வார்த்து வருகின்றனர் ஆட்சியாளர்கள். உண்மையில்,பொதுத் துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதன் காரணம் என்ன?

பெரும்பாலான பொதுத்தறை நிறுவனங்கள் முழுமையாக அவற்றின் உற்பத்தி திறனுக்கேற்ப இயக்கப் படுவதில்லை. இவற்றின் மொத்த உற்பத்தித் திறனில் 30% முதல் 40% வரை மட்டுமே உற்பத்தியில் ஈடுபடுகின்றன. பொதுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மானி யங்களைக் கூட அரசு ரத்து செய்துவிட்டது. இதன் விளைவாக, பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்படும் நிலையில் உள்ளன. உதாரணமாக,உலகிலேயே சிறந்த 15 நிறுவனங்களில் இந்திய பெல் (BHEL) நிறுவனமும் ஒன்று. ஆனால், இன்று, இந்நிறுவன மானது, உற்பத்தி செய்ய ஆர்டர் கிடைக்காமல் மூடப்படும் நிலையில் உள்ளது.

இது தவிர, பொதுத்துறை நிறுவனங்களில் அதிகார வர்க்கத்தின் கணக்கிலடங்கா ஊழலும். ஊதாரித்தனமான செலவி னமும் நிறுவனத்தின் இழப்புகளுக்கு முக்கியமான காரணமாகும். உதாரணமாக, பீகார் மாநில பாரத் நிலக்கரி நிறுவனத்தில் (BCCL) 1991–ஆம் ஆண்டு 6.5 லட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டு, 'சிறந்த உற்பத்தி'க்கான விருது பொது மேலாளருக்கு வழங்கப்பட்டது. பல நிர்வாகிகள் பதவி உயர்வும் பெற்றனர். ஆனால் உண்மையில் 56,000 டன் நிலக்கரி தான் உற்பத்தி செய்யப் பட்டிருந்தது. இப்படி நாடு முழுவதும் உள்ள BCCL நிறுவனங்களில் 1983–84 முதல் காட்டப்பட்ட பொய் கணக்கு 74.04 லட்சம் டன்னா கும்.அதாவது 233.80 கோடி மதிப்புள்ள நிலக்கரியாகும்.

சமீபத்தில், முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் மகனும், முன்னாள் மத்திய மந்திரியின் மகனும் கூட்டுச் சேர்ந்து தேசிய உர நிறுவனத்திற்கு (NFL) யூரியா வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தருவதாகக் கூறி 133 கோடி ரூபாய் சுருட்டியுள்ளனர். இது வரை கையளவு யூரியா கூட இந்தியா வந்து சேரவில்லை. மேலும் தொலை தொடர்பு துறையில் 65 ஆயிரம் கோடி ஊழல், சர்க்கரையில் 4,000 கோடி ஊழல், பீகார் கால்நடை தீவனத்தில் பல கோடி ஊழல்..... இப்படி நீண்டு செல்லும் ஊழல் பட்டியல்.

எனவே, பொதுத்துறையானது, நட்டத்தில் இயங்குவதென்பது ஆளும் வர்க்கத்தின் திட்டமிட்ட சதியாகும். நமது நாட்டில் வேலை வாய்ப் பளிக்கும் துறையாக மிக முக்கியமாக விளங்கக் கூடியது பொதுத் துறையாகும். இரயில்வே, மின்துறை, செய்தி தொலை தொடர்பு போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் மட்டும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும், தொடர்ச் சியாக வேலை வாய்ப் பளித்து வரக் கூடியதாகவும் இந்நிறுவனங்கள் விளங்குகின்றன. ஆனால் இந்நிறு வனங்கள் தனியார்மயமாக்கப் படத்துவங்கியதிலிருந்த வேலை வாய்ப்பானது அதிவேகமாக சரிந்து வருகிறது. தனியார் முதலாளிகள் அன்னிய நிறுவனங்களுடன் கூட்டுப் சேர்த்துக் கொண்டு பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்து, நவீன இயந்திரங்களை புகுத்தியும் மற்றும் தற்காலிக பணியாளர்களை வேலையில் அமர்த்தியும் மலிவான உழைப்பை சுரண்டுவதன் மூலம் கோடிக்கணக்கில் இலாபம் ஈட்டுகின்றனர். இதன் விளைவாக,புதிய வேலைவாய்ப்புகள் தடை படுவதுடன், ஏற்கெனவே பணி புரிந்து வந்த தொழிலாளர்கூட வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், தனியார் துறை நிறுவனங்களுக்கு அதிகமாக சலு கைகள் வழங்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக, ஆந்திரத்தில் செயற்பட்டு வரும் பிர்லாவுக்கு சொந்தமான காகித ஆலைக்கு மின்சாரமானது, யூனிட்டுக்கு ஐந்து பைசா வீதம் வழங்கப்படுகின்றது. ஆனால், மின் உற்பத்திச் செலவோ யூனிட்டுக்கு 1 ரூ 7 பைசா ஆகும். இப்படியாக, மக்களிடமிருந்து வரி மற்றும் சேமிப்பு மூலம் திரட்டப்படும் நிதியானது, தனியார் நிறுவனங் களுக்கு சலுகைகளாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தனியார் நிறுவனங்கள் கோடி கோடியாக இலாபம் ஈட்டுகின்றன. அத்துடன் தனியாரிடம் விற்கப்படும் பொதுத் துறை பங்குகளோ அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகிறது. உதாரணமாக 220 ரூ. மதிப்புள்ள இந்துஸ்தான் ஸ்டீல் என்ற நிறுவனத்தின் பங்கு வெறும் 10ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது. அதே போல் பொதுத்துறை நிறுவனங்களில் தனியார் குறைந்த முதலீட்டை செய்து விட்டு ஒட்டு மொத்த நிறுவனத்தையும் நிர்வகித்து வருகின்றனர்.

மக்களின் சேமிப்புப் பணத்தை கோடிக் கணக்கில் குவித்துள்ள வங்கிகள் அதிக பட்ச கடன் உதவியினை பெருமுதலாளிகளுக்கே வழங்கி வருகின்றன. 1980–89 ஆண்டுகளில் வங்கிகளில், மக்கள்



வேலை கொடுக்கவக்கற்ற வேலை வாய்ப்பு அலுவலகம் முன்பு வேலை கிடைக்கும் எனற நப்பாசையில் காத்திருக்கும் படித்த பட்டதாரிகள்.



படிப்பகம்

www.padippakam.com

சேமிப்பான 60,000 கோடி ரூபாயில் 73% பெரு முதலாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. இப்படியாக, ஒரு புறத்தில் பொதுத்துறை நிறுவனங் களை பயன்படுத்தி கொள்ளுதல் மற்றும் அதிகபட்ச மானியங்களை பெறுதல் ஆகியவற்றின் மூலம் தனியார் தொழில் நிறுவனங்கள் கோடிக்கணக்கில் இலாபம் சுருட்டி வருகின்றனர். ஆனால், மறுபுறத்தில் இலாபத்தை பெருக்கிக் கொள்வ தற்காக தங்களது நிறுவனங்களில் நவீன இயந்திரங்களை புகுத்துதல். கம்ப்யூட்டர்மயமாக்குதல், தற்காலிக மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களை பணியிலமர்த்துதல், கதவடைப்பு, ஆட்குறைப்பு ஆகியவற்றின் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர் களை வீட்டுக்கு அனுப்பி வருகின்றன. இதற்கு வசதியாக, நமது மத்திய – மாநில அரசுகள் தனியார் துறை மீதான கட்டுப்பாட்டை தளர்த்திவிட்டன. மொத்தத்தில், அரசின் தனியார்மயமாக்கம் கொள்கையினால், இலட்சோப இலட்சச் தொழிலாளர்கள் வேலை இழந்து தவிப்பதோடு, புதிய வேலைவாய்ப்பு என்பது கனவாகிப் போனது.

### ஏகாதிபத்திய சார்பு ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை

ஒரு நாட்டின் தொழிற்துறை சுயமாக வளர்ச்சியடைய, தேவை யற்ற இறக்குமதி தவிர்க்கப்பட வேண்டிய தோடு இறக்குமதி மீதான கட்டுப்பாடு கடுமையாக இருத்தல் வேண்டும். ஆனால் நமது ஆட்சியாளர்களோ ஐ.எம்.எப் – உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணிந்து இறக்கு மதியை தாராளமயமாக்கிய தோடு, இறக்குமதி மீதான கட்டுப் பாட்டினை முற்றிலும் தளர்த்தி விட்டனர். 1992 ஆம் ஆண்டு மட்டும் ரூ.2023 கோடி அளவிற்கு இறக்குமதி மீதான சுங்கவரி குறைக்கப்பட்டது. இதன்விளைவாக, அன்னிய உற்பத்திப் பொருட்களுடன், உள்நாட்டுப் பொருட்கள் போட்டியிட முடியாமல் இந்திய தொழிற்துறை அத்துடன், நம் நாட்டு மக்களுக்குத் தேவையான உணவுத் தானியப் பொருட்களைக் கூட ஏகாதிபத்தியங்களுக்கு குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர் நமது ஆட்சியாளர்கள், இதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களுக்குக் கூட ஏகாதிபத் தியங்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. மொத் தத்தில், அரசின் புதியபொருளா தாரக் கொள்கையின் விளைவாக வேலையின்மை விசுவரூபம் எடுத்துள்ளதோடு மக்களின் வாழ்க்கையே கேள்விக் குறியாகி விட்டது.

இந்த இலட்சணத்தில் தான், "உலகச் சந்தையில் போட்டியிடு வோம்" என வெற்று முழக்கமிட்டு வருகின்றனர் நமது ஆட்சியாளர்கள்.

### புதிய சனநாயக குடியரசு – ஒரே தீர்வு

இன்று நாடு முழுவதும் வேலையின்றி அல்லல் படும் கோடிக்கணக்கான இளைஞர்கள் மற்றும் ஆட்சியாளர் களின் மக்கள் விரோதக் கொள்கைகளினால் வேலை யினை இழந்து வீதியில் நிற்கும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வு மலர என்ன வழி? நமது நாட்டு தொழிற்துறை சுயமாக வளர்ச்சி யடைவது எப்படி?

கூர்ந்து கவனித்தோமானால், வேலையின்மை பிரச்சனைக்கான தீர்வு நிலத்தோடு பிணைந் திருப்பதைக் காண முடியும்.

நிலபிரபுக்கள் மற்றும் அரசு வசம் குவிந்து கிடக்கும் நிலங்கள் நில மற்ற விவசாயிகளுக்கு பிரித்து வழங்கப்பட வேண்டும். அத்துடன்,விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் முழுமையான பாசன வசதி ஆகிய வற்றின் மூலம் நிலமானது, முழுமையாக பயன் படுத்தப்பட வேண்டும். மக்களின் தேவைக்கான உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். விவசாயம் சார்ந்த சிறு தொழில்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு ஊக்கமளித்து வளர்க்கப்பட வேண்டும்.

இந்தியாவில் உள்ள 22 தரகு பெருமுதலாளிகளின் மொத்த சொத்து மதிப்பு மட்டும் 34,538 கோடியாகும். இதுதவிர, கறுப்பு பணம் ஒரு இலட்சம் கோடிக்கும் மேல் உள்ளது. இத்தகைய தரகு முதலாளிகளின் சொத்து மற்றும் கறுப்பு பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட வேண்டும். அத்துடன், நசிவடைகின்றது ஏகாதிபத்திய நிறுவனங்கள் இந்தியாவில் போட்டுள்ள மூல தனங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். இந்நிறு வனங்கள் அனைத்தும் நாட்டை விட்டு துரத் தியடிக்கப்பட . வேண்டியதுடன், ஏகாதிபத்தியக் கடன் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும். ஏகாதிபத்திய சார்பு உற்பத்தியானது முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும். நாட்டின் சுய தேவை உற்பத்தியானது வளர்க்கப்பட வேண்டும் இதன் மூலம் மட்டுமே அனைவருக்கும் வேலை என்பது சாத்தியமாகும். இத்தகைய புரட்சிகர மாற்றங்கள் செய்யப்பட வேண்டு மெனில், இந்திய ஆளும் வர்க்கங்கள் ஆட்சி யிலிருந்து தூக்கியெறியப்பட்டு, உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் புதிய சனநாயக குடியரசு நிறுவப்பட வேண்டும். இத்தகைய புரட்சிகர வரலாற்றுக் கடமையினை நிறை வேற்ற வேண்டியது இளைஞர்களின் கடமையாகும்.

**- விஜயகுமார்.**

## சிவப்பு அஞ்சலி

*முற்போக்கு இளைஞர் அணியின் மாநிலக்குழு உறுப்பினரான தோழர்.பெருமாள் அவர்களுடைய தாயாரும், நமது இயக்கத்தின் ஆதர வாளருமான தோழர். பூந்தமல்லி அவர்கள் 5.2.96 அன்று இயற்கை எய்தினார் சாதிய சடங்கு, சம்பிரதாயங்களுடன் தான் இறுதி நிகழ்ச்சி நடைபெற வேண்டும் என்று கூறிய உறவினர்களின் கடும் எதிர்ப்பை முறியடித்து, நிலவுடைமை, சாதிய இந்துமத பண்பாட்டு, சடங்குகளின் உள்ளடக்கத்தை, போலி, மூடத்தனங்களை அம்பலப்படுத்தி பல்வேறு புரட்சிகர, ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களால் விளக்கப்பட்டு இறுதியில் உறவினர்களின் புறக்கணிப்பிற்கு பிறகு புரட்சிகரமான முறையில் மு.இ.அ., மு.மா.ச. தோழர்களால் உடலடக்கம் செய்யப்பட்டது.*

*தோழர். பூந்தமல்லி அவர்கள் இயக்கத்திற்கு மிகச் சிறப்பான புரட்சிகர பங்களிப்பை ஆற்றியுள்ளார் . தனது வயோதிக காலத்தில் தான் நமது இயக்கத்தை அறிந்து கொள்ள நேர்ந்த போதும், நமது உன்னதமான லட்சியங்களாலும், நடவடிக்கையாலும் ஈர்க்கப்பட்டு , தொடர்ச்சியாக நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலத்திலும், பலவகையிலும் நமது இயக்கத்திற்காக உழைத்துள்ளார். அத்தகைய தோழர் ஒருவரின் மறைவு நமது இயக்கத்திற்கு ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பேயாகும். தோழர் மறைவிற்கு மு.இ.அ., மு.மா.ச. மற்றும் முன்னோடி தங்கள் சிவப்பு அஞ்சலியை செலுத்துகின்றன.*



படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர் தேர்தல் : அரங்கேறும் பாசிசம்

இந்திய தேர்தல்முறை அதன் துவக் கத்திலிருந்தே கேலிக்கூத்தானதாகவும் அராஜக மானதாகவும், அயோக்கியத்தனமாகவும் தான் நடைபெற்று வருகின்றது. இதற்கு ஒவ்வொரு மாநிலமும் உதாரணங்களாக, ஒவ்வொரு வாக்காளரும் சாட்சியாளர்களாகத்தான் இருந்திருக்கின்றார்கள்; இருந்து வருகிறார்கள்.

நாளுக்கு நாள், இந்தியச் சமூகப் பொருளாதார நெருக்கடிகள் மேலும் அதிகரிக்க, அதிகரிக்க இதன் சனநாயக முகமூடி கிழிந்து, போலித்தனங்கள் அம்பலப்பட்டு வருகின்ற நிலையில் தேர்தலும் முன்னெப் போதும் இல்லாத வகையில் அராஜக, அயோக்கியத்தனங்களின் எல்லை கடந்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே நீண்ட காலத்திற்குப்பின் மீண்டும் காஷ்மீரில் தேர்தல் நடைபெற்றுள்ளது.



வாக்காளர்களை கிறிமினல்களைப் போல் நடத்தும் ராணுவம்

பிரதேசரீதியாக இந்தியாவின் தலைப் பகுதியாகவும், அரசியல் ரீதியாக இந்தியாவின் தலையாய பிரச்சினையாகவுமுள்ள காஷ்மீரில் தேர்தல் என்ற செய்தி ஆச்சரியப்பட வைப்பதாகவும் தேர்தல் நடந்த செய்தி அதிர்ச்சியடைய வைப்பதாகவும் இருந்தது.

பத்திரிகை, வானொலியிலிருந்து – தொலைக் காட்சி, திரைப்படம் வரை இன்று காதுகிழிய நடத்திக் கொண்டிருக்கும் தேச பக்தி பஜனைக்கு பிள்ளையார் சுழி போட வைத்தது இக்காஷ்மீர் பிரச்சனை தான்.

நீண்டகாலமாக, இந்தியாவின் ஆக்கிரமிப் பிலிருந்து விடுதலை பெறுவதற்காக, போராடிக் கொண்டிருக்கும் அம்மக்களுக்கு உலகில் எந்த சர்வாதிகாரியும் கூட செய்யத் துணிந்திருக்காத கொடுமைகளை, இந்தியாவின் பிற பகுதிக்கு தெரிந்துவிடாமல் மிகக் கொடூரமாகச் செய்து கொண்டிருக்கிறது. இந்திய அரசு!

தேர்தலையொட்டி, அம்மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்திய அனைத்து பத்திரிகைகளும், தனியார் தொலைக்காட்சிகளும் கூறுவது: "இந்திய ஜனநாயகத் தையோ, இந்தத் தேர்தலையோ அம்மக்கள் ஒரு துளியளவும் ஏற்கத் தயாரில்லை" என்பது தான்.

மாபெரும் இந்திய ராணுவத்தின் அனைத்து அடக்குமுறைகளையும் மீறி அம்மக்கள் வீதிகள் தோறும் போட்ட "தேர்தலும் வேண்டாம், தேர்ந்தெடுத்தலும் வேண்டாம். எங்களுக்குத் தேவை சுதந்திரம் மட்டுமே" என்ற முழக்கம் பள்ளத்தாக்கு, சமவெளிகள் என்று அப்பிரதேசம் முழு வதும் எதிரொலித் திருக்கிறது.

டெல்லி தூர் தர்ஷன் 40 முதல் 50 சதவீதம் வரை வாக்குப்பதிவு நடந்த தாகவும், மக்கள் அமைதியாகவும், ஆர்வத்துடனும் வந்து வாக்களித் தார்கள் என்றும் கூறுகிறது. ஆனால், பிபிசி முதல் இந்தியாவில் வெளி யாகும் இந்தியா டுடே, அவுட்லுக் போன்ற ஆங்கில பத்திரிகைகள் வரை "இந்திய ராணுவம் கிராமம் கிராம மாகச் சென்று, ஒவ்வொரு வீட்டு கதவையும் தட்டி, அனைவரும் வாக்களிக்க வேண்டும்: மீண்டும் வந்து உங்கள் விரல்களில் அடையாளமை இருக் கிறதா என சோதிப் போம்; விரல்களில் அடை யாளமை இல்லாவிட்டால், கழுத்தில் தலை இருக்காது' என்று மிரட்டியுள்ளது" என்று கூறுகின்றன.

காஷ்மீரில் பாராளுமன்றத்திற்கான தேர்தல் என்ற அறிவிப்பு வந்தவுடனேயே அனைத்து கட்சி ஹுரியத் மாநாடு, முதல் அனைத்து இயக்கங்களும், போராளிக் குழுக்களும் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்த அனைத்து 'பொது வேலை நிறுத்தங்களும்' ராணுவத்தின் கடும் அடக்குமுறைக்கு இடையேயும் நூறு சதவீத வெற்றியடைந்திருக்கிறது.

காஷ்மீரின் அரசு ஊழியர்கள் யாரும் தேர்தலில் பங்கேற்பதும் இல்லை; தேர்தல் பணி செய்ய போவதுமில்லை என்று தீர்மானமே போட்டிருந்ததின் விளைவாக, இந்திய அரசு, டெல்லி இந்திய விமானப் படையிலிருந்தும், விமானத் துறையிலிருந்தும் ஒரு மாத அதிகப்படிச் சம்பளமும், ஐந்து லட்ச ரூபாய்க்கான காப்பீட்டுத் தொகை உத்திரவாதமும் வழங்கி தேர்தல் பணிகளுக்கு அதிகாரிகளை நியமித்திருந்தது.

கடந்த முறை (1991) தேர்தலை நடத்தவே முடியாமல் போனபின், இம்முறை சர்வதேச மற்றும் உள்நாட்டு



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடிகளின் விளைவாக ராணுவத்தைக் கொண்டு துப்பாக்கி முனையில் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது.

அனைத்து வாக்குச்சாவடிகளும் 'மிகவும் பதட்டமானவை' மற்றும் 'பதட்டமானவை ' என்று பிரிக்கப்பட்டு அவற்றில் ஒவ்வொன்றுக்கும் 20 முதல் 25 ஆயுதந்தாங்கிய வீரர்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்திருக் கிறார்கள். அனைத்து வேட்பாளர்களுக்கும் 'Z' பிரிவு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு தேர்தல் பிரச்சாரம் செய்ய தைரியமூட்டியும், இந்திய ஏஜெண்ட் அமைப்பான இக்வான் உல்–முஸ்லிமூனின் அரசியல் பிரிவாகிய அவாமிலீக் மட்டுமே தங்கள் ஆயுதப் பரிவாரங்கள் புடைசூழ தொகுதிக்குச் சென்று தங்களுக்கு ஓட்டளிக்க மக்களை மிரட்டியுள்ளது.

அவாமிலீக் வேட்பாளர்களின் பொதுக்கூட்டங் களுக்கு மக்களை துப்பாக்கி முனையில் தள்ளிச் சென்றுள்ளனர். வாகனங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தி தங்கள் பொதுக் கூட்டங்கள் நடக்கும் மைதானங்களுக்கு வலுகட்டாயமாக திருப்பி விட்டுள்ளனர். தேர்தல் நடைபெற்றால் போதும் என்ற நோக்கத்தில் உள்ளூர் நிர்வாகமும். இந்திய ராணுவமும் அவர்களுக்கு உற்சாகமூட்டியும், ஒத்துழைப்பு கொடுத்தும் வந்துள்ளது.



## அடையாள மையை சோதிக்கும் இராணுவம்

ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காமல், அங்குள்ள ஆயுதக்குழுக்கள் சிலவற்றிற்கு இந்திய அரசு ஆயுதமும், பணமும் கொடுத்து உதவி வருவதை நிறுத்தாமல் தேர்தல் நடத்துவது 'நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்வதாகும்' என்று காஷ்மீரின் காங்கிரஸ் தலைவர்களே புலம்பும் அளவிற்குத்தான் நிலைமைகள் இருந்து உள்ளன.

காஷ்மீரை இந்தியாவுடன் சேர்த்தபொழுது அப்பொழுதைய காஷ்மீரின் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், அம்மாநிலத்திற்கென உருவாக்கப்பட்ட சட்ட நிர்ணய சபை ஆகியவை ஏதேச்சதிகாரமாக மைய அரசால் நிராகரிக்கப்பட்டு, அம்மக்களின் உணர்வுகளும், உரிமைகளும் மிதிக்கப்பட்டதன் விளைவுதான் சுதந்திர காஷ்மீர் போராட்டத்திற்கான துவக்கம்.

இன்றைக்கு அப்போராட்டம் பல கட்டங்களை கடந்து உச்சநிலையை அடைந்துள்ளது. ஒட்டு மொத்த காஷ்மீர் மக்களும் இந்திய நாட்டை அந்நிய நாடாகவும், இந்திய ராணுவத்தின் செயல்பாடுகளை அந்நிய நாட்டின் அப்பட்டமான ஆக்கிரமிப்பாகவும் கருதி கடும் வெறுப்பும், எதிர்ப்பும் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இப்பிரச்சினைகளுக்கு எந்த தீர்வும் காண முயற்சிக்காமல், தேர்தலை நடத்த செய்த முடிவு 'தேசிய மாநாடு' போன்ற 'இந்திய' சார்பு இயக்கம் கூட தேர்தலைப் 'புறக்கணிக்க' வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

காஷ்மீர் மக்களின் விடுதலை போராட்டத்தை நேர்மையாக எதிர்கொள்ள திராணியற்ற இந்திய அரசு அப்போராட்டத்தை 'பாகிஸ்தானின் சதி (!) என இடைவிடாது பசப்புகிறது பாகிஸ்தானோ, அமெரிக்காவின் துணையுடன் உலக அரங்கில் காஷ்மீர் பிரச்சனையை எழுப்பி இந்திய அரசிற்கு நெருக்கடி எற்படுத்த முயற்சிக்கிறது. பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீர் பகுதியான ஆசாத் காஷ்மீரில், நடந்த தேர்தலிலும், பாகிஸ்தானின் இறையாண்மையை ஏற்காததற்காக வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் விடுதலைக்காக போராடும் அப்பகுதி பாகிஸ்தான் அரசும் மக்களை ஒடுக்கிவருகிறது. மொத்தத்தில், இரு நாட்டு ஆளும் வர்க்கங்களும், காஷ்மீரை ஆக்கிரமித்து அதன் செல்வத்தை கொள்ளையடிக்கவே விரும்புகின்றன. அத்துடன் தங்களது மக்கள் விரோத பொருளாதார கொள்கைகளையும் வரையறையற்ற ஊழல்களையும் மக்கள் எதிர்த்து விடாமல் திசை திருப்பவும் காஷ்மீர் பிரச்சனையை பயன்படுத்தி மக்களுக்கு தேசிய வெறியூட்டவும் முயற்சிக்கின்றன. காஷ்மீர் மக்களோ, இருநாடுகளையும் புறக்கணித்து, சுதந்திர காஷ்மீர் அடையவே போராடு கின்றனர். இத்தகைய சூழலில் தான் இந்திய அரசு, சனநாயகத் (?) தேர்தலை ஆயுத முனையில் நடத்தியது.

நாட்டின் பெரும் பகுதிகளில் ஆயுத முனையில் தேர்தலை நடத்திவரும் நமது அரசு, மக்கள் மத்தியில் முழுமையாக அம்பலப்பட்டு நிற்கி றது.

குறிப்பாக உழவர்களின் ஆயுதப் போராட்டம் நடைபெறும் ஆந்திரா, பீகார் போன்ற மாநிலங்களும் தேசிய இனப் போராட்டம் வெடித்தெழுந்துள்ள பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் காஷ்மீர் போன்றவை அரசின் முகத்திரையையும் முழுமையாக கிழித்து அம்பலப் படுத்தியுள்ளன.

மக்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும் புறக்கணித்துவிட்டு வன்முறையின் துணைகொண்டு தேர்தலை நடத்தியதன்மூலம் தான் வெற்றி பெற்று விட்டதாக தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் முட்டாள்தனத்தைத் தான் சமீபத்திய தேர்தல் மூலம் இந்திய அரசு செய்துள்ளது.

தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இந்தியாவை உருவாக்கி வைத்துள்ள தரகு பெரு முதலாளிகள் – பெரு நிலபிரபுக்களின் கைகளிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக இன்று இந்தியாவெங்கும் வெடித்துக் கிளம்பியுள்ள உழவர் ஆயுதப் போராட்டங்கள், தேசிய இன போராட்டங்களுடன், இன்றைக்கு அம்மக்களின் இயக்கங்கள் இணைந்து வருவது இப்போலி ஜனநாயக தேர்தலுக்கு முற்றுபுள்ளி வைத்து உண்மையான விடுதலையை அம்மக்கள் அடைந்தே தீருவார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

– கிருஷ்ணன்



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் களத்தில்....

## முற்போக்கு இளைஞர் அணி - முற்போக்கு மாணவர் சங்கம்

### மதுரை மாவட்டம்

◆ ஜனவரி 25, 'மொழிப் போர் தியாகிகள் நினைவு தினத்திற்கு' மு.இ.அ., மு.மா.ச. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ ஜனவரி 26 அன்று போலிக் குடியரசு தினத்தை அம்பலப்படுத்தி மு.இ.அ. மு.மா.ச. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ மார்ச் 23 அன்று 'பகத்சிங் நினைவு தினத்திற்கு' பகத் சிங், ராஜ குரு, சுகதேவ் ஆகியோருக்கு வீரவணக்கம் செலுத்தி பகுதியளவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ மார்ச் மாதம் தர்மபுரியில் கொலைகாரனை மக்கள் மத்தியில் தண்டித்த மு.இ.அ., உ.உ.மா, தோழர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கை திரும்பப் பெறவும் தோழர்களை விடுதலை செய்யக் கோரியும், போலீஸ் அராஜகத்தை கண்டித்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ மே தினத்தன்று தொழிலாளர் விரோத அரசை ஒழித்து பாட்டாளி வர்க்க அரசை படைக்க அறைகூவல் விட்டு மு.இ. அ., மு.மா ச. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

### சென்னை மாவட்டம்

◆ விடுதியில் 'அம்பேத்கார்' 'புரட்சி புலிகள்' என்ற அமைப்பு பெயரில், மாணவர்களை தேர்தலில் போட்டியிட அழைப்பு விடுத்து சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. மு.மா.ச. தனது 'முற்போக்கு மாணவர் குரல்' என்னும் சுவர் பத்திரிகையில் இதற்குப் பதிலளிக்கும் வகையில் போலி ஜனநாயகத் தேர்தலை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்தது.

### சேலம் மாவட்டம்

◆ பீகார் RSL தோழர். அர்ஜுன் மறைவிற்கு அஞ்சலி செலுத்தி கையெழுத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ கருப்பூர் பள்ளியில் தமிழாசிரியர் பதவிக்கான காலியிடத்தை நிரப்பக் கோரியும், மாணவர்களின் படிப்பைக் கெடுக்கும் வகையில் சத்தம் ஏற்படுத்தும் அருகில் உள்ள திரையரங்கின் ஒலியை குறைக்கக் கோரியும் மு.மா.ச. போராடி வெற்றி பெற்றது.

◆ சட்டக் கல்லூரி தனியார்மயமாக்கலுக்கு எதிரான சட்டக் கல்லூரி மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்து கையெழுத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

◆ தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் சேலம் RDO அலுவலகம் முன்பு தமிழை ஆட்சி மொழி ஆக்கக் கோரியும், இந்தி, ஆங்கிலத் திணிப்பை எதிர்த்தும் மார்ச்–ஐல் தோழர் மணி (மு.இ.அ) தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது. இவ்வார்பாட்டத்தில் தோழர். ஜெயராமச்சந்திரன் (மு.மா.ச.), தோழர் ஸ்டாலின் (பு.இ.மு) திரு. அர்த்தனாரி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

◆ மார்ச்–23 தோழர் பகத்சிங் நினைவு தினம் அன்று தோழர் பாலன் நினைவரங்கத்தில் தோழர் பகத்சிங் நினைவு தினக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் மணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர் ஜெயராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார். தோழர், மூர்த்தி நன்றியுரை நிகழ்த்தினார். நினைவு தினத்திற்காக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. கூட்டத்தில் 50–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### அம்பேத்கார் மாவட்டம்

◆ பள்ளிகளில் கட்டாய நன்கொடை வாங்குவதை எதிர்த்தும், மக்களை நன்கொடை கொடுக்க வேண்டாம் என வலியுறுத்தியும் 150 சுவரொட்டிகள் வேலூர் நகர் முழுவதும் ஒட்டப்பட்டன.

### டூபான்ட் ஆலையை எதிர்த்து கும்மிடிப்பூண்டியில்.......

மக்கள் விரோத டூபான்ட் ஆலை சென்னைக்கு அருகிலுள்ள கும்மிடிப்பூண்டியில் அமைக்கப்படுவதை எதிர்த்து முற்போக்கு இளைஞர் அணி–முற்போக்கு மாணவர் சங்கம் சார்பில் கடந்த நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஏப்ரல் 25 அன்று கும்மிடிப்பூண்டியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் பார்த்திபன், வாசு, சுந்தர்ராசன் மற்றும் கும்மிடிப்பூண்டி வட்டார விவசாயிகள் விவசாயத் தொழிலாளி கள் நடவடிக்கைக் குழுவின் தலைவர் கிருஷ்ணம்மராஜ் ஆகியோர் அதில் உரையாற்றினர். மேலும், துண்டறிக்கைகளும் பரவலாக விநியோகிகப்பட்டன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

அத்துடன், கும்மிடிப்பூண்டி வட்டார விவசாயிகள் விவசாயத் தொழிலாளிகள் நடவடிக்கைக் குழுவின் சார்பிலும் தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்தனர்.

ஆலைக்கு மண் சப்ளை செய்யும் லாரிகள் பாத்த பாளையம், பாப்பன்குப்பம் முதலிய கிராமங் களின் பஞ்சாயத்து சாலைகளில் சட்டவிரோதமாக செய்வதனால் அதை தடைசெய்யுமாறு சென்ற ஜுனில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. பின்னர், அம்மனு வட்டாட்சியர் மற்றும் BDO ஆகியோரிடம் அளிக்கப் பட்டது.

சென்னை– கொரட்டூரிலுள்ள பக்தவச்சலம் நினைவு பெண்கள் கல்லூரியின் மாணவிகள் ஆலையை ஆதரித்து பிரச்சாரம் செய்ய சென்ற ஜுனில் பாத்தபாளையம், பாப்பக் குப்பம் ஆகிய கிராமங்களுக்கு வந்தனர். ஆனால் மக்களின் எதிர்ப்பால் பிரச்சாரம் நடைபெற இயலவில்லை.

ஆலை அமைக்கப்படுகின்ற பாத்தபாளையம் கிராமத்தில் லாரி போக்குவரத்தால் தண்ணீர் குழாய் உடைந்ததால் ஆலை நிர்வாகத்தை எதிர்த்து ஒரு மணி நேரம் சாலை மறியல் நடைபெற்றது. பின்னர், வேறு வழியின்றி அதிகாரிகள் தண்ணீர் குழாயை செப்பனிட்டனர்.

**முற்போக்கு இளைஞர் அணி**
**முற்போக்கு மாணவர் சங்கம்**



படிப்பகம்

www.padippakam.com

## தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்

சமீபத்தில் நடைபெற்ற இந்திய பாராளுமன்றம் மற்றும் தமிழக சட்டமன்றத்திற்கான போலி ஜனநாயகத் தேர்தலை புறக்கணிக்கக்கோரி மு.மா.ச., மு.இ.அ. மற்றும் உ.உ.மா. ஆகியவை மக்கள் மத்தியில் இயக்கம் எடுத்தன. அவை

**சென்னை மாவட்டம்**

தேர்தலை புறக்கணிக்கக்கோரி பெரம்பூர், திருமங்களம், திரிசூலம், வில்லிவாக்கம், கே.கே. நகர் பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 21.4.96 அன்று திருமங்களத்தில் ஒரு நாள் கண்காட்சி வைக்கப்பட்டது. இக்கண்காட்சியில் ஓட்டுக்கட்சிகளின் ஊழலை அம்பலப்படுத்தியும், மார்க்சிய – லெனினிய – மாவோ சிந்தனை வழியிலான புதிய ஜனநாயகப் புரட்சியை வலியுறுத்தியும், போலி ஜனநாயக பாராளுமன்ற, சட்டமன்ற பாதையை புறக்கணித்து நக்சல்பாரி தலைமையில் நடைபெறும் ஆந்திரா, தண்டகாருன்யா, பீகார் உழவர்களின் ஆயுதப் போராட்டங்களை சித்தரித்தும் கருத்துப்படங்கள் வைக்கப்பட்டன. இக்கண்காட்சியை 200–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர். மேலும் தேர்தல் புறக்கணிப்பு மைய சுவரொட்டிகள் நகர் முழுவதும் பரவலாக ஒட்டப்பட்டன.

**மதுரை மாவட்டம்**

இத்தேர்தல் முறையினால் ஏன் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பதையும். இப்போலி ஜனநாயக தேர்தல் முறையை ஏன் புறக்கணிக்கவும், புரட்சிகர பாதையில் அணி திரள சொல்கிறோம் என்பதையும் விளக்கி மூன்று நாட்கள் ஆட்டோ மற்றும் மூன்று சக்கர மிதிவண்டி மூலம் ஒலிபெருக்கி பிரச்சாரம் நகரின் பல பகுதிளிலும் செய்யப்பட்டது. 500 சுவரொட்டிகள் நகர் முழுவதும் ஒட்டப்பட்டன. தட்டி. டயர் போர்டுகள் முக்கிய பகுதிகளில் வைக்கப்பட்டன. அருள்தாஸ்புரம், செல்லூர், மற்றும் கோரிப்பாளையம் பகுதிகளில் வீடுவீடாகச் சென்று மக்களை தேர்தல் புறக்கணிப்பு செய்யக் கோரி விளக்கப்பட்டது.

1000 கதவொட்டிகள் பகுதியளவில் ஒட்டப் பட்டன. 5000 துண்டு பிரசுரங்கல் பரவலாக மக்களிடம் விநியோகிக்கப்பட்டது.

**அம்பேத்கார் மாவட்டம்**

தேர்தல் புறக்கணிப்புக்காக மு.மா.ச. சார்பில் 2000 துண்டறிக்கை போடப்பட்டது. வேலூர் பகுதியில் பரவலாக துண்டறிக்கை விநியோகித்து தெரு முனை பிரச்சாரம் செய்யப்பட்டது. வேலூர் பகுதியில் இயங்கி வரும் பகத்சிங் சோஷலிஸ்ட் வாலிபர் சங்கம் பகுதி அடிப்படை பிரச்சினையையொட்டி தேர்தல் புறக்கணிப்பு நடத்தியது. அதில் மு.மா.ச.வு ம் கலந்து கொண்டு மக்களை தேர்தல் புறக்கணிப்புக்கு அணி திரட்டியது. மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க கோரி 150 சுவரெட்டிகள் ஒட்டப்பட்டன.

**தருமபுரி மாவட்டம்**

நடந்து முடிந்த 11–வது சட்டசபை – பாராளுமன்ற தேர்தலை புறக்கணித்து தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு எழுச்சி மிகு வடிவங்களில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடந்தது. முற்போக்கு மாணவர் சங்கம், முற்போக்கு இளைஞர் அணி மற்றும் உழவர் உழைப்பாளர் மாமன்றம் ஆகியவை ஒன்றிணைந்து கூட்டு நடவடிக்கையின் மூலம் தேர்தலை புறக்கணிக்க கோரியும், நமது விடிவுக்கு தமிழகத்தின் விடிவெள்ளி யாய் ஒரு புதிய ஆயுதப் போராட்ட முனையை உருவாக்க வேண்டும் என மக்களிடையே தீவிரமாக பிரச்சாரத் தை மேற்கொண்டது. 8000–ற்கும் மேற்பட்ட துண்டு பிரசுரங்கள், 500–க்கும் மேற்பட்ட சுவரொட்டிகள், விளம்பர பலகைகளின் வாயிலாக பிரச்சாரம் இயக்கம் நடத்தப்பட்டது. அத்துடன் 30ற்கும் மேற்பட்ட நகர, கிராம மையங்களில் கலை நிகழ்ச்சிகள் வாயிலாக ஓட்டுக் கட்சிகளின் ஓட்டாண்டித்தனத்தை அம்பலப் படுத்தியும், நாடு மறுகாலனி ஆவதன் அபாயத்தையும், இதற்கு ஒரே தீர்வு நக்சல்பாரி பாதையே என பிரச்சாரம் செய்யப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் நூற்றுக்கணக்கானோர் நிகழ்ச்சியினை கண்டதுடன், புரட்சிகர இயக்கங்களின் மேல் உள்ள நம்பிக்கையினை வெளிப்படுத்தினர்.

உள்ளூர் ஓட்டுக்கட்சித் தலைவர்கள் வஞ்சகமாகக் கலைநிகழ்ச்சிகளை தடுக்க முற்பட்ட போது, மக்களே அக்கயவர்களை எதிர்த்து நின்று நிகழ்ச்சிக்கு ஆதரவு அளித்தனர். சில கிராமங்களில் நிகழ்ச்சி முடிந்தவுடன் ஓட்டுக் கட்சிகளின் விளம்பரம்க் கொடிகளை அகற்றி தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தில் இணைந்து கொண்டனர். நான்கு இடங்களில் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டு, காவல்துறை மறுத்துவிட்டது.

தேர்தலை பிரச்சார வடிவில் மட்டும் நிறுத்திவிடாமல் தேர்தலை புறக்கணிக்க மக்களை கிராமம் கிராமமாக அணி திரட்டியது. பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் **தேர்தல் புறக்கணிப்பு கமிட்டிகள்** கட்டப்பட்டன. உள்ளூர் பிரச்சினைகளை மையமாக வைத்து இக்கமிட்டிகள் கிராமக் கூட்டங்களை நடத்தின. அதில் உள்ளூர் பிரச்சினைகள் தொகுக்கப்பட்டு விளம்பர பலகையில் எழுதி வைக்கப்பட்டது. மேலும் ஓட்டுக் கேட்க வேட்பாளர்கள் உள்ளே நுழையும் போது மக்கள் கேள்விகளால் துளைத்தெடுத்தனர். குறிப்பாக பூதிப்பட்டி. நத்தம் போன்ற பகுதிகளில் வேட்பாளர்களை கிராமங்களுக்குள்ளே நுழைய விடாமல் தடுத்து நிறுத்தினர்.

நெருப்பூர் பகுதியில் புறக்கணிப்பு கமிட்டியை ஓட்டுக்கட்சி திருடர்கள் உடைக்க முயற்சி செய்தனர்.சில பகுதிகளில் மிரட்டவும் செய்தனர். இத்தகைய சதி செயல்களை உ.உ.மா. உறுதியாக நின்று அம்பலப் படுத்தியது.

இத்தகைய தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தின் மூலம் உழைக்கும் மக்களை அமைப்புரீதியாக அணிதிரட்டியதுடன், அவர்களின் புரட்சிகர போராட்ட உணர்வு வளர்த்தெடுக்கப்பட்டது. அதோடு மட்டுமின்றி இந்தியாவெங்கும் புரட்சிகர இயக்கங்களின் தலைமையில் நடந்த தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தில் தருமபுரி மாவட்ட உழைக்கும் மக்கள் தங்களையும் இணைத்து கொண்டது வரலாற்றுச் சிறப்பு.

**சேலம் மாவட்டம்**

மு.இ.அ. வுடன், மு.மா.ச. இணைந்து நகரத்தில் அம்மா பேட்டை , ஏரி, கருங்கல்பட்டி, இளம்பிள்ளை, ரெட்டியூர் ஆகிய இடங்களில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்யப்பட்டது.

மு.மா.ச. மு.இ.அ. மற்றும் உ.உ.மா இணைந்து கிராமங்களில் 68 தெருமுனை நிகழ்ச்சிகள் நடத்தின. தட்டி போர்டு, சுவர் எழுத்து, துண்டு பிரசுரம், சுவரொட்டி ஆகியவை மூலம் தேர்தல் புறக்கணிப்பு நகரம் மற்றும் கிராமப்புறங்களில் பரவலாகச் செய்யப்பட்டது.

**முற்போக்கு இளைஞர் அணி**
**முற்போக்கு மாணவர் சங்கம்**



படிப்பகம்

www.padippakam.com




# உரைகல்

ஏகாதிபத்திய ஆட்கொல்லி டூபான்ட் கம்பெனியை விரட்ட கிளர்ந்தெழுந்த கோவா மக்களின் போராட்டத்தை சிறப்பாக எழுதியிருந்தீர்கள். இதனால் ஏற்படும் சுற்றுப்புற சூழல் கேட்டினை ஆய்வு செய்து எழுதியிருந்ததும் நன்றாக இருந்தது. இதுபோன்ற கட்டுரைகளை தொடர்ந்து எழுதுங்கள்.

கொடியன்குளம், ராஜபாளையம் போன்ற இடங்களில் நடைபெறும் சாதிக்கலவரங்கள் குறித்தும் சாதியின் தோற்றம், வளர்ச்சி, அவற்றை எப்படி ஆளும் வர்க்கம் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பயன்படுத்துகிறது. சாதி, மதத்தை கட்டிக்காக்க பிராமணியத்தின் பங்கு என்ன? என்பதை விளக்கி முன்னோடியில் கட்டுரை எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன். - **S. தங்கவேல்** சென்னை.

கடந்த இதழில் எழுத்து மற்றும் வாக்கியப் பிழைகள் ஏராளமாக உள்ளன. இவற்றை தவிர்க்கவும். படங்களில் விளக்க குறிப்புகளிலும் குழப்பம் உள்ளது. சாதிக்கலவரம் நடந்த வேளையில் அதுபற்றி ஏன் கட்டுரை எதுவும் வரவில்லை. 'மக்கள் களத்தில்' பகுதி ஏன் வெளியிடப்படவில்லை?

முன்னோடி வாசகர்,
சேலம்.

***உரைகல்*** *பகுதி தொடர்ச்சியாக இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்கள் தங்கள் விமர்சனங்களை பத்து வரிக்குமிகாமல் எழுதி அனுப்பவும்.*

**- ஆசிரியர் குழு**

---

– 21 ஆம்பக்க தொடர்ச்சி

இதை அறிந்ததும் மு.இ.அ. பிற அமைப்புகள் மற்றும் பகுதி மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோரைத் திரட்டி ஊர்வலமாக காவல் நிலையத்திற்குச் சென்று கணேசனை விடுதலை செய்யக் கோரியும், ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மனு கொடுத்தது.

மேலும் இத்தகைய பிரச்சினைகள் இப்பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெறுவதாலும், மக்கள் கடுமையாக இப்பிரச்சினையால் பாதிக்கப்படுவதாலும், காவல்துறை இக்கொள்ளையர் கூட்டங்களோடு கைகோர்த்துக் கொண்டு செயல்படுவதாலும் மக்களை காக்க புரட்சிகர – ஜனநாயக அமைப்புகள் ஒரணியில் செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே திராவிடர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம், விடுதலைச் சிறுத்தைகள், தமிழக இளைஞர் முன்னணி, தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம், பகுதி இளைஞர் கமிட்டி, முற்போக்கு இளைஞர் அணி ஆகிய அமைப்புகள் இணைந்து **'சமூக விரோதிகள் எதிர்ப்பு கூட்டமைப்பு'** உருவாக்கப்பட்டது. இக்கூட்டமைப்பு சார்பாக செல்லூர் 50 அடி ரோட்டில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்த மறுநாள் கூட்டமைப்பிற்கு காவல் நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. வழிப்பறி செய்த கொள்ளையர்களின் சார்பாக காவல்துறையே பேச்சு வார்த்தைக்கு வந்தது. ரவுடிகள் மக்கள் மத்தியில் மன்னிப்பு கேட்க வேண்டும், திருடிய பணத்தை திரும்ப பெற்றுத்தர வேண்டும் என கூட்டமைப்பு சார்பாக உறுதியாக கூறப்பட்டது.

ஆனால் ரவுடிகள் யாரும் அதன் பிறகு மன்னிப்பு கேட்கவில்லை. ரவுடிகள் சார்பாக காவல்துறை பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் காவல்துறை மக்களின் நன்பர்களல்ல, ரவுடிகளின் நண்பர்கள் என்பதை நிரூபித்தது.

இதுபோல தெருவில் ரவுடித்தனம் செய்த ரவுடி ஒருவனையும், ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயன்ற இளைஞன் ஒருவனையும் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வைத்தது. இத்தகைய சம்பவங்களுக்கு எதிராக மக்களை அமைப்பு ரீதியில் திரள அறைகூவல்விட்டு தொடர்ச்சியாக தெருமுனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கடந்த 21.5.96 அன்று கோரிப்பாளையத்தில் 'ரம்யா பைனான்ஸ்' நடத்தும் வட்டிக்கடைக்காரர்கள் ஆட்டோ ஓட்டும் நமது அமைப்பு ஆதரவாளரான தோழர் சோமனின் ஆட்டோவில் சவாரிக்கு அழைத்து, செல்லும் வழியில் அவரோடு தகராறு இழுத்து அவரை மருத்துவமனையில் சேர்க்கும் அளவிற்கு அடித்து காயப்படுத்தினர்.

உடன் மு.இ.அ., DYFI, RSYF போன்ற அமைப்புகள் இணைந்து 1) பாதிக்கப்பட்ட ஆட்டோ தொழிலாளிக்கு மருத்துவச் செலவும் 2) மக்கள் மத்தியில் மன்னிப்பும் கேட்காதவரை பைனான்ஸை திறக்க அனுமதிக்கப் போவதில்லை என்று நிபந்தனை விதித்தனர். இறுதியில் வேறுவழியின்றி மருத்துவச் செலவை ஏற்று மன்னிப்பு கேட்டனர்.

இத்தகைய சம்பவங்கள் உழைக்கும் மக்கள் மற்றும் நடுத்தர மக்களுக்கு இந்த இருள் சூழ்ந்த உலகில் நம்பிக்கை தரும் ஒளி வெளிச்சங்களாக உள்ளன என்பதை யார் மறுக்க முடியும்!

**முற்போக்கு இளைஞர் அணி**

மதுரை மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய இனப் பிரச்சனைக் குறித்த

# சர்வதேசக் கருத்தரங்கம்

*(சென்ற இதழில், இக்கட்டுரையின் முதல் பகுதி வெளியாயிற்று. ஆனால், அதன் இறுதியில் அடுத்த இதழில் நிறைவடையும்' என குறிப்பிடப்படவில்லை. அக்கட்டுரையின் இறுதிப் பகுதியை கீழே வெளியிடுகிறோம்.)*

நகூகி, தனது உரையில், அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகளில் வளர்ந்துவரும் முதலாளிய அடிப்படைவாதமானது மதம்(அ) இன அடிப்படைவாதத்தை விட மிகவும் அபாயகரமானது என எச்சரித்தார். ஆப்பிரிக்காவின் தேசிய இனப் பிரச்னை குறித்து கூறும்போது, ஆப்பிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றாலும் அது காலனிய சக்திகளின் ஆதிக்கத்திற்கு வழி வகுத்துள்ளது என்றார். முதலாளிய அடிப்படைவாதத்தை தூக்கியெறிய பரந்துபட்ட அளவில் நவகாலனிய – ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை அமைக்க அறைகூவல் விடுத்தார்.

அடுத்து, 'ஐரோப்பாவில் தேசியத்தின் வளர்ச்சி' என்ற தலைப்பில் பெல்ஜியம் தொழிலாளர் கட்சியைச் சார்ந்த லுடோ மார்டன்ஸ் மற்றும் ஜோ கோட்டனீர் இணைந்து தயாரித்த கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர், 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' குறித்து ஈழவேந்தன் கட்டுரை வாசித்தார். அதே தலைப்பில் பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகம் (Provo) தரப்பிலும் ஒரு கட்டுரை வாசிக்கப்பட்டது.

மூன்றாம் நாளில், இந்தியாவில் நடைபெறும் தேசிய இனப் போராட்டங்கள் குறித்த கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

முதலாவதாக, 'காஷ்மீர் விடுதலைப்போராட்டம்' குறித்து அனைத்து கட்சி ஹூரியத் மாநாடு என்ற கூட்டமைப்பு சார்பில் அதன் செயற்குழு உறுப்பினர் அப்துல் கானி லோன் என்பவர் தனது உரையில் காஷ்மீர் தேசிய இனப்பிரச்சனை,குறித்து எடுத்துரைத்தார்.

1585ல் நடைபெற்ற காஷ்மீர் மக்களின் மீதான முகலாய மன்னர் அக்பரின் படையெடுப்பு, அதனைத் தொடர்ந்து சீக்கியரின் ஆதிக்கம், டோக்ரா இந்து மன்னர்களின் நூற்றாண்டு கால ஒடுக்குமுறை ஆட்சி, அக்டோபர் 1947–ல் நிகழ்ந்த இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு,அன்றுமுதல் இன்று வரை நீடிக்கும் இந்திய அரசின் அடக்குமுறை முதலியவற்றை விவரித்தார்.

கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் 40,000 மக்கள் இந்தியக் கூலிப் படைகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டார். அவருடன் ஜம்மு–காஷ்மீர் விடுதலை முன்னணியின் துணைத் தலைவர் ஜாவித்மீர் என்பவரும் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

அடுத்து,'நாகா விடுதலைப் பேராட்டம்' குறித்து 'நாகா மாணவர் கூட்டமைப்பு;' மனித உரிமைகளுக்கான நாகா மக்கள் இயக்கம் ஆகியவற்றின் சார்பில் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இரு கட்டுரைகளும், நாகா மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துரைத்தன.

அடுத்து, அசாம் விடுதலைப் போராட்டம்'குறித்து ஒரு கட்டுரை அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி' (ULFA) சார்பிலும் மற்றொரு கட்டுரையும் 'சதின்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் அஜித்கமார் புயான் சார்பிலும் சமர்ப்பிக்கப்பட்டன.

உலக வணிக அமைப்பின் (WTO) உருவாக்கமானது, முழுவதுமான ஒரு புதிய சூழ்நிலைகளுக்கு நம்மை ஆளாக்கியிருக்கிறது; சந்தைவெறி பிடித்த வல்லரசுகளின் கையில் ஒடுக்கப்பட்ட சிறியதேசிய இனங்ககள் சிக்கித் தவிக்கிறது, என குறிப்பிட்ட உல்பா (ULFA)வின் கட்டுரை ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு கீழ்க்காணும் தீர்மானங்களையும் முன் வைத்தது.

அ) தாய்நாட்டிற்குள் ஐக்கிய முன்னணி (அசாமில்நடைபெறும் தேசிய இனப் போராட்டங்களிடையே ஒற்றுமை)

ஆ) வடகிழக்குப் பகுதியை தளமாக்க கொண்ட ஒற்றுமை (வரலாறு, புவியியல், அரசியல் காரணிகளினால்)

இ) இந்தியாவைத் தளமாகக் கொண்ட ஐக்கிய முன்னணி (உலகக் காலனியாதிக்கத்தை எதிர்க்கின்ற, மக்களின் உண்மையான விடுதலையை விரும்புகின்ற,இந்திய அரசு எந்திரத்தை தங்களின் எதிரியாகக் கருதுகின்ற தேசங்கள்)

ஈ) உலகெங்கும் நடைபெறும் ஒடுக்கப்பட்ட தேசங்களின், தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவை வழங்கிடவு– ம்சோசலிச ஆட்சி என்ற பெயரில் முதலாளியம் மீட்டமைக்கப்படும் நாடுகளில் அரசியல் அமைப்பை மாற்ற முனைவும் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் உறவு வைத்துக் கொள்ளவும் வேண்டும்.

அடுத்து,'பஞ்சாப் விடுதலைப்போராட்டம்' குறித்துபஞ்சாபில் உள்ள 'ஜமூரி மோர்ச்சா' என்ற அமைப்பும் கட்டுரை வாசித்தது. பஞ்சாப் மனித உரிமை அமைப்பின் தலைவர் நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ் அவர்களும் ஒரு கட்டுரை வாசித்தார்.

மேலும், உத்தரகாண்ட், ஜார்கண்ட் மற்றும் கோர்காலாந்து ஆகியவற்றின் மீதும் கர்பி தேசிய இனப் பிரச்னைமீதுகர்பி தேசியப் படையும் கர்நடகத் தேசிய இனப் பிரச்னை'குறித்து கர்நாடகா விமோச்சனரங்கா'வும் கட்டுரைகள் வைத்தன.

இறுதி நாளில், 'நேபாளத்தில் தேசிய இனப் பிரச்னை என்ற தலைப்பில் அனைத்திந்திய நேபாள பெண்கள் சங்கம் (புரட்சிகர)' சார்பில் அதன் தலைவர் தோழர் ஹிஸிலா யாமியும் 'பாகிஸ்தானில் தேசிய இனப் பிரச்னை;கடந்த காலமும் நிகழ் காலமும்" என்ற தலைப்பில் பாகிஸ்தான் தேசியக் கட்சித்தலைவர் ரசீக் பலூச் அவர்களும் கட்டுரைகளை வாசித்தனர்.

ரசீக் பலூக் அவர்களுக்கு இந்திய அரசாங்கம் 'விசா' வழங்காததால் கருத்தரங்கில் கலந்துகொள்ள இயலவில்லை.

மேலும், பங்களாதேஷ் பாட்டாளி வர்க்கக் கட்சி சார்பிலும் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

அடுத்து,'மொழிப் பிரச்சனை' அமர்வில் 'மனதை காலனியாதிக்கத்திலிருந்து விடுவித்தல்' என்ற தலைப்பில் நகூகியும் 'இந்தியாவில் மொழிப் பிரச்னை' என்ற தலைப்பில் சாதனா சக்சேனாவும் பேசினர்.

இறுதியாகக் கூறுவதென்றால், கருத்தரங்கம் முழுவதும் ஒவ்வொரு பேச்சாளரின் உரையின் போது பிரதிநிதிகள் முழக்கங்களை எழுப்பி, புரட்சிகர தோழமை சூழலை நிலவச் செய்தனர். இடையிடையே, உயிரோட்டமான புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும் விவாதங்களும் இடம் பெற்றன. பல தீர்மானங்களும் இந்திய மக்களின் விடுதலைக்கு, அவர்களின் எதிரியான ஏகாதிபத்திய– நிலவுடைமைச் சக்திகளை முறியடிக்க தேசிய இன இயக்கங்களும் புரட்சிகர இயக்கங்களும் தமக்கிடையில் ஐக்கியத்தை அடைய இக்கருத்தரங்கம் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என உறுதியாகக் கூறலாம்.

– பாஸ்கர்.



படிப்பகம்

www.padippakam.com



# தோழர் அர்ஜுனுக்கு வீரவணக்கங்கள்!



**1967**- ல் மேற்கு வங்கத்தின் நக்சல்பாரியில் உழவர்களின் பேரெழுச்சியானது, வசந்தத்தின் இடி முழக்கமாக வெடித்தது. இப்பேரெழுச்சி நாடு முழுவதும் காட்டுத் தீ போல பரவியது. ஆண்டாண்டு காலமாக ஆண்டைகளின் அடிமைகளாய், விலங்கினும் கேவலமாய், உரிமைகளை இழந்து கிடந்த உழவர்கள் அடிமை விலங்கினை உடைத்தெறிந்து கைகளில் ஆயுதம் ஏந்தினர். வெறும் கூலிக்காக, உணவுக்காக அல்லாமல் அதிகாரத்துக்காக ஆர்த்தெழுந்தனர். ஆளும் ஆண்டை அதிகார வர்க்கங்களுக்கு எதிராக மாபெரும் மக்கள் யுத்தத்தைத் துவங்கினர். இந்த உறுதிமிக்க மக்கள் யுத்தத்தின் தொடர்ச்சியே இன்று ஆளும் கூட்டத்தை அலறச் செய்து வரும் ஆந்திரா பீகார் தண்டகாருண்யா உழவர்கள் நடத்திவரும் புரட்சிகர போராகும். இம்மாபெரும் உறுதிமிக்க நீண்டகால மக்கள் யுத்தத்தில், மனித குல விடுதலைக்கு ஈடாக தங்கள் உயிரினை அளித்தோர் ஆயிரக்கணக் கானோர். உழைக்கும் வர்க்கம் ஆட்சி அமைத்திட செங்குருதி வடித்தோர் எண்ணற்றோர். கணக்கிலடங்கா இந்தியர்களின் வரிசையில் தானும் அணி. சேர்ந்து விட்டார் தியாகி. தோழர் அர்ஜுன் அவர், நக்சல் பாரி இயக்கத்தின் முக்கிய தளமாக விளங்கிவரும் பீகார் மாநிலத்தின் புரட்சிகர மாணவர் அணி (RSL) யைச் சேர்ந்தவர். 1993 சனவரியில் மும்பையில் நடைபெற்ற அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் மாநாட்டில் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 1995 சூலை 10-அம் நாளன்று, கயா மாவட்டம், நசீர்சாக் கிராமத்தைச் சேர்ந்த சுகுர் பஸ்வான், அவனது மகன் சிவநாத் பஸ்வான் மற்றும் லகுரா எனும் இடத்தைச் சேர்ந்த ரம்தீப்பஸ்வான் ஆகியோரடங்கிய ரௌடி கும்பல் ஒன்று அவரையும், மற்றொரு தோழரான விஜய்குமார் சத்யார்த்தியையும் புத்தகயா எனுமிடத்தி லிருந்து பாகேஸ்வரிக்குக் கடத்திச் சென்றது. அங்கு இரயில்வே குடியிருப்பு ஒன்றில் வைத்து தோழர். அர்ஜுனை தோழர் சத்யமூர்த்தி கண்முன்னரே இரும்புக் கம்பியால் தாக்கி கொடூரமாகக் கொலை செய்தனர். பின்னர் இக்கொலையை வெளியே கூறினால் தோழர் சத்யமூர்த்திக்கும், அவரது குடும்பத்திற்கும் அர்ஜுனுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும் என மிரட்டி அனுப்பினர். தோழர் அர்ஜுனை இந்த ரௌடிக் கும்பல் கொலை செய்ய என்ன காரணம்? இந்தியாவிலேயே மிகவும் பின்தங்கிய மாநிலம் பீகாராகும். இங்கு ஏழை மக்கள் உண்ண உணவின்றி மாட்டுத்தீவனத்தையும் குதிரைத் தீவனத்தையும் உண்டு வருவதும் பட்டினிச் சாவுகளும் அன்றாட நிகழ்வு. மறுபுறத்தில் மேல்சாதி ஆண்டைகளின் அட்டூழியங்கள், அதிகாரவர்க்கத்தின் உல்லாச வாழ்க்கை ஆண்டைகளுக்கென்று ஆயுதம் தரித்த தனியார்படைகளும் உண்டு. இது தவிர காவல்துறை நல்லாசியுடன் கொள்ளையை தொழிலாக செய்து வரும் எண்ணற்ற ரௌடிக்கும்பல்கள். இத்தகைய ரௌடிகும்பல்களில் ஒன்றுதான் தோழர் அர்ஜுனை கொலை செய்த கும்பலாகும். இதே கும்பல், சில காலங்களுக்கு முன்பு, மகேஷ்சிங் யாதவ் கல்லூரியில் பயின்று வந்த புரட்சிகர மாணவர் அணியைச் சேர்ந்த தோழர் சுரேந்திராவைக் கடத்திச் சென்று கொலை செய்தது. ஆண்டைகளின் அட்டூழியங்களையும், ரௌடிக்கும்பல்களின் அராஜகங் களையும், எதிர்த்து புரட்சிகர மாணவர் அணி நீண்ட காலமாக போராடி வருகிறது. குறிப்பாக, தோழர் அர்ஜுன் இப்போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்து வந்தவர். வளர்ந்து வரும் புரட்சிகர அமைப்புகளையும், மக்கள் எழுச்சியையும் கண்டு அரசாளும் வர்க்கம் கிலிபிடித்துப்போயுள்ளது. அவற்றை ஒடுக்கு வதற்கென்றே புரட்சியாளர்களை காவல்துறையும் ஆண்டைகளும், கூட்டாகச் சேர்ந்து கொன்று குவித்து வருகின்றனர். இச்சதிகாரர்களின் கொலை வெறிக்கு பலியானவர்களில் தோழர் அர்ஜுனும் ஒருவர். இத்தகைய வெறியாட்டங்களை மேலும் சிறப்பாக அரங்கேற்றுவதற்கென்றே மத்தியிலுள்ள ஐக்கிய முன்னணி அரசு, பீகாருக்கு 20 கம்பெனி துணை இராணுவ படையினை அனுப்பியுள்ளது. ஒன்றை மட்டும் இக்கொலைகாரர்கள் மறந்துவிட்டார்கள். கடந்த கால வரலாற்றில் மக்கள் எண்ணற்ற ஒடுக்குமுறைக்கு மத்தியிலும், இடைவிடாது போராடி ஆளும் வர்க்கத்தின் முகத்தில் கரி பூசி இருக்கின்றனர். குறிப்பாக, நக்சல்பாரி எழுச்சி காலம் முதல் இன்று வரை புரட்சிகர போராட்டங்களில் மாணவர்கள் செய்த தியாகங்கள் அளப்பர்கரிய. அப்புரட்சிகர பாரம்பரியத்தில் வந்த தோழர் அர்ஜுன் போன்றோரை இல்லாது செய்து விட்டால், புரட்சியை தடுத்து விடலாம் என்ற இவர்களின் கனவு எவ்வளவு பேதமையானது? உண்மையில் தியாகிகள் சிந்திய குருதியிலிருந்து எண்ணற்ற புதிய புரட்சியாளர்கள் தோன்றி யிருக்கின்றனர். இனியும் தோன்றுவர் அத்தகைய புரட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் கௌடா முதல் லல்லு வரை, ஆண்டை முதல் அதிகாரி வரை பதில் கூறியே தீரவேண்டும்.

■ ஜே.ஆர்.சி



படிப்பகம்